


கம்பஹாவில் பிரசன்ன ரணதுங்கவும், நிமல் லான்சாவும் கீரியும் பாம்புமாக இருந்தார்கள். அரசியலினால் வந்த கோபம் தீராப்பகையாக இருந்தது.

ஆனால் இப்போது அவர்கள் இருவரும் மீண்டும் நண்பர்களாகிவிட்டனர். பிரதமர் ரணில் இந்த இருவரையும் கடந்தவாரம் அழைத்து இருவரையும் மீண்டும் நண்பர்களாக்கிவிட்டுள்ளார். அரசியலில் அதுவும் ஒரே மாவட்டத்தில் இருந்துகொண்டு பகையாளிகளாக இருக்காதீர்கள் என்று கூறினாராம் ரணில்.


Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 539 சுபகிருது வருடம், வைகாசி மாதம் 26ஆம் திகதி வியாழக்கிழமை (09.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹஃதா - 08, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## கமெண்ட் கந்தர்..



ராஜபக்ஷமார் பதவி விலகுறாங்கள் எண்டா ஏதோ வில்லங்கம்தான் அதுக்குள்ளே இருக்கும்... மலிஞ்சா சந்தைக்கு வரும்தானே.. பொறுத்துப் பார்ப்பம்..

# பெசில் இராஜினாமா!

## ஆளுங்கட்சியில் மேலும் பலர் வெளியேறும் சாத்தியம்



யோ.தர்மராஜ்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான பெசில் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக நம்பகரமான உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்தன.

பதவி விலகும் தீர்மானத்தை இன்று விசேட ஊடக சந்திப்பொன்றை நடத்தி நாட்டுக்கு அறிவிக்கவுள்ளதாகவும் அத்தகவல்கள் தெரிவித்தன.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பெசில் ராஜபக்ஷவின் கொள்கைகளும் காரணம் என முழு நாடும் குற்றஞ்சாட்டிய நிலையில், நிதியமைச்சிலிருந்தும் வெளியேறி சாதாரண எம்.பியாக இருந்து வருகின்றார்.

02 பக்கம்

# பொருளாதார நெருக்கடிகளுக்கு ஜனாதிபதியின் முடிவே காரணம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



யோ.தர்மராஜ்

இரசாயன உரங்களை தடைசெய்ய வேண்டும் என ஒரே இரவில் ஜனாதிபதி எடுத்த முடிவால், அரிசி விலை கடுமையாக உயர்வதற்கு வழிவகுத்தது மட்டுமல்லாமல், உணவு நெருக்கடிக்கும் வழிவகுத்துள்ளதுடன், எதிர்காலத்தில் மக்கள் தொகையில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் போஷாக்கின்மையால் பாதிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் தெரிவித்தார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில்....

02 பக்கம்

# கோட்டாவின் கொள்கையால் இலங்கை லெபனானாகும்!

## மங்களவின் எதிர்வுகூறல் சரியென சுமந்திரன் எம்.பி. சபையில் சாட்டை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் நடைமுறைப்படுத்தப்பட்டால், இலங்கை லெபனானாக மாறும் என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர எதிர்வுகூறியிருந்ததாக, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய சுமந்திரன்...

02 பக்கம்

# நாடளாவிய பாடசாலைகளில் 3,570 ஆசிரியர் வெற்றிடங்கள்

## தமிழ்மொழி மூலமாக 117 பேர் தேவையென்கிறார் கல்வியமைச்சர் சுசில்

யோ.தர்மராஜ்

இலங்கையிலுள்ள 396 தேசிய பாடசாலைகளில் 117 தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதோடு, மொத்தமாக 3 ஆயிரத்து 570 ஆசிரியர்களுக்கான தேவைப்பாடு காணப்படுவதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் தெரிவித்தார். அத்தோடு, மாகாண பாடசாலைகளிலும் எண்ணாயிரம் வரை ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார்.

02 பக்கம்

# எதிர்க்கட்சியிலிருந்தபடி சுயாதீனமான செயற்பாடு!

## அமைச்சுப்பதவிகளை ஏற்கப்போவதில்லையென்கிறார் சம்பிக்க ரணவக்க



யோ.தர்மராஜ்

ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய உறுப்பினரான முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, நாடாளுமன்றத்தில் சுயாதீன எதிர்க்கட்சி உறுப்பினராக செயற்படவுள்ளதாக சபையில் நேற்று அறிவித்தார்.

02 பக்கம்

# அரச நிறுவனங்களில் கடதாசி பயன்பாட்டை குறைக்கத் திட்டம்

அரச நிறுவனங்களில் காகிதங்களுக்காக செலவிடப்படும் பணத்தை சேமிப்பதற்காக விசேட வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படுவதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், அரச நிறுவனங்களின் வருடாந்த மற்றும் அரையாண்டு அறிக்கைகளை நாடாளுமன்றம், கணக்காய்வாளர் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு...

02 பக்கம்

# சர்வகட்சி அரசாங்கத்திற்கு சுதந்திரக் கட்சி ஒத்துழைப்பு

## மைத்ரிபால சிறிசேன தெரிவிப்பு



சர்வகட்சி அரசாங்கத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்கும் என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டிருந்த போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடந்த 03 மாதங்களுக்கு முன்பிருந்தே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பது குறித்து...

02 பக்கம்

# சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளருடன் ரணில் பேச்சு

பிரதமர் ரணில் விக்ரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவுடன் நேற்று முன்தினம் தொலைபேசியில் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.



02 பக்கம்

# மின்கட்டணத்தை அதிகரிக்கும் யோசனையை அமைச்சரவைக்கு கொண்டுசெல்லமாட்டேன்!

## திட்டவட்டமாக கூறினார் மின்சக்தி அமைச்சர் காஞ்சன



யோ.தர்மராஜ்

நாட்டில் மின் உற்பத்தி செலவு வீதம் 756 பில்லியன் ரூபாவாக இருக்கும்போது, எங்களுக்கு 250 பில்லியன் ரூபா மட்டுமே கிடைப்பதாகக்கூறி, மின்கட்டணத்தை 300 வீதத்தால் அதிகரிப்பதற்கு மின்சார சபை கோரிக்கை விடுத்தது. அதிகாரிகளின் சம்பள அதிகரிப்பையும் மின் உற்பத்தி செலவையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக,...

02 பக்கம்

# இலங்கையிலிருந்து ஹஜ்ஜாஜிகளை அனுப்பும் நடைமுறையில் மாற்றம்



புனித ஹஜ் கடமைக்காக இம்முறை ஹஜ்ஜாஜிகளை அனுப்புவதற்கு மீண்டும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் டொலர் பிரச்சினை காரணமாக இம்முறை ஹஜ் கடமைகளுக்கு இலங்கையில் இருந்து ஹஜ்ஜாஜிகளை அனுப்பாமலிருக்க அண்மையில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் அந்த தீர்மானம் மாற்றப்பட்டு, மீண்டும்...

02 பக்கம்

# பாரதமே உதவுகிறது; அதைக் கெடுக்காதீர்!

## நாடாளுமன்றத்தில் ரணில் வேண்டுகோள்

யோ.தர்மராஜ்

நாட்டுக்கு தேவையான எரிபொருள் மற்றும் நிலக்கரியை கொள்வனவு செய்ய இந்தியா மாத்திரமே நிதியுதவி செய்கின்றது. வேறு எந்த நாடுகளும் இவற்றுக்கு நிதியுதவிகளை வழங்காது.

எங்களுக்கு எரிபொருள் வழங்குவதால் சில நாடுகள் இந்தியாவிற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்ற சபையில் நேற்று தெரிவித்தார்.

02 பக்கம்

# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைதுசெய்ய பிடியாணை



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 09ஆம் திகதி 'கோட்டா கோ கம' மற்றும் 'மைனா கோ கம' ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் சந்தேகநபராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பெயரிடப்பட்டுள்ளார்.

02 பக்கம்

# இலங்கை – ஆஸி. அணிகளுக்கிடையிலான இரண்டாவது டி20 போட்டி நேற்று நிறைவு



சுற்றுலா அவுஸ்திரேலிய அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் இரண்டாவது போட்டி நேற்றிரவு கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமானது.

முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிப்பெற்ற நிலையில், நேற்று இரண்டாவது போட்டியில் இலங்கை அணி கட்டாய வெற்றியை நோக்கி களமிறங்கியது. ஆஸி. அணியின் வேகப்பந்துவீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் உபாதைக்குள்ளானதால் அவருக்கு மாற்று வீரராக ஜெய் ரிச்சர்ட்சன் களமிறங்கினார். இலங்கை அணி மாற்றமின்றி களமிறங்கியது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸி. அணி முதலில் களத்தடுப்பை தேர்வுசெய்ய, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி பத்திரிகை அச்சுக்கு செல்லும் வரையில் 10 ஓவர்கள் நிறைவில் இரு விக்கெட் இழப்புக்கு 63 ஓட்டங்களை பெற்றிருந்தது.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்

Sri Lanka Cricket

Dialog

## பொருளாதார...

நேற்று (08) ஆரம்பிக்கப்பட்ட சபை அமர்வில் கலந்துகொண்டு வாய்மூலமான கேள்வி நேரத்தில் கேள்விகளை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இதனை அறிவித்தார்.

இது குறித்து விளக்கமளித்து உரையாற்றுகையில்,

இதுவரை அரிசியில் தன்னிறைவு பெற்ற நம் நாடு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இரசாயன உரங்களை ஒரே இரவில் தடை செய்ய மேற்கொள்ளப்பட்ட முட்டாள்தனமான ஒரு முடிவால் அரிசி உற்பத்தி முற்றாக வீழ்ச்சியடைந்தது.

இந்த முடிவானது இன்று அரிசி விலை கடுமையாக உயர்வதற்கு வழிவகுத்தது மட்டுமல்லாமல், உணவு நெருக்கடிக்கும் வழிவகுத்துள்ளது. இது மாத்திரமன்றி எதிர்காலத்தில் மக்கள் தொகையில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் போஷாக்கின்மையால் பாதிக்கப்படலாம் என தகவல்கள் வெளிவந்துள்ளன. இன்று ஒவ்வொருவரும் இரண்டு வேளைக்கு மாத்திரம் உணவை மட்டுப்படுத்த வேண்டியிருக்கும் எனத் தற்போதைய பிரதமரும் கூறுகிறார்.

வேகமாக உயர்ந்து வரும் பொருட்களின் விலைகள் காரணமாக மனித உணவு வேளையில் புரதத்தின் அளவு படிப்படியாகக் குறைந்து வருகின்றது.

இதற்குப் பொறுப்பானவர்களும், பொறுப்புக்கூற வேண்டியவர்களும் தங்களுடைய முடிவு தவறானது என மக்களிடம் மன்னிப்புக் கேட்டாலும் கூட தவறைத் திருத்துவதற்கு போதுமானதல்ல.

தங்களுடைய வாழ்வாதாரமாக விவசாயம் மேற்கொண்டு வந்த மக்களுக்கு விவசாயம் செய்ய முடியாத நிலையில், பிற தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களைத் தங்களின் தேவைக்காக விவசாயம் செய்யச் சொல்லிக் கோருவதே தற்போதிருக்கும் அரசின் ஒரே தீர்வாகத் தெரிகின்றது. எது எவ்வாறாயினும், எதிர்வரும் காலங்களில் மக்களின் பட்டினியைப் போக்க உணவு விநியோக வலையமைப்பை வலுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதற்கு நாங்களும் முழு ஆதரவையும் வழங்குவோம்.

## பெசில்...

இந்த நிலையில், நிறைவேற்று அதிகாரத்தை குறைத்தல் மற்றும் இரட்டைக்குடியுரிமை கொண்டவர்களுக்கு நாடாளுமன்றத்தில் பதவி வகிக்க முடியாது என்ற யோசனையடங்கிய 21ஆவது திருத்தத்தால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக, 21ஆவது திருத்தத்தால் பெசில் ராஜபக்ஷவின் எம்.பி. பதவி பறிபோகும் ஆபத்துள்ள நிலையில், ஒருவேளை, 21ஆவது திருத்தம் குறித்து கடந்த 6ஆம் திகதி பிரதமர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு அழைப்புவிடுத்திருந்தபோதிலும், மிகக்குறைந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்களே வருகை தந்திருந்தனர்.

இதனால், தனக்கான ஆதரவு குறைந்துள்ளதாக எண்ணியும் பதவி விலகும் முடிவை எடுத்திருக்கலாம் எனக் கூறப்படுவதோடு, 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் அவமானத்துடன் பதவி விலகுவது பொருத்தமானதல்ல என அவருடைய குடும்பத்தார் தெரிவித்துள்ளதாகவும் அறிய முடிந்தது.

இதனால், நேற்று முக்கிய உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்துள்ள பெசில் ராஜபக்ஷ, தன்னுடைய தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவியை இன்று (09) இராஜினாமா செய்யும் எண்ணத்தில் இருப்பதாக அறியக் கிடைத்தது. அதனை விசேட ஊடக சந்திப்பொன்றை நடத்தி முழு நாட்டுக்கும் அறிவிக்கவுள்ளதாகவும் நம்பகரமான உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்தன.

பதவி விலகிய பின்னர் கட்சியை வழிநடத்தும் பணியில் முழுநேரமாக ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இவரின் வெற்றிடத்துக்கு பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேராவை கொண்டுவருவதற்கான சட்ட வழிமுறைகள் குறித்தும் தீவிரமாக ஆராயப்படுகின்றதாகவும் அறிய முடிந்தது.

ஒருவேளை, அவரை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் சாத்தியம் இருக்குமாயின் அவருக்கு வர்த்தக ஊக்குவிப்பு மற்றும் சர்வதேச முதலீடு என்ற அமைச்சுப் பதவி ஒன்றை வழங்குவதற்கும் ஆராயப்படுவதாக அறிய முடிந்தது. இதேவேளை, பெசில் ராஜபக்ஷவுடன் இணைந்து தேசியப் பட்டியல் உறுப்பினர்களான சாகர காரியவசம், கெட்கொட உள்ளிட்ட சிலரும் தங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாகவும் அறிய முடிந்தது.

## சர்வகட்சி...

இரண்டு தடவைகளில் கலந்துரையாடலில் ஈடுபட்டதாக மைத்ரிபால சிறிசேன கூறினார்.

சர்வதேச அமைப்புகளுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டதாகவும் சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபித்தால் சர்வதேச அமைப்புகள் உதவும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற வகையில், சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு தேவையான பூரண ஒத்துழைப்புகளை வழங்கத் தயாராக உள்ளதாக மைத்ரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

## அரச நிறுவனங்களில்...

மின்னிதழ் வடிவில் அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் மாயாதுன்னே தெரிவித்தார்.

அத்துடன், பல்வேறு படிவங்களை நிரப்புவதற்கு பதிலாக ஒரு படிவம் வழங்கப்பட்டு, வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடக வழிமுறைகளை பயன்படுத்தி உரிய தரப்பினருக்கு படிவங்களை அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஆண்டுதோறும் பல்வேறு படிவங்கள் மற்றும் அறிக்கைகளுக்கான காகிதத்திற்காக பெருந்தொகை செலவு ஏற்படுவதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

புதிய வேலைத்திட்டத்தின் கீழ், அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை சமூக ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் திரைகளில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். புதிய வேலைத்திட்டத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

## கோட்டாவின்...

இந்த கருத்தை கோடிட்டுக் காட்டினார்.

கோட்டாபயவின் வரி ஏற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டால், நாடு கிரிஸ் நாடு எதிர்கொண்ட வங்குரோத்து நிலைக்கு செல்லும் என்றும் மங்கள சமரவீர குறிப்பிட்டிருந்ததாக சுமந்திரன் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்தவர், நாட்டின் தலைமையில் இருந்து விலகவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றபோதும், அவர் தொடர்ந்தும் பதவியில் இருக்கிறார். நாட்டின் இன்றைய நிலைமைக்கு பொறுப்பேற்று பிரதமர் மற்றும் அமைச்சர்கள் விலகியபோது, அந்த அரசாங்கத்துக்கு பொறுப்பான தலைவரும் விலகவேண்டும் என்று சுமந்திரன் வலியுறுத்தினார்.

எனினும், அதனை செய்யாத ஜனாதிபதி, இடைக்கால நிவாரணத்தை பெறுவதற்காக, ஒரு ஆசனத்தைக் கொண்டிருந்த ரணில் விக்ரமசிங்கவை, பிரதமராக நியமித்துள்ளார் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

21ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முன்கொண்டு செல்லமுடியாத நிலையில் அமைச்சரவையும் தோல்வி கண்டுள்ளதாக தெரிவித்த சுமந்திரன், நாடாளுமன்றத்திலும் அரசாங்கத்தின் பல குழுக்கள் பிரிந்து செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

## பாரதமே உதவுகிறது...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (08) ஆரம்பிக்கப்பட்ட சபை அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல கேள்வி நேரத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை அறிவித்தார்.

இது குறித்து அவர் விளக்கமளித்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

நாடாளுமன்றத்திலுள்ள அனைவருக்கும் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளும் நோக்கமில்லை. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக நாங்கள் அனைவரும் இணைந்து நாடாளுமன்றத்தை ஒரு நிறுவனமாக பயன்படுத்த வேண்டும். அதன் பின்னர் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற முடியும்.

எங்களுக்கு தேவையான நிதி குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன். குறிப்பாக, சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டால் மாத்திரமே ஏனைய நாடுகள் எங்களுக்கு தேவையான நிதியுதவியை வழங்கும் என நான் அவர்களிடம் கூறினேன். அதற்கு நல்லதொரு பதிலை வழங்குவதாக எனக்கு உறுதியளித்துள்ளனர். குறிப்பாக, அடுத்த மாதத்திற்குள் இந்த நடவடிக்கைகளை நிறைவு செய்ய வேண்டும்.

நாங்கள் புதிதாக சிந்திக்காவிட்டால், நெருக்கடியிலிருந்து மீள முடியாது. எனவே, புதிதாக சிந்தித்து செயற்பட வேண்டும். நாட்டில் எரிபொருள் மற்றும் நிலக்கரி இல்லை. அவற்றை பெற்றுக்கொள்ள ஏனைய நாடுகள் நிதியுதவி செய்யாது. உரம், மருந்து மற்றும் உணவுக்காக நிதியுதவி செய்தாலும் எரிபொருள் மற்றும் நிலக்கரிக்கு உதவிகளை வழங்காது.

ஆனால், இந்தியா மாத்திரமே எரிபொருள் மற்றும் நிலக்கரிக்காக எங்களுக்கு கடன்களை வழங்குகின்றது. ஏற்கனவே வழங்கிய நிதியும் நிறைவடையும் தருவாயிலுள்ளது. அது முடிந்துவிட்டால் மீண்டும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

எங்களுக்கு எரிபொருள், மின்சாரம் அத்தியாவசியமானதாகவுள்ளது. சிறுவர்களுக்கும் எங்களுடைய குடும்பங்களுக்கும் இரவில் மின்சாரம் தேவை. இதனைக்கூறியே நாங்கள் கடன்களை கோருகின்றோம். பிரச்சினைக்கு தீர்வுக்கோரி பாதையில் இறங்கிப் போராடுங்கள். ஆனால், நாட்டை இருளில் தள்ள வேண்டாம். பின்னர் இந்தியா உதவி செய்யும் என பொறுப்புக்கூற முடியாது.

இந்தியாவிற்கும் எரிபொருள் தேவை. எங்களுக்கு எரிபொருள் வழங்குவதால் சில நாடுகள் இந்தியாவிற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றன. இவர்களுக்கு ஏன் வழங்குகின்றீர்கள் என கேட்பார்கள் - என்றார்.

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை...

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக்க உள்ளிட்ட 13 சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக அவர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினரான சனத் நிஷாந்த உள்ளிட்ட 04 சந்தேகநபர்களை எதிர்வரும் 15ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## மின்கட்டணத்தை...

மின்கட்டண அதிகரிப்பு யோசனையை நான் அமைச்சரவைக்கு கொண்டு செல்லவே மாட்டேன் என வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (08) ஆரம்பிக்கப்பட்ட சபை அமர்வில் கலந்துகொண்டு வாய்மூலமான கேள்விக்கான விடை நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் பதிலளிக்கையில்,

மின்சார சபை சட்டமூல திருத்தத்தினால் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்டத்தை விரைவுபடுத்தும் நடவடிக்கையை மாத்திரமே முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். எனினும், சட்டத்திருத்தம் குறித்த யோசனைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். மின்சார சபையிலுள்ள அனைத்து பொறியியலாளர்களும் இந்த சட்டமூலத்தை எதிர்க்கவில்லை. ஒரு சிலரே எதிர்க்கின்றனர்.

குறிப்பாக, கடந்த வாரத்தில் மின் கட்டணத்தை 300 வீதத்தால் அதிகரிக்குமாறு மின்சார சபை என்னிடம் கோரிக்கை விடுத்தது. மின்உற்பத்தி செலவு வீதம் 756 பில்லியன் ரூபாவாக இருக்கும் போது, எங்களுக்கு 250 பில்லியன் ரூபாவே கிடைக்கின்றது எனக்கூறி இந்த கோரிக்கையை முன்வைத்தனர். இந்த 500 பில்லியன் ரூபாவில் அதிகமானவை டீசல் மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ளவும் அதிகாரிகளுக்கான சம்பளத்துக்கான செலவுகளாகவும் காணப்படுகின்றது.

மூன்று வருடங்களுக்கு ஒருமுறை அதிகாரிகளின் சம்பளம் 25வீதத்தால் உயர்த்தப்படுகின்றது. அதிகரிக்கும் அதிகாரிகளின் சம்பளத்தை செலுத்துவதற்கான செலவை, மின் கட்டணத்தை அதிகரித்து மக்களிடமாக பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இடமளிக்க முடியாது. எனவே, மின் கட்டணத்தை அதிகரிக்கும் யோசனையை ஒருபோதும் அமைச்சரவைக்கு நான் கொண்டு செல்ல மாட்டேன்.

மின் உற்பத்திக்கான செலவுகளை குறைப்பதற்கு அதிகாரிகள் தயாராக வேண்டும். புதுப்பிக்கத்தக்க மின் சக்தி திட்டத்தை புறந்தள்ளிவிட்டு, தங்களுடைய சம்பளத்தை உயர்த்தி கொள்வதற்காக மின் கட்டண திருத்தத்தை மக்கள் மத்தியில் முன்வைப்பதற்கு முயற்சிகளை எடுத்தால், நான் அமைச்சராக இருக்கும் வரை அதற்கு இடமளிக்கமாட்டேன்.

நாட்டில் டீசல் மின்உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு மின் அளவுக்கும் அதிக பணம் செலுத்தப்படுகின்றது. அதன்படி, லக்விஜய மின்உற்பத்தி நிலையம் 41.80 ரூபா, களனி திஸ்ஸ நிலையம் 84.80 ரூபா, சப்புகஸ்கந்த பி நிலையம் 61.56 ரூபா, சப்புகஸ்கந்த ஏ நிலையம் 66.42 ரூபா, வடக்கு ஜனனி நிலையம் 65.52 ரூபா, வெஸ்கோஸ் நிலையம் 68.20 ரூபா, களனி திஸ்ஸ மற்றொரு பிரிவு 98.40 ரூபா, களனி திஸ்ஸ ஜிடி7 நிலையம் 137.08 மற்றும் களனி திஸ்ஸ பிரேம் விஜிடி நிலையம் 182.80 ரூபா வரை ஒரு அலகுக்காக செலவாகின்றது.

ஆனால், புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி திட்டத்தில் ஒரு அலகுக்காக 16.80 ரூபாவும் சூரியசக்தி மின்திட்டத்தில் ஒரு அலகுக்கு 22.50 ரூபாவும் செலவாகின்றது. இவற்றையா மக்களுக்கு வழங்க வேண்டாம் எனக் கூறுகின்றீர்கள். எனவே, புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்டத்தை தடுப்பதற்கு யாரும் முயற்சிக்க வேண்டாம் - என்றார்.

## சர்வதேச நாணய...

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மட்டக் குழுவை விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறும் இதன்போது அதிகாரிகள் மட்டத்திலான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முடியும் எனவும் பிரதமர் இதன்போது கூறியுள்ளார்.

இந்த கடினமான சூழலில், இலங்கைக்கு உதவுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் விருப்பம் தெரிவித்ததாக பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## இலங்கையிலிருந்து...

ஹஜ்ஜாஜிகளை அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தெரிவித்தது.

சவூதி அரசாங்கத்தில் இருந்து இம்முறை 1,585 பேருக்கு புனித ஹஜ் கடமைக்கு செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இதற்காக ஒவ்வொரு ஹாஜிகளும் 1,500 டொலரை குறிப்பிட்ட ஒரு கணக்கிற்கு வெளிநாட்டில் இருந்து கொண்டுவர வேண்டும் எனவும் அதன் பின்னர் மத்திய வங்கியின் பொறிமுறையூடாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்ராஹிம் அன்ஸார் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு கணக்குகள் மூலம் பணத்தை பரிமாற்ற முடியாது எனவும் வெளிநாடுகளில் இருந்து டொலர் வைப்பில் இடப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

டொலரை அவர்களுக்கு நேரடியாக கொண்டுவர முடியும் எனவும் இல்லாவிட்டால் அவர்கள் பயணிக்கும் முகவர்கள் ஊடாக கொண்டுவர முடியும் எனவும் அவர் கூறினார்.

இந்த நடைமுறை மூலம் முதலில் விண்ணப்பிப்போருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் வாய்ப்பு வழங்கப்படும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டது.

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

## எதிர்க்கட்சியிலிருந்தபடி...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (08) ஆரம்பிக்கப்பட்ட சபை அமர்வில் கலந்துகொண்டு வாய்மூலமான கேள்விக்கான நேரத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை அறிவித்தார்.

இது குறித்து விளக்கமளித்து உரையாற்றுகையில்,

இதுவரை கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட நான், இன்று (நேற்று) முதல் சுயாதீன எதிர்க்கட்சி உறுப்பினராக செயற்படுவதாக சபைக்கு தெரியப்படுத்துகின்றேன்.

இதனை, சில தினங்களுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன். 2012 மார்ச் 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தோம்.

அந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களுக்கு அமையவே இவ்வாறு சுயாதீனமாக செயற்படவுள்ளேன் என்பதையும் குறித்த கடிதத்தில் தெரிவித்துள்ளேன். நான் எடுத்த இந்த முடிவானது தனிப்பட்ட கோபத்தினாலோ அல்லது யாரிடமும் உள்ள வெறுப்பினாலோ அல்ல. நான் எப்போதும் நம்பிக்கைக் கொள்ளும் கொள்கை மற்றும் மனச்சாட்சிக்கு அமையே இந்த முடிவை எடுத்தேன்.

தற்போது, நாடாளுமன்றத்திலுள்ள ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் முன்பை விட மிகவும் பொறுப்புடன் செயல்பட வேண்டியுள்ளது. இந்த சுயாதீன முடிவும் அதற்கு சிறந்த இடமாக இருக்கும் என்றே நான் கருதுகின்றேன்.

நான் அரசாங்கத்தில் அமைச்சராக வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த முடிவை எடுத்ததாக சில ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் செய்திகள் பரப்பப்படுகின்றன. ஆனால், அதில் உண்மையில்லை. இந்த அரசாங்கத்தில் எந்த அமைச்சுப் பதவிகளையும் வகிக்கும் எண்ணமும் எனக்கில்லை. இந்த அரசாங்கம் மாற்றமடைந்து, சர்வகட்சி அரசாங்கமாகவும் இடைக்கால அரசாங்கமாகவும் இருக்க வேண்டும் என்பதே என்னுடைய நிலைப்பாடாகும் - என்றார்.

## நாடளாவிய பாடசாலைகளில்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (08) ஆரம்பிக்கப்பட்ட சபை அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல கேள்விக்கான விடை நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் பதிலளிக்கையில்,

இலங்கையில் அமைக்கப்பட்ட தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை 374 ஆகும். இதேவேளை, ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 22 மாகாண பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அதன்படி, தேசிய பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை 396 ஆக காணப்படுகின்றது. இதேவேளை, மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 590 ஆக காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுகின்றது. சிங்கள மொழியில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 994ஆக காணப்படுகின்றது. ஆனால், தற்போது, 29 ஆயிரத்து 277 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். அதன்படி, மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 283 ஆக இருக்கின்றது.

தமிழ் மொழியில் அனுமதி வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 488 ஆக காணப்படுகின்றது. ஆனால், தற்போது 7 ஆயிரத்து 371 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். தேவைப்படும் ஆசிரியர்கள் எண்ணிக்கை 117 ஆக காணப்படுகின்றது.

அதேபோன்று, ஆங்கில மொழியில் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 602 ஆக காணப்படுகின்றது. ஆனால், தற்போது 2 ஆயிரத்து 812 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். அதன்படி, மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 210 ஆக இருக்கின்றது.

அதன்படி, தேசிய பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 38 ஆயிரத்து 84ஆக காணப்படும் போது, தற்போது 39 ஆயிரத்து 460 ஆக காணப்படுகின்றன. மேலதிகமாக ஆயிரத்து 493 ஆக காணப்படுகின்றபோது, ஆசிரியர்களின் வகைக்கு அமைய, 117 ஆசிரியர்கள் தேவையாகவுள்ளனர்.

ஆனால், தேசிய பாடசாலைக்கு தேவையாக இருக்கும் அனுமதி வழங்கப்பட்ட ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 43 ஆயிரத்து 30 ஆக இருக்கும் போது, தற்போது 39 ஆயிரத்து 460 ஆசிரியர்களே காணப்படுகின்றனர். அதன்படி, பற்றாக்குறையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 570ஆக காணப்படுகின்றது.

இதேவேளை, மாகாண பாடசாலைகளிலும் ஆசிரியர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றது. அதன்படி, தென் மாகாணத்தில் அனுமதி வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 22 ஆயிரத்து 104 ஆக காணப்படுகின்ற நிலையில், தற்போது 25 ஆயிரத்து 525 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 421 ஆக காணப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாணத்தில் அனுமதி வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 21 ஆயிரத்து 169 ஆக காணப்படுகின்ற நிலையில், தற்போது 21 ஆயிரத்து 393 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 224 ஆக காணப்படுகின்றது.

மத்திய மாகாணத்தில் அனுமதி வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 714 ஆக காணப்படுகின்ற நிலையில், தற்போது 27 ஆயிரத்து 828 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 114 ஆக காணப்படுகின்றது.

வடமேல் மாகாணத்தில் அனுமதி வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 470 ஆக காணப்படுகின்ற நிலையில், தற்போது 14 ஆயிரத்து 287 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். வகைகளின் அடிப்படையில் 200 ஆசிரியர்கள் மேலதிகமாக காணப்படுகின்றபோது, பற்றாக்குறையாக இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 183 ஆக காணப்படுகின்றது.

வட மாகாணத்தில் அனுமதி வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 18 ஆயிரத்து 286 ஆக காணப்படுகின்ற நிலையில், தற்போது 16 ஆயிரத்து 726 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். பற்றாக்குறையாக ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 560 ஆக காணப்படுகின்றனர்.

மேல் மாகாணத்தில் அனுமதி வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 147 ஆக காணப்படுகின்ற நிலையில், தற்போது 23 ஆயிரத்து 959 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். பற்றாக்குறையாக இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 188 ஆக காணப்படுகின்றது.

ஊவா மாகாணத்தில் அனுமதி வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 17 ஆயிரத்து 668 ஆக காணப்படுகின்ற நிலையில், தற்போது 16 ஆயிரத்து 768 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். பற்றாக்குறையாக இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 900 ஆக காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் அனுமதி வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 21 ஆயிரத்து 261 ஆக காணப்படுகின்ற நிலையில், தற்போது 18 ஆயிரத்து 643 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். பற்றாக்குறையாக இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 618 ஆக காணப்படுகின்றது. அதன்படி, மாகாண பாடசாலைகளுக்கு 8 ஆயிரம் வரையான ஆசிரியர்களின் தேவைப்பாடு இருக்கின்றது – என்ற தகவலை வெளியிட்டார்.

# ரஷ்ய தூதுவருடன் எதிர்க்கட்சித் தலைவர் சந்திப்பு



இலங்கைக்கான ரஷ்ய குடியரசின் தூதுவர் யூரி மேடேரி கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவரை நேற்றுமுன்தினம் சந்தித்துள்ளார். இதன்போது இருவரும் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடினர்.

குறிப்பாக, ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதோடு, அது தொடர்பான ஒரு நேர்மறையான நிலைப்பாட்டை இதன்போது உருவாக்கவும் முடிந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவிவரும் நீண்டகால இருதரப்பு உறவுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதோடு, தற்போது இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உதவும் முகமாக ரஷ்ய ஆதரவின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

# பறிக்கப்பட்ட அதிகாரங்களை புதிய அரசியல் திருத்தம் ஊடாக கொடுக்க வேண்டும்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை



(யாழ். செய்தியாளர்)

நாடாளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி களிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை புதிய அரசியல் திருத்தம் ஊடாக கொடுக்க வேண்டும். இதுவே நாட்டை பொருளாதார ரீதியிலும் ஜனநாயக ரீதியிலும் முன்னேற்ற பயன்படுமென ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின ருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தற்போது 21ஆவது திருத்தம் தொடர்பில் பேசப்படுகின்றது. இந்த 21ஆவது திருத்தம் என்பது 19ஆம் திருத்தத்தின் ஒத்த ஒன்றே. ஆனால், அதனை முழுமையாக 19ஆம் திருத்தத் தின் வடிவம் எனக் கூறமுடியாது. 19ஆவது திருத்தத்திலுள்ள பல விடயங்கள் 21ஆவது திருத்தத்தில் இல்லை.

19ஆம் திருத்தச் சட்டத்தை கொண்டுவருவதன் ஊடாக மீளவும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரங் களை கொடுக்க முடியும் என்பது மாத்திரமல்ல, பல விடயங்களை நடைமுறைப்படுத்தலாம். நாடு பொருளாதார ரீதியாக பலமடைய வேண்டுமாக இருந்தால் மாகாணங்கள் விருத்தியடைய வேண்டும்.

மாகாண சபை ஒழுங்காக இயங்கவில்லை, மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை மாகாண சபை சரியாகச் செலவு செய்யவில்லையென மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இதைப் பற்றி பேச மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு என்ன யோக்கியதை இருக்கிறது. நாட்டை மிக மோசமான பாதையில் கொண்டுசெல்ல அனைத்து விஷயங்களையும் செய்துவிட்டு ஏனையவர்களுக்கு ஆட்சியதிகாரம் தெரியாது எனக் கூற எந்த யோக்கியதையும் கிடையாது.

உலகில் அதிகளவு எண்ணிக்கையில் இராணுவத் தினரை வைத்திருக்கக்கூடிய நாடுகளில் 14 ஆவது இடத்தில் இலங்கை இருக்கிறது. இந்த பெரும்படை தேவைதானா? இதற்கு சிங்கள தரப்பினர் யாருமே வாய் திறந்து பேசவில்லை, இந்த நாட்டின் வருமானத்தில் கால் பங்கை விழுங்கும் இந்தப் படையினரை யாருக்கு எதிராக போராட வைத்துள்ளீர்கள். அரசாங்கமே நாட்டை இந்த நிலைமைக்கு கொண்டுவரக் காரணம். பெருமளவு இராணுவத்தினரை வைத்திருக்கக்கூடிய அவசியம் இல்லை.

இராணுவத்தைப் படிப்படியாக குறைப்பதற்கு ஏதாவது வழிமுறையை வைத்திருக்கின்றீர்களா? தற்போதுள்ள இராணுவம் என்ன செய்கிறது? முன்பள்ளி நடத்துவது, தமிழ் மக்களின் விவசாய நிலங்களைப் பறிமுதல் செய்து அங்கு விவசாயம் செய்வது, தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பௌத்த விகாரைகளை கட்டுவதையே இராணுவத்தினர் செய்கின்றனர்.

கோட்டா கமவில் போராடக்கூடிய இளைஞர் கள், எதிர்க்கட்சிகள் இடதுசாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இதில் கவனம் செலுத்தாவிட்டால் மீண்டும் தவறுகளைச் செய்யவேண்டியே வரும்.

கடந்த காலத்தில் இருந்த அரசாங்கத்தின் தவறான முடிவுகளும் தவறான கொள்கைகளுமே நாட்டை இந்தளவுக்கு கொண்டு வந்துள்ளன என பிரதமர் கூறுகிறார். நான் பிரதமரிடம் கேட்கிறேன்.

நீங்கள் திருந்தி விட்டீர்களா? வரலாற்றினை கற்றுள்ளீர்களா? கற்றுக்கொள்ளாவிட்டால் மீண்டும் மீண்டும் இந்த தவறை விடப் போகிறீர்களா?

பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்டபோது நூற்றுக்கணக்கான பரல் எரிவாயு மீட்கப்பட்டது.

பொதுமக்களுக்கு அமைச்சர்கள் பொருட்களை பதுக்கவேண்டாமென ஆலோசனை சொல்கின்றார்களே தவிர, தாங்கள் அதனை பின்பற்றுவதாக தெரியவில்லை

21ஆவது திருத்தம் மூலம் நாடாளுமன்றிலிருந்து பறித்த அதிகாரத்தையும் மாகாணங்களிடமிருந்து பறித்த அதிகாரங்களையும் உள்ளூராட்சி சபையிலிருந்து பறித்த அதிகாரத்தையும் கொடுக்க வேண்டும். இது எங்களுக்கு மாத்திரம் உரித்தானது அல்ல. சிங்கள உள்ளூராட்சி சபைகளும் சிங்கள மாகாண சபைகளும் இதன்மூலம் பயன்பெறும். இன்றைய மோசமான பொருளாதாரச் சூழலில் இது நிச்சயம் பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நடத்துவதற்கு காரியத்தை கொடுக்கும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, முஸ்லிம் கட்சிகள், மலையகக் கட்சிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி செயற்பட வேண்டும் - என்றார்.

# மே 09இல் பொலிஸாரை தாக்கிய சந்தேக நபர் கைது

## அவர்களிடமிருந்து திருடிய துப்பாக்கியும் மீட்பு

மே மாதம் 9ஆம் திகதி பஞ்சிகாவத்தையில் பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரைத் தாக்கி உத்தியோகபூர்வ பொலிஸ் துப்பாக்கியைத் திருடிய குற்றச்சாட்டில் 18 வயது இளைஞன் மாளிகாவத்தை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரிடமிருந்து திருடப்பட்ட அரை தானியங்கி கைத்துப்பாக்கி, இரண்டு மெகசின்கள் மற்றும் 20 தோட்டாக்கள் சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற அமைதி யின்மையின்போது கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் உள்ளிட்ட குழுவினர் பொலிஸ் வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

விசாரணைகளின் ஒரு பகுதியாக கொழும்பு 11இல் வசிக்கும் சந்தேக நபரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபர் மீது குற்றவியல் சட்டம், பொதுச் சொத்துகள் சட்டம் மற்றும் துப்பாக்கி கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் குற்றஞ்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

# தேனீ கொட்டி ஒருவர் மரணம்

## வாழைச்சேனையில் சம்பவம்

(கல்குடா நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி பகுதியில் தேனீ கொட்டிய நிலையில் முதியவர் ஒருவர் நேற்று (08) மரணித்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை உமர் வைத்தியர் வீதியைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையாக மீராலெப்பை அபூசாலி (74 வயது) என்பவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி சந்தை வழியாக தனது வீட்டுக்கு வரும் வழியில் தேன் கூடு கலைந்திருந்த நிலையில் தேனீகள் குறித்த நபரை தாக்கிய நிலையில், அவரை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபரின் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையிலிருந்து அவசர பிரிவு வாகனத்தின் ஊடாக உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



உத்தேச 21ஆம் திருத்தச் சட்டமூலம் தொடர்பில் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்களின் தலைவர்களை நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அமைச்சில் வைத்து நேற்று (08) கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

## மோதரை துப்பாக்கிப் பிரயோகம்:

# கொலைக்குப் பயன்படுத்திய மோட்டார்சைக்கிள் மீட்பு

மோதரை பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மோட்டார்சைக்கிள் ஒன்றை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, சுற்றிவளைப்பு நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டது.

மோதரை வீதி பகுதியில் நேற்று முன்தினம் (07) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த மோட்டார்சைக்கிள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மோதரை பொலிஸ் பிரிவில் கடந்த 06ஆம் திகதி இடம்பெற்ற கொலைச் சம்பவத்திற்காக குறித்த மோட்டார்சைக்கிள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேலதிக விசாரணைகளுக்காக மோட்டார் சைக்கிள் மோதரை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனினும், மோட்டார்சைக்கிளுடன் எந்தவொரு சந்தேக நபரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டின் நிவாரணப் பொதிகள் இரத்தினபுரி மாவட்டத்தில் விநியோகம்

(பலாங்கொடை செய்தியாளர்)



தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் இரத்தினபுரி மாவட்டத்தில் பல தோட்டங்களிலுள்ள மக்களுக்கு நேற்று வழங்கப்பட்டன.

பெல்மதுளை பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட அனைத்து தோட்டங்களிலும் உள்ள சுமார் மூவாயிரத்து 248 குடும்பங்களுக்கும் நிவாரணப் பொதிகளை வழங்குமாறு இரத்தினபுரி மாவட்ட அரசாங்க அதிபர் மாலனி லொகுபோத்தாகம பெல்மதுளை பிரதேச செயலாளருக்கு தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் பெல்மதுளை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பொறோனுவ தோட்டத்தில் 434 குடும்பங்களுக்கும் லெல்லோபிட்டிய தோட்டத்தில் 542 குடும்பங்களுக்கும் குட்டப்பிட்டிய தோட்டத்தில் 115 குடும்பங்களுக்கும் நேற்று நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

பெல்மடுளை பிரதேச செயலகப் பிரிவில் நேற்று மாத்திரம் சுமார் ஆயிரத்து 91 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

## அமைச்சர் ஹாபீஸ் நஸீரின் சொத்துகள் சேதமாக்கப்பட்ட சம்பவம்

# சந்தேகத்தில் கைதான 21 பேருக்கும் 21ஆம் திகதிவரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

ஏறாவூரில் அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் காரியாலயம், வீடு, உறவினரின் வீடு, ஹோட்டல், கடை தீவைப்பு மற்றும் ஆடைத்தொழிற்சாலை உடைத்து சேதப்படுத்திய சம்பவம் தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட 21 பேரையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவான் நேற்று புதன்கிழமை (08) உத்தரவிட்டார்.

ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் ஏறாவூர் பிரதான வீதியிலுள்ள காரியாலயம், வீடு, அவரது உறவினாரின் வீடு, ஹோட்டல், கடை என்பன கடந்த 10ஆம் திகதி இரவு தீக்கிரையாக்கப்பட்டதுடன் 3 ஆடைத் தொழிற்சாலையை முற்றுகையிட்டு சேதமாக்கினர்.

இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பாக மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவின் ஆலோசனைக்கமைய மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டுவந்த விசாரணையில் 16 வயதுடைய 2 சிறுவர்கள் உட்பட 24 பேரை இதுவரை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்

இவர்களில் 16 வயதுடைய இரு சிறுவர்கள் உட்பட 3 பேரை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 21 பேரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இவர்களுடைய வழக்கு விசாரணை நேற்று புதன்கிழமை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவான் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது இவர்களை எதிர்வரும் 21ஆம் திகதிவரை 14 நாட்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# கண்டியில் சில பகுதிகளுக்கு இன்று நீர்வெட்டு அமுல்

கண்டியின் பல பகுதிகளுக்கு இன்று 8 மணித்தியாலங்களுக்கு நீர் விநியோகம் தடைப் படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இன்று காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை கொண்டதெனிய, குளுகம்மன, நுகவெல, கஹவத்தை, ரஜபிஹில்ல சேவை நீர்த்தேக்கம், மெதவளை பழைய சேவை நீர்த்தேக்கம், மெதாவளை புதிய சேவை நீர்த்தேக்கம் மற்றும் கலகெதர ஆகிய பகுதிகளுக்கு நீர் விநியோகம் நிறுத்தப்பட வுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தின் யட்டிவாவெல பூஸ்டர் நீரேந்து நிலையத்தின் பராமரிப்புப் பணிகள் காரணமாக நீர் விநியோகம் இடைநிறுத்தப் படவுள்ளது.

# நுகர்வோர் அதிகாரசபையினரால் யாழில் விசேட சுற்றிவளைப்பு



(யாழ். செய்தியாளர்)

யாழ். மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட் களை விலை கூட்டி மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை விற்பனை செய்யாது சேமித்து வைத்திருத்தல் போன்ற குற்றச்சாட்டுகள் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினரால் நேற்று விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்புரைக்கமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித் தனர்.

மாவட்டத்தின் நுகர் வோர் அலுவல்கள் அதிகாரசபை இணைப்பாளர் விஜிதரனின் நெறிப்படுத்தலில் யாழ். குடா நாட்டிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வர்த்தக நிலையங்கள் சோதனையிடப்பட்டதோடு எரி பொருள் விற்பனை நிலையங்களின் எரிபொருள் கொள்கலன்களும் கண்காணிக்கப்பட்டன.


## வலிபெல் வன் பிஎல்சி
## வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

வலிபெல் வன் பிஎல்சி இன் 12 ஆவது வருடாந்த பொதுக் கூட்டமானது, 2022 ஜூன் 30 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு, கொழும்பு பங்கு சந்தையினால் வெளியிடப்பட்ட விதிகளுக்கமைவாக மெய்நிகராக்கல் முறையில், கொழும்பு-03, ஆர்.ஏ.ஏ.த மெல் மாவத்தை 20 ஆம் இலக்கத்தில் நடைபெறுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இப்பொதுக்கூட்டத்தில், கம்பனி அமைப்பு அகவிதிகளில் கூறப்பட்டுள்ளவாறு வருடாந்த பொதுக் கூட்டமொன்றில் கட்டாயமாக ஆராயப்பட வேண்டிய பின்வரும் விடயங்கள் எடுத்துக் கொள்ளப்படும்.

(1) 2022 மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவுற்ற வருடத்திற்கான நிதியிடல் கூற்றுக்களுடன் கம்பனியின் மற்றும் அதனது துணைக்கம்பனிகளின் அலுவல்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கையை பெற்றுக் கொண்டு பரிசீலனை செய்தல்

(2) 70 வயதிற்கு மேற்பட்ட இரு பணிப்பாளர்கள் அடங்கலாக மீண்டும் தெரிவு செய்தல்/மீள்நியமனம் செய்தல்.

(3) கணக்காய்வாளர்களை மீள்நியமனம் செய்து அவர்களின் வேதனத்தை வரையறுத்தல்

(4) நன்கொடைகளை வழங்குவதற்காக பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கல்

2021/2022 ஆம் ஆண்டிற்கான அறிக்கையுடன் பதிலாள் பத்திரம், மெய்நிகராக்கல் கூட்டத்திற்கான பங்குபெறுனர்களை பதிவு செய்தல், நடைமுறை ஆகிய பணிப்புரைகளை குறிப்பிட்டும் பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை, பதிவு செய்தலுக்கான வழிகாட்டல்கள், பதிவு செய்தல் படிவம், வருடாந்த அறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதியொன்றிற்கான கோரிக்கை ஆகியன **www.vallibelone.com** என்ற கம்பனி இணையதளத்திலும் **https://www.cse.lk/hone/company-info/VONE0000/financial** என்ற கொழும்பு பங்கு பரிவர்த்தனை இணையதளத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கூட்டத்திற்கு சமுகமளிக்க இயலாத எந்தவொரு பங்குதாரரும் அவரின் (ஆண்/பெண்) சார்பாக பதிலாளர் ஒருவரை நியமிக்கும் தகுதியைப் பெற்றுக் கொள்வார். அவ்வாறான பதிலாள் கம்பனியின் பங்குதாரராக இருத்தல் ஆகாது.

வருடாந்த அறிக்கையின் அச்சடிக்கப்பட்ட பிரதிகளை பெற விரும்புவோர் பி.டபிள்யு. கோர்ப்பரேட் செக்கிரட்டேரியல் (பிவிடி) எல்டிடி இன் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். செயலாளர்களின் தொடர்பு விபரங்கள் பின்வருமாறு:

தொலைபேசி : 011 4640360-3, 076 8273001
தொலைநகல் : 011 2696717, 011 4740588
மின்னஞ்சல் : vone.pwcs@gmail.com

சபையின் கட்டளைப் பிரகாரம்:
வலிபெல் வன் பிஎல்சி
(கையொப்பமிட்டவர்) அனுஷா விஜேசேகர
பி.டபிள்யு கோர்ப்பரேட் செக்கிரட்டேரியல் (பிவிடி) எல்டிடி
செயலாளர்கள்
2022 ஜூன் 9 ஆம் திகதியன்று.

“நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். நாம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். அப்போதுதான் நாட்டை மீட்டெடுக்க முடியும். எமக்கு ஏற்பட்டுள்ளது பொருளாதார நெருக்கடி. ஒன்றிணைந்து செயற்பட்டால் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும்” என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்தியாவின் என்.டி.ரி.வி. தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்திருக்கிறார்.

அதேபோல நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதும் நாட்டின் பொருளாதாரம் குறித்து விசனப்பட்ட பிரதமர், மக்கள் இந்த நெருக்கடி நிலைமையில் பொறுமையாக இருக்கவேண்டுமென கேட்டுக்கொண்டார். ஏற்கனவே மக்கள் பொறுமையுடனேயே இருக்கின்றனர். அவர்களுக்கு வேறு வழியும் இல்லை.

இதற்கிடையில் அத்தியாவசியமான பொதுச் சேவைகளை இடையூறு இன்றிப் பேணுவதற்குத் தேவையான நிதியைத் திரட்டும் நோக்கில் பிரதமரினால் நாடாளுமன்றத்தில் குறைமதிப்பீட்டுப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

695 பில்லியன் ரூபா பெறுமதியான இந்தக் கூடுதல் மதிப்பீடு பொது நிதி தொடர்பான குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. துணை மதிப்பீட்டில் உள்ள 695 பில்லியன் ரூபாவில் 395 பில்லியன் மீள் செலவினமாகவும், 300 பில்லியன் மூலதனச் செலவினமாகவும் இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் அரச ஊழியர்களுக்கான 5,000 ரூபா கொடுப்பனவை மேற்கொண்டு வழங்குவதற்காக 87,000 மில்லியன் ரூபாவும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வழங்கப்படும். 5,000 ரூபா கொடுப்பனவுக்காக 40,000 மில்லியன் ரூபாவும் மேலதிக கொடுப்பனவுக்காக 15,000 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

695 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ள போதிலும், அத்தியாவசிய செலவுகள் தவிர்ந்த ஏனைய அனைத்து செலவுகளையும் குறைப்பதன் மூலம் 300 பில்லியனுக்கும் அதிகமான தொகையை இது சேமிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்திருக்கிறார். சுருக்கமான முறையில் சொல்வதானால் இலங்கை மக்கள் சுமக்கமுடியாத பெரும்பாரத்தை சுமக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தீர்க்கதரிசனப் பார்வையோ, பொருத்தமான பொருளாதாரத் தந்திரோபாயங்களோ, உருப்படியான திட்டங்களோ இல்லாமல், கடந்த காலங்களில் கண்மூடித்தனமான திசையில், ஊதாரித்தனமாக, நாட்டை

தமிழன் THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜூன் 09ஆம் திகதி, வியாழக்கிழமை

# எதையும் தாங்கும் இதயத்தை கொண்டிருக்கவேண்டிய மக்கள்!

வழிநடத்திய அரசாங்கங்கள் எல்லாம் சேர்ந்து இன்று நாட்டையும், மக்களையும் நடுவீதிக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றன.

இதிலிருந்து நாடு மீண்டெழுந்து, ஏனைய நாடுகள் போல் சுயாதிபத்திய நிலைக்குத் திரும்புவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத இக்கட்டான மலைப்பைத் தருகின்ற விவகாரமாகத் தோன்றுகின்றது

“கடன் வாங்கிக் கல்யாணம்” என்பது போன்று மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள், விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல், கண்மூடித்தனமாக சர்வதேசத்திடமும் கடன் வாங்கிக் குவித்து, ஊதாரித்தனமாக, டாம்பீகமாகச் செலவு பண்ணி, இன்று நாட்டை நட்டாற்றில், ஒட்டாண்டியாக நிறுத்திவிட்டன. உலக நாடுகளிடம் கடன் வாங்கிய நிதியில் அரசியல்வாதிகள், அதிகார வர்க்கம் அடித்தது போக, ஊதாரித்தனமாக நாசமாக்கியவை கழிய, எஞ்சி, நாட்டுக்குப் பயனாகக் கிடைத்தது சொற்பமே. அந்த அற்பத்தை அனுபவித்த குற்றத்துக்காக இப்போது நாமெல்லோரும் சேர்ந்து நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றோம்.

அதற்காக எமது சமகால வாழ்வில் நம்மைப் பிழிந்தெடுக்கப் போகின்றது அதிகாரத் தரப்பு. அதை எதிர்கொள்வதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.

இந்த நிலையிலிருந்து மீள்வதற்கு உடனடியாக அவசரத் திட்டங்களை பகீரதப்பிரயத்தனத்தோடு முன்னெடுக்க முயல்கின்றார் பிரதமர் ரணில்.

நாட்டின் வீண் செலவுத்தானங்களை உடன் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும். அபிவிருத்தித் திட்டங்களை உடன் நிறுத்த வேண்டும். அத்தியாவசிய, நிவாரணத் திட்டங்களை மட்டுமே முன்னெடுக்க வேண்டும். சர்வதேசத்துக்குக் கடன் செலுத்தும் கடப்பாடுகளை மறுசீரமைத்து, தவணைக் கொடுப்பனவுகளை இயன்றவரை பின்தள்ளிப் போட்டு, கடன் நெருக்கடியைத் தளர்த்த வேண்டும். உடனடியாக மிகக் குறுகிய காலக் கடன்களைத் தவிர்த்து, நீண்ட காலக் கடன்களை இலகு மீள் செலுத்துகை வசதிகளுடன் குறைந்த வட்டியில் பெற முயற்சிக்க வேண்டும். அப்படிக் கிடைக்கும் கடன்களை நாட்டுக்குப் பொருளாதார ரீதியிலான விருத்திக்கு உதவும் திட்டங்களுக்கு செலவிட வேண்டும்.

தவிரவும், இந்த முயற்சியில் மீண்டெழும் எத்தனத்தில் நாடும், முழு மக்களும் ஒன்றுபட்டுக் கடுமையாக உழைத்து, நிமிர முயற்சிக்க வேண்டும்.

அதற்காக மக்கள் கஷ்டப்பட்டேயாக வேண்டும். பாடுகளைச் சுமந்தாக வேண்டும். நெருக்கடிகளை, மட்டுப்படுத்தல்களை, கட்டுப்பாடுகளை, பற்றாக்குறைகளை, தட்டுப்பாடுகளை எதிர்கொண்டே நிமிர வேண்டும்.

அப்படி இந்த நெருக்கடிகளிலிருந்து மீளும் முயற்சியில் நாட்டு மக்களின் கஷ்டமான பங்களிப்பில் ஒன்றுதான் வரி அதிகரிப்புகள் மூலம் அறவிடப்படுகின்றது என்ற உண்மையை நாம் உணர்ந்தாக வேண்டும்.

பல்வேறு வரி உயர்வு அறிவிப்புகளை ரணிலின் அரசு வெளியிட்டு நடைமுறைப்படுத்தத் தொடங்கியிருக்கிறது. ஏற்கனவே கட்டுமட்டில்லாமல் நாளொரு விதமாக உயரும் விலைவாசியை இந்த வரி அதிகரிப்பு மேலும் தீவிரமடைய வைக்கும் என்பது உண்மைதான்.

இக்கட்டுக் காலத்தில் கஷ்டப்பட்டு, நெருக்கடிகளை எதிர் கொண்டால்தான் நிமிர முடியுமென்பது மக்களுக்குப் புரிகின்றது.

நேற்று முன்தினம் சர்வதேச நாணய நிதிய முகாமைத்துவப் பணிப்பாளருடன் தொலைபேசியில் பேச்சு நடத்தியுள்ளார் பிரதமர். இப்போதைய நெருக்கடிகளைத் தீர்க்க பிரதமருக்குக் கைகொடுக்காமல் அவரின் காலைவாரும் கைங்கரியமும் அரங்கேறாமல் இல்லை. ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் செய்த சீர்குலைவுகளை சீர்செய்ய பல காலம் பிடிக்கும். அதுவரை எதையும் தாங்கும் இதயம் மக்களுக்கு இருக்கவேண்டும். மக்களும் அதற்குப் பழக்கப்பட்டிருக்கிறார்களே.!

**உயிரைக் காக்கப் போராடிய மஹிந்த...**
**மூலைமுடுக்குகளில் படுத்துறங்கிய எம்.பிக்கள்...**
**பசியில் வாடிய மக்கள்...**
**சமைத்துப் பரிமாறிய ஷிரந்தி...**
**பேர வாவியில் சிக்கியவர்களுக்கு அலரிமாளிகையில் இருந்து உணவு...**
**மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகி இன்று ஒரு மாதமாகிறது.**
**அவரின் தற்போதைய நிலை என்ன...? என்ன செய்துகொண்டிருக்கிறார்...?**
**பிரதமர் பதவியில் அவர் விலகுவதற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டமைக்கு என்ன காரணம்...? யார் காரணம்...?**
**பதவி விலகிய அன்று அலரி மாளிகைக்குள் நடந்தது என்ன...?**
**இதுபோன்ற சுவாரஸ்யமான விடங்களை பகிரப்போகிறது இந்த ஆக்கம்.**



# அலரி மாளிகைக்குள் அன்றிரவு...!

### அண்ணனின் ஆதங்கம்

சமல் ராஜபக்ஷ...

மஹிந்தவின் மூத்த சகோதரர் கூறியதுபோல் மஹிந்தவின் இரண்டாவது ஜனாதிபதி பதவிக்காலம் நிறைவுற்றதும் அவர் அரசியலில் இருந்து ஒதுங்கி இருக்க வேண்டும்.

அப்படிச் செய்திருந்தால் அவர் அவரது கௌரவத்தை பாதுகாத்திருப்பார்.

போரை முடிவு செய்தார் என்ற கௌரவமான வரலாறு இருந்திருக்கும்.

அப்படி இல்லாது பதவி... பதவி என்று அலைந்ததால் இன்று அவரது நிலைமை தலைகீழ்.

பதவியைத் துறந்து... உயிருக்குப் பயந்து ஓட வேண்டிய நிலை.

பதுங்கி இருக்க வேண்டிய பரிதாபம்.

### பல தடவைகள் அவமானம்

2015 ஜனாதிபதி தேர்தலின் பின் இருந்து இன்றுவரை பல தடவைகள் இவர் அவமானப்பட்டுள்ளார்.

எல்லாம் பதவிக்காக...

2015 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மஹிந்த அதே ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார்.

முன்னாள் ஜனாதிபதிகள் யாரும் செய்யாத வேலை இது.

நாட்டின் அதி உயர் பதவியான ஜனாதிபதி பதவியை வகித்த யாரும் வெறும் எம்.பியாக இருக்கமாட்டார்கள். ஆனால், மஹிந்த அதற்கு விதிவிலக்கு.

அந்தத் தேர்தலில் வெற்றிபெற்று எம்.பியானார்.

பின்னர் அப்போதைய ஜனாதிபதி மைத்ரியின் கயிற்றை விழுங்கி ரணிலிடம் இருந்து பறிக்கப்பட்ட பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

வெறும் 52 நாட்களே பிரதமர்.

பின்னர் நீதிமன்றத் தீர்ப்பின்படி பதவி இழந்தார்.

மஹிந்தவின் இந்தப் பதவி ஆசை அப்போது கடுமையாக விமர்சிக்கப்பட்டது. அவமானப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து 2020 நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு பிரதமரானார்.

நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக அவரைப் பதவி விலகுமாறு பல பக்கங்களிலும் இருந்தும் அழுத்தங்கள்.

விலகவில்லை. அதை அவர் நிராகரித்தார். பதவி ஆசை விடவில்லை.

இறுதியில் அவர் எவ்வாறு பதவி விலகினார்...? நாடே அறிந்த விடயம்.

மஹிந்தவை நீக்குவதற்கான காரணம் என்ன...?

அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன...?

அவர் விலகிய அன்றைய தினம் அலரி மாளிகையில் நடந்தது என்ன...?

பார்ப்போம் விரிவாக...

### இருவரின் தேவை : மஹிந்த பலிக்கடா

வலுவடைந்தது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீதான எதிர்ப்பு. மிரிஹான சம்பவத்தோடு...

பதவி விலகினார்கள் அமைச்சர்கள்.

சுயாதீன அணியாகப் பிரிந்தன அரசின் பங்காளிக் கட்சிகள்.

எல்லோரும் பதவி விலக... மஹிந்த மட்டும் அப்படியே...

சுயாதீனக் குழுக்களிடம் இருந்து அழுத்தம்...

ஜனாதிபதியிடம் இருந்தும் அழுத்தம்...

அசைவதாக இல்லை மஹிந்த...

விலகமாட்டேன். முடிந்தால் விலக்கு.

சவால் விடுத்தார் ஜனாதிபதிக்கு...

விலக்க விரும்பவில்லை கோட்டா. அது குடும்பப் பிரச்சினை. விலகுவதற்கே அழுத்தம்.

மக்கள் விலகக் கோருவதோ ஜனாதிபதியை... ஆனால், ஜனாதிபதி விலகச் சொல்வதோ மஹிந்தவை...

காரணம்....?

இரண்டு.

ஒன்று தன் மீதான மக்களின் எதிர்ப்பை திசை திருப்புதல். அது ஜனாதிபதியின் தேவை.

அடுத்து ரணிலின் தேவை. அவர் பிரதமராகும் தேவை.

தற்போதைய பொருளாதாரப் பிரச்சினையில் இருந்து தன்னைப் பாதுகாக்கக்கூடிய சரியான பாதுகாவலன் ரணில்தான் எனக் கருதினார் ஜனாதிபதி.

அதனால் ரணில் பின்னால் இருந்து தள்ளிவிட... முன்னால் வந்து மஹிந்தவை விரட்டினார் ஜனாதிபதி.

### மகன்மாரின் ஊடாகத் தூது

ஜனாதிபதி மஹிந்தவுக்கு தொடர் தூது. பலரின் ஊடாக...

மஹிந்தவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ஷ - கடைசி மகன் ரோஹித் ராஜபக்ஷ இருவரையும் அழைத்தார் ஜனாதிபதி.

நிலைமையை விளக்கினார்.

அப்பாவை உடனடியாக விலகச் சொல்லுங்கள். அவர் இப்படி பிடிவாதமாக இருந்தால் அவருக்கு இப்போது இருக்கின்ற செல்வாக்கும் இல்லாமல் போய்விடும்.

இப்படிப் போனால் உங்களின், அதாவது நாமலின் அரசியல் எதிர்காலம்தான் பாதிக்கும் என்று எச்சரித்தார் ஜனாதிபதி.

நிலைமையை உணர்ந்த இருவரும் போய்ச் சொன்னார்கள் தந்தையிடம்.

விலகுங்கள். இப்போதைக்கு அதுதான் நல்லது.

நிதானமாகச் சிந்தித்தார் மஹிந்த.

ஒரு முடிவுக்கு வந்தார். நல்ல முடிவுதான் அது.

### ஜோன்சனின் கயிற்றை விழுங்கிய யோஷித்த

மஹிந்த விலகும் முடிவுக்கு வர மஹிந்தவின் இரண்டாவது மகன் யோஷித்த அதை எதிர்த்தார். விலக வேண்டாம் என்றார்.

அதற்குக் காரணம் ஜோன்சன் பெர்னாண்டோ, சனத் நிசாந்த, திஸ்ஸ குட்டியாரச்சி உள்ளிட்டவர்கள்.

யோஷித்தவை மூளைச் சலவை செய்தார்கள்.

உங்க அப்பா எதற்காக விலக வேண்டும்? அவர் விலக வேண்டும் என்று மக்கள் எங்காவது கூறுகிறீர்களா...? இல்லையே...

ஜனாதிபதியைத்தான் விலகச் சொல்கிறார்கள். Go Home Gota என்றே சொல்கிறார்கள். நாம் மஹிந்தவைப் பாதுகாப்போம் என்றார்கள்.

இவர்களின் கயிற்றை விழுங்கினார் யோஷித்த. மஹிந்தவின் பதவி விலகலை எதிர்க்கிறார்.

### அடுத்த பிரதமர் டலஸ் OR தினேஷ்...?

மஹிந்த விலக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் சுயாதீன குழுக்கள். அவர் விலகினால் யார் பிரதமர்.?

பிரேரித்தார்கள் ஒருவரை.

அவர்தான் டலஸ் அழகப்பெரும.

அவருக்கும் வந்துவிட்டது ஆசை. பிரதமராகும் ஆசை.

இறங்கினார் மஹிந்தவுக்கு எதிராக.

வெளிப்படையாகக் கூறினார். மஹிந்த விலக வேண்டும்.

இதற்கு எதிராக இன்னோர் அணி. மஹிந்த ஆதரவு அணி.

ஒருவேளை மஹிந்த விலகினால்...? டலஸ் பிரதமர் இல்லை.

தமது ஆதரவு-மஹிந்த விசுவாசி ஒருவரை நியமிக்க வேண்டும்.

அவர்களும் பிரேரித்தார்கள் ஒருவரை.

அவர்தான் தினேஷ் குணவர்தன...

### மஹிந்தவை குழப்பிய ஜோன்சன்

9 ஆம் திகதி விலகுதல். முடிவுக்கு வந்தார் மஹிந்த...

அதற்கு முன் மஹிந்தவை சந்தித்தார்கள் ஜோன்சன் குழுவினர்.

சேர் விலக வேண்டாம். நாங்கள் உங்களுக்கு ஆதரவாக 25 ஆயிரம் பேரை அலரி மாளிகைக்கு அழைத்து வருகிறோம்.

ஊர்வலமாகச் சென்று ஜனாதிபதிக்கு உங்களுக்கான ஆதரவைக் காட்டுவோம். உங்களை விலக்க வேண்டாம் என்று கூறுவோம்.

இப்போது இரண்டு மனம் மஹிந்தவுக்கு. என்ன செய்வது...?

சரி... வரட்டும்....

அந்த மக்கள் சந்திப்பின் பின் முடிவெடுப்போம்...

கிடப்பில் போட்டார் தீர்மானத்தை...9 ஆம் திகதி வரை..

### ஜோன்சனின் காலில் வீழ்ந்த எம்.பிக்கள்

தடபுடல் ஏற்பாடு. மக்களை அலரிமாளிகைக்கு அழைத்து வருவதற்கு...

அலரி மாளிகைக்கு மாத்திரம் அழைத்து வருவதென்றால் பரவாயில்லை. வன்முறைக்கும் அல்லவா ஏற்பாடு.

இந்தக் கூட்டத்தோடு.. கோட்டா கோ கம - மைனா கோ கம எல்லாவற்றையும் கிளியர் பண்ணிவிட வேண்டும்.

அதற்கான ஏற்பாடுகள் தீவிரம். அடியாட்கள் எல்லாம் உஷார்.

இதை அறிந்தார்கள் கோட்டா ஆதரவு எம்.பிக்கள்.

இது மிகப் பாரதூரமான முடிவு. நாடு இப்போது இருக்கும் நிலையில், இங்கு கை வைத்தால் நாட்டில் வன்முறை வெடிக்கும்.

அரசு மீது கோபம்கொண்டுள்ள மக்கள் அதற்கான சந்தர்ப்பதை எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

இதை உடன் நிறுத்த வேண்டும்.

கெஞ்சினர் ஜோன்சனிடம்...

இப்படி பஸ்களில் ஆட்களை அழைத்து வரவேண்டாம். பெரும் பிரச்சினை ஏற்படும். எங்களால் ஊருக்குச் செல்ல முடியாமல் போகும். மக்கள் எம்மைத் தாக்குவார்கள் என்றார்கள் அவர்கள்.

அதை நக்கலாகப் பார்த்தார் ஜோன்சன்.

உங்களது தலைவர் கோட்டாவுக்கு முதுகெலும்பு இல்லை. நான் ஒரு மணிநேரத்தில் காலிமுகத்திடலையும், மைனா கோகமவையும் கிளியர் பண்ணித் தாரேன். காலையில் அங்கு 150 பேர் மட்டுமே இருப்பார்கள் என்றார்.

அவ்வளவு நம்பிக்கை அவருக்கு. பின் விளைவு தெரியாமல்...

இதில் அவர் வெற்றிகண்டால்... அரசுக்குள் அவர்தான் கிங். பெரிய தலைகள் இன்னும் அவரை அரவணைத்துக்கொள்ளும்...

இந்த ஆசையோடுதான் இறங்கினார் களத்தில்...

### ஜனாதிபதியின் கவனத்துக்கு...

இது வேலைக்கு ஆகாது. தலைவர்தான் இதைத் தடுக்க வேண்டும். ஜனாதிபதியிடம் எத்திவைத்தார்கள் எம்.பிக்கள்.

அவரும் அஞ்சினார். பின்விளைவை உணர்ந்தார்.

உத்தரவு போட்டார். எவரையும் அழைத்து வரவேண்டாம் என்றார்.

மீறப்பட்டது உத்தரவு. திட்டமிட்டபடியே நிகழ்வு.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நக்கல் நமசிவாயம்

பெசில் பதவி விலகப் போகிறாராம்..! சரி, 21 ஆம் திருத்தம் நிறைவேறினா போகவேண்டித்தானே வரும்..! அதுக்குள்ள ஏன் இந்த பில்டப்..?!



## இன்றைய நாளில்...

- 1815 – வியன்னா மாநாடு முடிவடைந்தது. புதிய ஐரோப்பிய அரசியல் நிலப்படம் மாற்றமடைந்தது.
- 1815 – லக்ஸம்பர்க் பிரெஞ்சுப் பேரரசிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1900 – இந்திய தேசியவாதி பிர்சா முண்டா பிரித்தானிய சிறையில் வாந்திபேதியினால் இறந்தார்.
- 1903 – அநுராதபுரத்தில் இடம்பெற்ற கலவரத்தில் கத்தோலிக்க ஆலயம் ஒன்று பௌத்தர்களினால் சேதமாக்கப்பட்டு மதகுரு தாக்கப்பட்டார். 40 பேர் கைதுசெய்யப்பட்டனர்.
- 1923 – பல்கேரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.
- 1936 – யாழ்ப்பாண நகரசபைக் கட்டடத்தை இலங்கை மகாதேசாதிபதி சேர் ரெஜினால்ட் எட்வர்ட் ஸ்ரப்ஸ் திறந்து வைத்தார்.
- 1959 – முதலாவது அணுக்கரு ஆற்றல் ஏவுகணை நீர்மூழ்கியான ஜோர்ஜ் வொஷிங்டன் வெள்ளோட்டம் விடப்பட்டது.

## 08.06.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 143 3140 | 155 4187 |
| கனேடியன் டொலர் | 170 5058 | 183 4 21 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 3458 | 44 4 4 |
| யூரோ | 267 3016 | 282 4143 |
| ஜப்பான் யென் | 1 5465 | 1 66 |
| சிங்கப்பூர் டொலர் | 146 1185 | 156 8757 |
| ஸ்ரேலிங் பவுன் | 333 8721 | 351 6862 |
| சுவிஸ் பிராங் | 251 7872 | 268 526 |
| ஐ.அ.டொலர் | 244 5744 | 255 4651 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 843 8257 |
| குவைட் | குவைட் தினார் | 0,064 6743 |
| ஓமான் | ஓமான் றியால் | 824 008 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 5301 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 84 8650 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 070 |

## மாரவில, சிலாபம் பகுதிகளில்
# கடல்மார்க்கமாக வெளிநாடுகளுக்கு பயணிக்க முயற்சித்த 91 பேர் கடற்படையினரால் கைது





இலங்கை கடற்படையினர் மாரவில பகுதியில் மற்றும் மேற்கு கடற்பரப்பில் மேற்கொண்டுள்ள ரோந்து நடவடிக்கைகளின்போது கடல் வழியாக வெளிநாட்டுக்கு சட்டவிரோதமாக குடியேற முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் 91 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதன்படி, மேற்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட கடற்படைக் குழு ஒன்று மாரவில பொலிஸாருடன் இணைந்து நேற்றுமுன்தினம் காலை மாரவில பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அப்போது அப்பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்து இந்த நாட்டிலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் குடியேற தயாராகி வந்ததாக சந்தேகிக்கப்படுகின்ற நபர்கள் கைது செய்யப்பட்டனர். அங்கு 13 ஆண்கள், ஒரு சிறுவன் மற்றும் இந்த மோசடியில் ஈடுபட்டிருந்த ஒரு நபர் உட்பட 09 முதல் 58 வயதுக்குட்பட்ட பதினைந்து நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் வேன் ஒன்றும் கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், மேற்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட 4ஆவது படைப்பிரிவின் பி481 படகின் வீரர்கள் நேற்றுமுன்தினம் பிற்பகல் சிலாபம் கடற்கரையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகத்திற்கிடமான பலநாள் மீன்பிடிக் கப்பலை அவதானித்து ஆய்வு செய்தனர்.

அப்போது சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக வெளிநாட்டுக்கு குடியேற முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் 58 ஆண்கள், 05 பெண்கள், 07 குழந்தைகள் மற்றும் ஆட்கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள 06 நபர்கள் உட்பட 01 வயது முதல் 62 வயது வரையிலான 76 பேர் குறித்த படகுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாரவில விடுதியில் இருந்து கைது செய்யப்பட்ட நபர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை, முல்லைத்தீவு மற்றும் மாரவில ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளுக்காக மாரவில பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சிலாபம் கடல் பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், கல்பிட்டி, மாரவில, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கொழும்புத் துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான மற்றும் ஆபத்தான கடல் பயணங்களில் ஈடுபட தூண்டும் ஆட்கடத்தல்காரர்களின் வலையில் சிக்கி உயிரையும் உடமைகளையும் பணயம் வைத்து தீவில் இருந்து இடம்பெயர்வதை தவிர்க்குமாறு கடற்படை பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இவ்வாறான பயணங்களுக்கு பயன்படுத்தப் படும் பாழடைந்த மீன்பிடி கப்பல்கள் கடலுக்கு செல்லக்கூடியவை அல்ல என்பது அவதானிக் கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில், இந்த கப்பல்கள் மூலம் இடம்பெயர்வதற்கு முயற்சிப்பது உயிருக்கு அதிக ஆபத்தை ஏற்படுத்தும் என கடற்படையினர் பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

# திலிப் வெதஆராச்சியின் மகன் மருமகளுக்கு நீதிமன்றம் பிணை

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் வெதஆராச்சியின் மகன் மற்றும் மருமகள் ஆகியோருக்கு பிணை வழங்கி வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த இருவரும் கடந்த முதலாம் திகதி பாதுகாப்பற்ற முறையில் கெப்ரக வாகனத்தின் பின்பகுதியில் குளிர்சாதனப்பெட்டியை ஏற்றி தெற்கு அதிவேக வீதியில் பயணிப்பதற்கு முயற்சித்தனர்.

இதனை அவதானித்த போக்குவரத்து பொலிஸார் அவர்களை தடுத்துள்ள நிலையில், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தி சந்தேகநபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் நேற்று (08) வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே, அவர்களுக்கு இவ்வாறு பிணை வழங்குவதாக வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# மீனவர்களின் எரிபொருள் பிரச்சினையை தீர்க்க அமைச்சர் டக்ளஸ் முயற்சி

## கடலுணவு ஏற்றுமதியாளர்களுடன் விசேட சந்திப்பு



கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் எரிபொருள் நெருக்கடிகளை தீர்க்கும் நோக்கிலான கலந்துரையாடல், கடலுணவு ஏற்றுமதியாளர்களுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் நேற்று (08) நடைபெற்றது.

இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்திற்கு தேவையான எரிபொருளை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும், இதனால் ஆயிரக்கணக்கான படகுகள் தொழிலுக்குப் போக முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரினால் தெரிவிக்கப்பட்டது.

அதேபோன்று, நீர்வேளாண்மை உற்பத்தியில் ஈடுபடுகின்ற பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் எரிபொருள் பிரச்சினை தொடர்பாகவும் இதன்போது பிரஸ்தாபிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பங்குபற்றிய ஏற்றுமதியாளர்களினால் பல்வேறு விடயங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்,

சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்கு தவிர, நாடளாவிய ரீதியில் ஏனைய தொழில் முறைகளை பயன்படுத்துகின்ற கடற்றொழிலாளர்களும் எரிபொருள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற நிலையில், அனைவரையும் கருத்தில் கொண்டு எரிபொருள் பிரச்சினையை தீர்ப்பதற்கான மாற்றுப் பொறிமுறைகளை ஆராய வேண்டும்.

நாட்டில் இருக்கின்ற அனைத்து மீன்பிடிக் கலன்களும் தங்குதடையற்ற முறையில் தொடர்ச்சியாக தொழிலில் ஈடுபடுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

அதன் மூலம் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாப்பது மாத்திரமல்லாமல், பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்பதற்கான பங்களிப்பினையும் வழங்க முடியும்.

குறிப்பாக எரிபொருளுக்கு தேவையான டொலர்களை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் கடலுணவு ஏற்றுமதியாளர்களினால் ஒழுங்குபடுத்தப்படுமானால் சிறப்பானதாக இருக்கும் என எதிர்பார்க்கின்றோம்" என்று தெரிவித்தார்.

மேலும், குறித்த எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காண்பது தொடர்பான ஏற்றுமதியாளர்களின் ஆலோசனைகளை எழுத்து மூலம் வழங்குமாறு ஏற்றுமதியாளர்களை கேட்டுக்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இன்னும் இரண்டு வாரங்களுக்குள் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார்.

அந்தவகையில், ஏற்றுமதியில் ஈடுபடுகின்றவர்கள், ஏற்றுமதியாளர்களின் மூலம் இடம்பெற்ற கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

# மூத்த புகைப்படக் கலைஞர் சேன விதானகம காலமானார்



உலகப்புகழ்பெற்ற இலங்கையின் மூத்த புகைப்படக் கலைஞர் சேன விதானகம காலமானார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்தார். அப்போது, இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியை வரவேற்கும் மரியாதை அணிவகுப்பின் போது, கடற்படை அதிகாரியாக இருந்த விஜித ரோஹண விஜேமுனி துப்பாக்கியால் அவரை தாக்கினார்.

இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படம் உலகப் புகழ்பெற்றது. இது சேன விதானகமவால் எடுக்கப்பட்டது.

லேக் ஹவுஸில் புகைப்படக் கலைஞராகப் பணியாற்றியவர், பின்னர் பிரெஞ்சு செய்தி நிறுவனத்தில் உள்ளூர் புகைப்படக் கலைஞராக பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு அதிகரிப்பு




இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு ஐந்து மாதங்களில் முதல் தடவையாக அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு சொத்துகள் ஏப்ரல் மாதத்தில் ஆயிரத்து 812 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த நிலையில், மே மாதத்தில் ஆயிரத்து 920 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் ஆயிரத்து 602 மில்லியன் டொலர்களாக இருந்த வெளிநாட்டு நாணய கையிருப்பு மே மாதத்தில் ஆயிரத்து 805 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது.

இதேவேளை, தற்போது தங்கக்கையிருப்பு 28 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# ஆறு நாட்களின் பின்னர் நோர்வூட்டுக்கு மண்ணெண்ணெய்

## நீண்டவரிசையில் நின்ற மக்களுக்கு 300 ரூபாவுக்கு விநியோகம்





(எம். கிருஷ்ணா)

நோர்வூட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு ஆறு நாட்களுக்குப் பின்னர் நேற்று (08) மண்ணெண்ணெய் கொண்டுவரப்பட்டதையடுத்து, மக்கள் நீண்ட வரிசையில் நின்று அதனைப் பெற்றுக்கொண்டனர்.

மண்ணெண்ணெய் பெற்றுத்தருமாறுகோரி கடந்த இரு நாட்களுக்கு முன்னர் அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து 6ஆயிரத்து 400 லீற்றர் மண்ணெண்ணெய் நேற்று கொண்டுவரப்பட்டு ஒருவருக்கு தலா 300 ரூபாவுக்கு மாத்திரமே வழங்கப்பட்டது.

# மனிதநேய ஒன்றிணைவு அவசரகால நிவாரண செயற்றிட்டத்துடன் சிட்டி இணைகின்றது

## அதிகம் பாதிக்கப்பட்ட 200,000 குடும்பங்களுக்கு அவசர நிவாரணம்



தற்போது பொருளாதார நெருக்கடியால், கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு அவசரகால நிவாரணங்களை வழங்குவதை நோக்கமாக கொண்டு டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, CBL குழுமம், Sunshine Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC ஸ்ரீலங்கா ஆகியவற்றால் முன்னெடுக்கப்படுகின்ற மனிதநேய ஒன்றிணைவு திட்டத்துடன் சிட்டி இணைந்து கொண்டது.

நிறைவேற்றும் பங்குதாரர் சர்வோதய மற்றும் பொறுப்புக்கூறல் பங்குதாரர் PwC ஸ்ரீலங்கா உள்ளிட்ட ஒத்த எண்ணம் கொண்ட பங்காளிகளுடன் கைகோர்த்து, டயலொக், MAS, Hemas, CBL, Sunshine மற்றும் சிட்டி மூலம் நிதியளிக்கப்படும் மனதநேய ஒன்றிணைவு முயற்சியானது, 200,000 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 25 மாவட்டங்களிலும் 50,000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இன்றுவரை அவசரகால நிவாரணம் வழங்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். மேலும், பனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை 60-90 நாட்களுக்கு இந்த "மனிதநேய ஒன்றிணைவு" நிவாரண வேலைத்திட்டமானது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்

சிட்டி இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் இலங்கை நாட்டுக்கான பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு. ரவின் பஸ்நாயக்க கருத்து தெரிவிக்கையில், தற்போதைய நிதி நெருக்கடியின் தாக்கம் நாடு முழுவதும் கடுமையாக உணரப்பட்டுள்ள நிலையில் போராட்டங்கள் முன்னெப்போதையும் விட அதிகமாகியுள்ள நிலையில் உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்து வரும் நிலையில், மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு உதவி என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக காணப்படுகின்றது. இதன் காரணமாகவே சிட்டி வங்கி மனிதாபிமான முயற்சியான 'மனிதநேய ஒன்றிணைவு' உடன் இணைந்து கொள்வதற்கு முடிவு செய்தது. நாங்கள் எங்கள் பொறுப்பை உணர்ந்து, நமது மக்களின் சுமையை குறைக்க ஒத்த எண்ணம் கொண்ட பெரு நிறுவனங்கள் இணைந்து செயல்பட வேண்டிய நேரம் இது என்று நம்புகிறோம். இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு, மிகவும் தேவையான மற்றும் சரியான நேரத்தில் முன்முயற்சியின் ஒரு பகுதியாக எங்களை அனுமதித்ததற்கும் எங்கள் பெரு நிறுவன பங்காளிகள் மற்றும் சர்வோதயாவுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

புதிய கூட்டாண்மை குறித்து தனது கருத்துக்களை வெளிப்படுத்திய டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இன் குழும தலைமை நிதி அதிகாரி Hong Zhou Wong "இந்த மனிதாபிமான முயற்சியில் எங்களுடன் இணைந்ததற்கு அனைத்து பங்குதாரர்களின் சார்பாக நான் சிட்டி க்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். தற்போதைய நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள 50,000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இன்றுவரை நாங்கள் அவசரகால நிவாரணங்களை வழங்கியுள்ளோம். நாங்கள் 200,000 குடும்பங்களுக்கு நிவாரங்களை வழங்குவதற்கான இலக்கினை கொண்டுள்ளோம். இந்த நோக்கத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு எங்களுடன் இணைந்துக்கொள்ளுமாறு ஒத்த எண்ணம் கொண்ட பெரு நிறுவனங்களுக்கு நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம். 17 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களை கொண்ட இலங்கையின் பரந்த வலையமைப்பாக எமது மக்களின் மன அழுத்தத்தை தணிக்க உதவுவதற்கு நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும், இந்த தேவையின் போது இலங்கை முழுவதிலும் உள்ள குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் பொறுப்பை நாங்கள் மேற்கொள்கின்றோம்.

அவசரகால நிவாரண விநியோக நடவடிக்கைகளை விரிவுபடுத்த "மனிதநேய ஒன்றிணைவு" அனைத்து பெரு நிறுவனங்களை இந்த முயற்சியில் இணைந்துக்கொள்ளுமாறு அழைக்கின்றது.

படத்தில் இடமிருந்து வலம்: சிட்டி இன் நிறுவன விவகாரங்களின் தலைவர் ஷனகா வடுகே, சிட்டி பேங்க் இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் இலங்கை நாட்டுக்கான பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரவின் பஸ்நாயக்க, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இன் குழும தலைமை நிதி அதிகாரி Hong Zhou Wong, சர்வோதய சிரமதான சங்கத்தின் திட்ட முகாமை பிரிவு இயக்குனர் முகமது நிஸ்வி

மனிதநேய ஒன்றிணைவு
Sarvodaya | Dialog | MAS | HEMAS
CBL | citi | sunshine

# யாழ்ப்பாணத்திற்கு செல்லும் ஒவ்வொரு ரயிலினாலும் அரசுக்கு ரூ.3 இலட்சம் நட்டம்

## போக்குவரத்து அமைச்சர் பந்துல நாடாளுமன்றத்தில் தகவல்



புகையிரதக் கட்டணத்தை பஸ் கட்டணத்தில் பாதியாகக் கொண்ட பொதுக் கொள்கையொன்றை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று (08) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவ்வாறான பொதுவான கொள்கை வகுக்கப்படாவிட்டால், சேவையில் ஈடுபடும் புகையிரதங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

டீசல் விலை உயர்வால் புகையிரத கட்டணமும் உயர்ந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

டீசல் விலை அதிகமாக இருப்பதால் புகையிரதத்தை இயக்குவதற்கான கட்டணமும் அதிகம். கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரை ஒரு புகையிரதத்தை இயக்குவதற்கு சுமார் 1.3 மில்லியன் ரூபா செலவாகும். அந்த புகையிரதத்தில் சுமார் 500 பயணிகள் பயணித்தாலும் 10 இலட்சம் ரூபாவே வருமானம் கிடைப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்படி, யாழ்ப்பாணம் செல்லும் ஒவ்வொரு புகையிரதத்தின் மூலமும் ரூ.3 இலட்சம் நட்டம் ஏற்படுகிறது என்றார்.

கொழும்பு மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலவத்த எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

# தமிழ் மக்களின் காணிகளை கோட்டாபய கடற்படை முகாம் கடற்படையினருக்கு அளவீடுசெய்து அபகரிக்க முயற்சி

## தடுத்து நிறுத்திய பொதுமக்கள்





(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு, வட்டுவாகல் பகுதியில் கோட்டாபய கடற்படை முகாம் அமைந்துள்ள தமிழ் மக்களுக்குரிய 617 ஏக்கர் காணிகளை அளவீடுசெய்து, கடற்படையினருக்கு வழங்கும் நில அளவீட்டுத் திணைக்களத்தினரின் முயற்சி நேற்று முன்தினம் (07) காணிகளுக்குரிய பொதுமக்களால் தடுத்துநிறுத்தப்பட்டது.

இதற்கு முன்னரும் இவ்வாறு குறித்த காணிகளை அளவீடுசெய்து கடற்படையினருக்கு வழங்கும் முயற்சியில் பல தடவைகள் நில அளவீட்டுத் திணைக்களத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பாக, காணி உரிமையாளர்களுக்கு காணி அளவீடு தொடர்பிலான அறிவித்தல்கள் வழங்கப்பட்டே அளவீட்டு முயற்சிகள் இவ்வாறு முன்னெடுக்கப்பட்டிருந்தன. இருப்பினும், காணிகளுக்குரிய பொதுமக்களால் அம்முயற்சிகள் தொடர்ச்சியாக தடுக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், இம்முறை தமக்கு காணி அளவீடு தொடர்பிலான எவ்வித அறிவித்தல்களும் வழங்காமல் நில அளவீட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக காணி உரிமையாளர்கள் பலரும் தெரிவிக்கின்றனர்.

அந்தவகையில், காணி அளவீட்டுக்கென வருகைதந்திருந்த நிலஅளவைத் திணைக்களத்தினரின் வாகனத்தை கோட்டாபய கடற்படை முகாம் பிரதான வாயிலுக்கு முன்பாக வழிமறித்த காணி உரிமையாளர்கள், நில அளவைத் திணைக்களத்தினரை அங்கிருந்து செல்லுமாறும் கேட்டுக்கொண்டனர்.

அத்தோடு, அறிவித்தலின்றி இவ்வாறு காணி அளவீடு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பிலும் காணி உரிமையாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

அப்போது நில அளவைத் திணைக்கள அதிகாரி நவஜீவன் பதிலளிக்கையில்,

காணிகளை கடற்படைக்கு வழங்க ஒப்புதல் வழங்கியதாக கூறப்படும், 14 பேருக்கு மாத்திரமே தம்மால் அறிவித்தல் வழங்கப்பட்டதாக



தெரிவித்தார்.

மேலும், அவ்வாறு நில அளவைத் திணைக்களத்தால் 14 பேரின் பெயர் விபரங்கள் நில அளவைத் திணைக்கள அதிகாரியால் அங்கு வாசிக்கப் பட்டது.

இருப்பினும், கடற்படைக்கு காணிகளை வழங்க ஒப்புதல் தெரிவித்ததாக நில அளவைத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்ட காணி உரிமையாளர்களில் முல்லைத்தீவைச் சேர்ந்த காணி உரிமையாளர்கள் எவரும் அங்கு வருகை தந்திருக்கவில்லை.

மாறாக, தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஆசிரி பெர்னாண்டோ, கிரிஸ்ரி பெர்னாண்டோ ஆகிய இருவரும் மற்றும் சீனப் பிரஜையான சாங் என்பவருமாக மூன்று பேர் மாத்திரமே அங்கு வருகைதந்திருந்தனர். இவ்வாறு வருகைதந்தவர்கள் காணிகள் அளவீடு செய்யப்படவேண்டுமென வலியுறுத்தியிருந்தனர்.

இதனால் முல்லைத்தீவைச் சேர்ந்த காணி உரிமையாளர்களுக்கும் அவ்வாறு வருகை தந்த தென்னிலங்கையர்கள் மற்றும் சீனப் பிரஜைக்குமிடையே வாக்குவாதங்களும் இடம்பெற்றிருந்தன.

தொடர்ந்து தமது காணிகளை அளவீடுசெய்து தம்மிடம் ஒப்படைக்கும்வரையில், கடற்படை யினருக்கு காணிகளை வழங்குவதற்காக அளவீடுசெய்வதற்கு தாம் அனுமதிக்கப்போவ தில்லை என காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

அத்தோடு தமது காணிகளை தம்மிடம் ஒப்படைக்குமாறும், அதுவரையில் எவ்வித அளவீடுகளுக்கும் தாம் அனுமதிக்கப்போவ தில்லை எனவும் குறிப்பிட்டு மகஜர் ஒன்றினையும் நில அளவைத் திணைக்கள அதிகாரியிடம் கையளித்திருந்தனர்.

தொடர்ந்து நில அளவைத் திணைக்களத்தினரை அங்கிருந்து வெளியேறுமாறு காணிகளுக்குரிய தமிழ் மக்கள் வலியுறுத்தியதற்கு அமைவாக நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து வெளியேறினர்.

இதனிடையே புதுக்குடியிருப்பு வீதியூடாக நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து வெளியேற முற்பட்டனர். எனினும், வேறு வாயிலூடாக கடற்படை முகாமிற்குள் நுளைந்து நில அளவீடுகளை முன்னெடுத்துவிடலாம் என்ற ஐயத்தில் புதுக்குடியிருப்பு வீதியூடாக நில அளவைத் திணைக்களத்தினர் செல்வதற்கு காணி உரிமையாளர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர்.

அப்போது பொலிஸாருக்கும் காணி உரிமையாளர்களான தமிழ் மக்களுக்குமிடையில் தள்ளுமுள்ளு இடம்பெற்றது. பின்னர் முல்லைத்தீவு வீதியூடாக நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து வெளியேறியி ருந்தனர்.

மேலும் அங்கு செய்தி சேகரிப்பில் ஈடுபட்டி ருந்த ஊடகவியலாளர்கள், பொலிஸார் மற்றும் கடற்படை, புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப் பட்டதுடன், தென்னிலங்கையிலிருந்து வருகைதந் தவர்களும் ஊடகவியலாளர்களை புகைப்படம் எடுத்து அச்சுறுத்தியிருந்தனர்.

அதேவேளை காணி உரிமையாளர்களுக்கு ஆதரவாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், க.தவராசா, வலிகாமம் வடக்கு காணி மீட்புக்குழுத் தலைவரும், பிரதேசசபை உறுப்பினருமான சஜீவன் ஆகியோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிள்ளையை பாடசாலைக்கு அழைத்துச் சென்ற தாயின் சங்கிலி அறுப்பு

## மீசாலையில் சம்பவம்

(யாழ். நிருபர்)

மோட்டார்சைக்கிளில் தனது பிள்ளையை பாடசாலைக்கு அழைத்துச்சென்ற தாயின் சங்கிலியை வழிப்பறிக் கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் மீசாலை - டச்சு வீதி ஊடாக தனது பிள்ளையை மோட்டார்சைக்கிளில் பாடசாலைக்கு தாய் அழைத்துச்சென்றவேளை, அவர்களை பின்தொடர்ந்து பிறிதொரு மோட்டார்சைக்கிளில் வந்த வழிப்பறி கொள்ளையர்கள் ஆள் நடமாட்டம் அற்ற பகுதியில் தாயின் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மானிப்பாயில் வீடுடைத்து இலத்திரனியல் உபகரணங்களைத் திருடிய இளைஞர் கைது

(யாழ். நிருபர்)

மானிப்பாயில் வீடுடைத்து இலத்திரனியல் உபகரணங்களைத் திருடிய இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் மானிப்பாய் முத்துத்தம்பி வீதியில் புதிதாக கட்டப்பட்ட வீடொன்றை உடைத்து அங்கிருந்த சலவை இயந்திரம், வளிச்சீராக்கி, சிசிரிவி கெமரா உள்ளிட்ட 6 இலட்சத்து 18 ஆயிரம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்கள் திருடப்பட்டன.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் மானிப்பாய் பொலிஸ் நிலைய உத்தியோகத்தரினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

மானிப்பாய் ரிசி ஒழுங்கையைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் திருட்டுப் போயிருந்த மின் உபகரணங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

# முருங்கன் ஆதார வைத்தியசாலையில் கண் சிகிச்சை கிளினிக் ஆரம்பம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வினோதன்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார், முருங்கன் ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (07) கண் சிகிச்சை கிளினிக் ஆரம்பிக்கப்பட்டுள்ளது – என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் பெருநிலப்பரப்பில் வாழும் மக்கள் கண் பரிசோதனை மற்றும் சிகிச்சைகளுக்காக தற்போதைய சூழ்நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தர பல்வேறு இடர்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக போக்குவரத்து, பொருளாதார சுமைகளையும், ஏனைய சிரமங்களையும் குறைக்கும் நோக்குடன் முருங்கன் ஆதார வைத்தியசாலையில் கண் சிகிச்சை கிளினிக் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதல்நிலை, இரண்டாம் நிலை



வைத்தியசாலைகளை அபிவிருத்திசெய்யும் பீ.எஸ்.எஸ்.பீ. செயற்றிட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட கண் சிகிச்சை உபகரணங்கள் முருங்கன் ஆதார வைத்தியசாலையில் நிறுவப்பட்டு குறித்த கிளினிக் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த கிளினிக் ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முருங்கன் ஆதார வைத்தியசாலையில் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விவசாயத்துக்காக காணிகளை ஆக்கிரமித்த கிராமவாசிகள்

## குயின்ஸ்டவுன் தோட்டத்தில் அமைதியின்மை



(பதுளை நிருபர்)

ஹாலி-எலை, குயின்ஸ்டவுன் பெருந்தோட் டத்தின் ஒரு பகுதியை, கிராமவாசிகள் ஆக்கிர மித்து தம்வசமாக்கிக் கொண்டதையடுத்து, தோட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

இச்சம்பவம் நேற்று(08) குயின்ஸ்டவுன் பெருந்தோட்டத்தின் கிராமத்தை அண்மித்த தோட்டக் காணியில் இடம்பெற்றுள்ளது.

ஹாலி- எலையில் குயின்ஸ்டவுன் பெருந் தோட்டத்தின் கிராமத்தை அண்மித்த தோட்டக் காணியை 70 குடும்பங்களைச் சார்ந்த கிராமவா சிகள் ஆக்கிரமித்து, தமக்குத்தாமே எல்லைகள் போட்டு பிரித்துக் கொண்டு செயற்பட்டனர். இதுகுறித்து குயின்ஸ்டவுன் பெருந்தோட்ட முகாமையாளர் ஹாலி-எலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றினை செய்துள்ளார். இம்முறைப்பாட்டையடுத்து, ஹாலி-எலைப் பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து, பெருந்தோட்டத்தை ஆக்கிரமித்தி ருந்த கிராமவாசிகளுடன் சுமுகப் பேச்சுவார்த் தைகளை மேற்கொண்டு, அங்கிருந்து தற்காலிகமாக அவர்களை வெளி யேறுமாறு கூறியதையடுத்து, ஆக்கிரமிப்பாளர்கள் பொலிஸார் வழங்கிய உறுதிமொழிக்கமைய, பெருந்தோட்டத்தை விட்டு வெளியேறினர்.

குறிப்பிட்ட பெருந்தோட்டக்காணி காடாக்கப்பட்டு வருவதினால், அக்காணியை விவசாயத்திற்கு பயன்ப டுத்துவதற்கும், வெற்றுக்காணிகளில் விவசாயத்தை மேற்கொள்ள அரசு விடுத்துள்ள கோரிக்கைக்கமையவுமே, தமக்குத்தாமே குறிப்பிட்ட காணியை பிரித்துக் கொண்டு செயல்பட ஆரம்பித்தோம். தோட்ட முகாமைத்துவம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிபந்த னைகளை முன்னிலைப்படுத்தி, அக்காணியில் விவசாயத்தை மேற்கொள்ள அனுமதியைப் பெற்றுத்தருமாறு, கிராமவாசிகள் பொலிஸாரிடம் கேட்டுக் கொண்டனர்.

பொலிஸாருக்கும் கிராமவாசிகளுக்குமிடையே ஏற்பட்ட சுமுகப் பேச்சுவார்த்தையின்போது, பொலிஸார் குறிப்பிட்ட தோட்ட முகாமையாளர், தோட்டத்தை பொறுப்பேற்ற கம்பனி முகாமைத்துவத்தினர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட குழுவினருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று கூறினர். இக்கூற்றினையடுத்து பெருந்தோட்டத்தை ஆக்கிரமித்த கிராமவாசிகள், தோட்டத்தை விட்டு தற்காலிகமாக வெளியேறினர்.

# பதுளையில் நிர்மாணிக்கப்படவிருந்த கலாசார மண்டபங்கள் அரசியல் சூழ்ச்சியினாலேயே அங்கு அமையவில்லை

## வடிவேல் சுரேஷ் எம்.பி. சபையில் தெரிவிப்பு

அரசியல் சூழ்ச்சியினாலும் அதிகாரிகளின் மிலேச்சத்தனமான செயற்பாடுகளினாலும் பதுளையில் நிர்மாணிக்கப்படவிருந்த 16 கலாசார மண்டபங்கள் மக்களை சென்றடையவில்லை என பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சபையில் நேற்று(08) தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் நிலையியல் கட்டளை சட்டத்தின்கீழ் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ் வேலைத்திட்டம் மலையக மக்களுக்கு சென்றடையாமல் இடைநடுவே நிறுத்தப்பட்டது. மேலும், இவ்வேலைத்திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இடஒதுக்கீடு இல்லாமல் எவ்வாறு அடிக்கல் நாட்ட முடியும் என்றும் அவர் சபையில் இதன்போது கேள்வி எழுப்பினார்.

2019ஆம் ஆண்டு பதுளையில் நிர்மாணிக்கப் படவிருந்த 16 கலாசார மண்டபங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு இடைநடுவே நிறுத்திவைக் கப்பட்டமைக்கான காரணம் என்ன என பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் வடிவேல் சுரேஷ் எம்.பி. கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார்.

இதன்போது இக் கேள்விக்கு பதிலளித்த நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இவ் வேலைத்திட்டம்



ஆரம்பிக்கப்பட்டபோதிலும் கூட உரிய இட ஒதுக்கீடு இல்லாமையினாலேயே இவ் வேலைத்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டது என தெரிவித்தார்.

இதற்கு மறுப்பு தெரிவிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 2019ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவின் காலப்பகுதியில் பதுளையில் 16 கலாசார மண்டபங்கள் அமைப்பதற்கு 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து அவ்வேலைத்திட்டத்திற்குரிய மதிப்பீட்டு அறிக்கை அரசாங்க உத்தியோகத்தர்களினால் தயார் செய்யப்பட்டு முற்பணமும் செலுத்தப்பட் டது. இவை அனைத்திற்குமான உரிய ஆவணங் கள் என்னிடம் உள்ளன.

இவ்வேலைத்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இட ஒதுக்கீடு இல்லாமல் எவ்வாறு அடிக்கல் நாட்ட முடியும்? அரசியல் சூழ்ச்சியினாலும் அதிகாரிகளின் மிலேச்சத்தனமான செயற்பாடுகளினாலுமே இவ் வேலைத்திட்டம் மலையக மக்களை சென்றடையாமல் இடைநடுவே நிறுத்தப்பட்டது.

மலையக மக்கள் தீவிரவாதிகள் அல்ல. தொடர்ந்தும் இந்த நாட்டுக்காக குறைந்த வருமானத்தைப் பெற்றுக்கொண்டு உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்தியாவிலிருந்து வரும் உதவிகளை மட்டும் பெறுவதற்கு இங்குள்ள அனைவரும் வரிசையில் காத்திருக்கிறார்கள். ஆனால், இந்தியாவிலிருந்து இலங்கை வந்து பல இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் முகம்கொடுத்துக் கொண்டிருக்கும் மலையக மக்களின் பிரச்சினைகளை பற்றி பேசுவதற்கோ சிந்திப்பதற்கோ சபையில் ஒருவரும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# மத்திய மாகாண அரச நிறுவனங்களில் உணவுப்பயிர் உற்பத்தி ஆரம்பித்துவைப்பு

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ், மத்திய மாகாண பெருவீதிகள் அபிவிருத்தி அமைச்சு வளாகத்தில் உணவுப்பயிர்கள் மற்றும் காய்கறி உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவின் எண்ணக்கருவின்படி மேற்படி விடயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எதிர்கால உணவு நெருக்கடிகளுக்கு மத்திய மாகாணத்தை தயார்படுத்தும் நடவடிக்கையாக இத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் மத்திய மாகாணத்திலுள்ள அனைத்து



அரச நிறுவனங்களும் இத்திட்டத்தில் இணைக்கப்படுவதாகவும் கண்டியில் அமைந்துள்ள மத்திய மாகாண ஆளுநர் காரியாலயம் அறிவித்துள்ளது.

# வெலிமடையில் மூன்று வர்த்தக நிலையங்கள் உடைத்து திருட்டு

(பதுளை நிருபர்)

வெலிமடை நகரில் ஒரே இரவில் மூன்று வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு, அங்குள்ள பொருட்கள் மற்றும் பணம் திருடப்பட்டிருப்பதாக, வெலிமடை பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிமடை நகரில் புடவை வர்த்தக நிலையமொன்றும், அத்தியாவசியப் பொருட்கள் விற்பனைசெய்யும் நிலையமொன்றும், மின்சார மற்றும் கட்டிட உபகரணங்கள் விற்பனை நிலையமொன்றுமே இவ்வாறு நேற்று முன்தினம் (07) இரவு உடைக்கப்பட்டு, பணம் மற்றும் பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இது குறித்து, வெலிமடை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். குறிப்பிட்ட திருட்டுகள் குறித்து தகவல்கள் கிடைத்துள்ளமையினால், விரைவில் திருடர்களை கைது செய்ய முடியுமென்றும் வெலிமடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.டபிள்யூ. ஹேரத் நம்பிக்கை தெரிவித்தார்.

# பெண்களுக்கு வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை விதைகள் வழங்கிவைப்பு

(கண்டி நிருபர்)

கண்டி அஸ்கிரிய கீழ்ப்பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கு வீட்டுத் தோட்டப்பயிர்ச் செய்கைக்குத் தேவையான விதைகள் கையளிக்கப்பட்டன.

உப உணவு உற்பத்தித் திட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் கண்டி மாநகர சபை ஒருங்கிணைப்பாளர் தீபனின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம்(07) வழங்கப்பட்டது.

இச்செயற்பாட்டின் மூலம் பெண்கள் தமது உணவுத் தேவையை தாமே பூர்த்தி செய்யக்கூடியதாக இருப்பதுடன் தத்தமது குடும்பப் பொருளாதாரத்திற்கு பங்களிப்பை செய்யக்கூடியதாகவும் இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

குறுங்கால வீட்டு தோட்டப்பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் தக்காளி, மிளகாய், முள்ளங்கி, கறி மிளகாய் போன்றவற்றின் விதைகளே இதன்போது வழங்கப்பட்டன.



# 16 ஆடுகளுடன் லுணுகலையில் ஒருவர் கைது

(பதுளை செய்தியாளர்)

பதுளை, லுணுகலை பகுதியிலிருந்து பிபிலை நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறியொன்றை பொலிஸார் இடைமறித்து சோதனைக்கு உட்படுத்தியபோது லொறியினுள் 16 ஆடுகள் இருந்துள்ளன. இதனையடுத்து மிருகவதைச் சட்டத்தின்கீழ், 32 வயதுடைய லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று (08) இடம்பெற்றுள்ளது.

இவர் லுணுகலை ஜனதாபுர பகுதியிலிருந்து பிபிலை நோக்கி ஆடுகளை கொண்டுசென்றதாகவும், அந்நபரிடம் ஆடுகளை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் இருந்தபோதிலும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆடுகளை விடவும் அளவுக்கு அதிகமான ஆடுகளை கொண்டுசென்றமையாலேயே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சிறுவர்கள் ஐவரில் ஒருவர் மந்தபோசணையால் பாதிப்பு

## வைத்தியர்கள் அதிர்ச்சித் தகவல்

(நமது நிருபர்)

நாட்டிலுள்ள சிறுவர்களில் ஐவரில் ஒருவர் மந்தபோசணையால் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து இந்த விடயம் தெரியவந்துள்ளதாக சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்களின் தொழிற்சங்கத் தலைவர், வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, உணவுக்கான தட்டுப்பாடு மற்றும் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக நிறையுணவை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இதன் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், சிறுவர்கள் மந்தபோசணையால் பாதிக்கப்படும்போது எதிர்வரும் இரு தசாப்தங்களில் தளர்வுற்ற இளைஞர் சமுதாயத்தையே காணக்கூடியதாக இருக்கும். இதனால் ஆரோக்கியமான இளைஞர் சமுதாயத்தை நாடு இழக்க நேரிடும். இது ஆபத்தான சூழ்நிலையாகும்.

கிராமப்புறத்தில் உள்ளோர், நடுத்தர வர்க்கத்தினர் மாத்திரமல்லாது அனைத்துப் பிரிவினரும் மந்தபோசணையில் பாதிக்கப்பட்டுள்ளமை சுகாதார அதிகாரிகளின் அறிக்கைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இதனைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார்.

# நாட்டில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதால் விலங்குகளிடமிருந்து விலகி இருக்கவும்

## வைத்தியர் தயாளினி மகேந்திரன் பொதுமக்களிடம் கோரிக்கை

(சாவகச்சேரி செய்தியாளர்)



நாட்டில் விலங்கு விசர்நாய் தடுப்பூசிகளான ஏ.ஆர்.வி. மற்றும் ஏ.ஆர்.எஸ். தடுப்பு மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதால் விலங்குகளிடமிருந்து விலகி இருக்குமாறு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் திருமதி தயாளினி மகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நாட்டில் சில மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. குறிப்பாக, விலங்கு விசர்நாய் தடுப்பு மருந்து தட்டுப்பாடாக உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு உரிமையாளர்கள் வளர்ப்பு நாய்களுக்கு உரிய தடுப்பூசிகளைச் செலுத்தி அவற்றைக் கட்டி வளர்க்க வேண்டும். அத்துடன், நாய்களுக்கு தடுப்பூசி செலுத்திய அட்டையை கவனமாக வைத்திருக்க வேண்டும்.

இயன்றவரை குழந்தைகளை நாய், பூனை, அணில் உள்ளிட்ட செல்லப்பிராணிகளிடமிருந்து விலக்கி வைத்திருங்கள். நாய் வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் பெண் நாய்களுக்கு கருத்தடை செய்து வளர்க்க முன்வர வேண்டும். நாய் கடித்தால் கவனயீனமாக இருக்காது உடனடியாக வைத்திய ஆலோசனையை நாடுங்கள்.

ஒருசிலர் சிகிச்சை பெறுவதற்கு முன்வருவதில்லை. இது தொடர்பாக மக்கள் தெளிவடைய வேண்டும். எனவே, இக்கட்டான நிலைமையை கருத்திற்கொண்டு பொதுமக்கள் அவதானமாகவும், விழிப்புணர்வுடனும் செயற்பட வேண்டும் - என்றார்.

# கர்ப்பிணிகளுக்கு உலருணவு கொட்டகலையில் வழங்கிவைப்பு







(க.கிஷாந்தன்)

கொட்டகலை பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உலருணவுப் பொதி வழங்கும் நிகழ்வு கொட்டகலையில் நேற்று இடம்பெற்றது.

சுப்பையா செல்லம் ஞாபகார்த்த கல்வி நிதியத்தின் ஏற்பாட்டில் தலைவர் எஸ்.பத்மராஜ் தலைமையில் கொட்டகலை சுகாதாரப் பகுதிகளிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் நூற்றுக்கும் அதிகமானோருக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மலையகத்தில் சுப்பையா செல்லம் ஞாபகார்த்த கல்வி நிதியத்தின் ஏற்பாட்டில் பல்வேறுபட்ட சமூக நல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் நேற்று கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சிறந்த போஷாக்கான உணவு எனும் வேலைத் திட்டத்தின் கீழ் குறித்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் நிதியத்தின் செயலாளர் எம்.சொக்கலிங்கம், வீ.ராமசாமி நாயுடு, அங்கத்தவர்களான டி.வடிவேல், எஸ்.மணிவண்ணன், யோகராஜா, மலர்வண்ணன், வைத்தியர் சுதர்ஷன், பொது சுகாதார அதிகாரி சௌந்தரராகவன், திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்த ஸ்ரீ, சுகாதாரத்துறை ஊழியர்கள், அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உயிர்த்த ஞாயிறு தின சம்பவம்: சந்தேக நபர் ஒருவருக்குப் பிணை

(கனகராசா சரவணன்)

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த கண்டியைச் சேர்ந்த மொஹமட் பாறுக் மொஹமட் ஹிலாம் என்பவருக்கு மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி என்.எம்.என்.அப்துல்லாஹ் நேற்று புதன்கிழமை (08) பத்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணை, வெளிநாடு செல்லத்தடை என்ற நிபந்தனையில் பிணையில் விடுவித்துள்ளார்.

சஹ்ரானின் குழுவைச் சேர்ந்தவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த 2019.05.04ஆம் திகதி கண்டியில் வைத்து அந்த நபர் சிஐடியினரால் கைதுசெய்யப்பட்டு தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டு இவருக்கு எதிராக கண்டி மேல் நீதிமன்றத்திலும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டிருந்தது

இந்நிலையில், கண்டி மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் கடந்த ஏப்ரல் மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டார். அதேவேளை, மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் இவர் சார்பாக சட்டத்தரணி இஸ்மாயீல் உவைஸுல் ரஹ்மான் ஆஜராகி இவரை பிணையில் விடுவிப்பதற்கான நகர்த்தல் பத்திரம் கடந்த திங்கட்கிழமை கொண்டுவரப்பட்டு நேற்று புதன்கிழமை (08) வழக்கு விசாரணைக்காக மேல் நீதிமன்ற நீதிபதி நீதிபதி என்.எம். என் . அப்துல்லாஹ் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இதன்போது சட்ட மா அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்த அரச சட்டவாதி எம்.ஏ.எம்.லாபீர் கடும் நிபந்தனைகளின் அடிப்படையில் எதிரிக்கு பிணை வழங்க சம்மதம் தெரிவித்ததையடுத்து பத்து இலட்சம் பெறுமதியான இரண்டு ஆட்பிணை, வெளிநாடு செல்லத்தடை ஆகிய நிபந்தனையின் கீழ் பிணையில் விடுவிக்க மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.



உலக சமுத்திர தினத்தை சிறப்பிக்கும் முகமாக கடல் வளங்களை பாதுகாக்கும் கருப்பொருளுக்கமைய மன்னார் தோட்டவெளி கடற்கரை பகுதியில் தூய்மைப்படுத்தும் நிகழ்வு நேற்று (08) இடம்பெற்றது. (படப்பிடிப்பு: மன்னார் நகர் செய்தியாளர்)

# சியம்பலாண்டுவவில் தொலைக்காட்சி திருட்டு

(கெலும் குணதிலக்க)

சியம்பலாண்டுவ கல்வி வலயத்துக்குட்பட்ட புத்தம ரிட்டிகஹவத்த பாடசாலையில் தொலைக்காட்சிப் பெட்டி திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலையில் 03ஆம் தர வகுப்பில் பொருத்தப்பட்டிருந்த 40 அங்குல, 90 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டியே திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கதவை உடைத்துக்கொண்டு வந்தவர்களால் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கொவிந்துபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டீ.எம். தனபால தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# விவசாய காணிக்குள் நுழைந்து காட்டு யானைகள் அட்டகாசம்

## பலாங்கொடையில் மக்கள் கவலை

(பலாங்கொடை செய்தியாளர்)



பலாங்கொடையில் விவசாய காணிக்குள் நேற்று அதிகாலை நுழைந்த காட்டு யானைகள் பயிர்ச்செய்கையை சேதப்படுத்திச் சென்றுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட முல்கம 258ஏ கிராம சேவகர் பிரிவில் சுமார் 75 ஏக்கர் வயல் காணிகள் உள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தார்கள்.

இரசாயன உரம் இல்லாத காரணத்தினாலும் காட்டு யானைகளின் தொல்லையினாலும் சுமார் 70 ஏக்கர் வயல் காணிகளில் இந்த முறை அப்பகுதி விவசாயிகள் விவசாயம் செய்யவில்லை என கவலை தெரிவித்தார்கள்.

தமது குடும்ப வருமானம் விவசாயத்தை நம்பியுள்ளதாக தெரிவிக்கும் சில விவசாயிகள் மாத்திரம் இந்த முறை சுமார் ஐந்து ஏக்கர் வயல் காணியில் நெற்பயிர்ச்செய்கை செய்துள்ளார்கள்.

அந்த விவசாய நிலங்களையும் வன விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள இரவு, பகல் என்று பாராமல் அப்பகுதி விவசாயிகள் காவல் காத்து வருகின்றார்கள் அவ்வாறு இரவு பகல் என்று காவல் காத்துவந்த போதிலும் அவர்களால் அந்த விவசாய நிலங்களை முழுமையாக பாதுகாத்துக்கொள்ள முடியாமல் போயுள்ளது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் அப்பகுதிக்கு வந்த சில காட்டு யானைகள் சுமார் ஒரு ஏக்கர் நெற்செய்கையை சேதப்படுத்திச் சென்றுள்ளன.

அப்பகுதி விவசாயிகள் முகங்கொடுக்கும் காட்டு யானை பிரச்சினை தொடர்பில் பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்தபோதிலும் அதிகாரிகள் இதுவரையிலும் காட்டு யானை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்றை பெற்றுத் தரவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தார்கள்.

சில மாதங்களுக்கு முன்னர் அப்பகுதியிள் மின்சார வேலி ஒன்றை அமைப்பதற்காக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து அதற்கான வேலைகளை செய்துகொண்டு சென்றுள்ள நிலையில் அந்த வேலைகளையும் இடைநடுவே நிறுத்திச் சென்றுள்ளார்கள் என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தார்கள்.

உரிய அதிகாரிகள் கூடிய விரைவில் முன்வந்து இந்த காட்டு யானை பிரச்சினைக்குத் தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறு அப்பகுதி விவசாயிகள் அதிகாரிகளிடம் வேண்டுகொள் விடுக்கின்றார்கள்.

திகதி 07.06.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4779
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,353,260.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 8 2 6 4 0 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,835,442.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1257
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,779,800.00
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 2 7 8 1 5 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,616,772.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3021
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,388,000.00
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 47 53 68 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,363,609.76

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 809
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,409,380.00
வெற்றி இலக்கினம் L வெற்றி இலக்கங்கள் 18 22 65 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 113,435,690.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 0088
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,967,120.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 15 24 36 52
விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,750,783.80

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1127
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,920,220.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 255,015,002.00
E 02 01 04 53 65
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk



மன்னார் மாவட்ட செயலக அலுவலர்களின் நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்படும் வீட்டுத்தோட்டச் செய்கை போட்டியில் கலந்துகொள்வோருக்கு விழிப்புணர்வு கருத்தரங்கும் விதைநாற்றுகள் வழங்கும் நிகழ்வும் நேற்று (08) இடம்பெற்றது. (படப்பிடிப்பு: மன்னார் நகர் செய்தியாளர்)

# மட்டக்களப்பு சுகாதார அதிகாரி பிரிவில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



## ஒரே வாரத்தில் 28 பேர் அடையாளம்

## வருடத்தில் இதுவரை 542 பேர் பாதிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குநோய் பரவல் அதிகரித்து வருகின்ற நிலையில், கடந்த மே 22ஆம் திகதி தொடக்கம் ஜூன் 03ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 28 பேர் டெங்கு நோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

குறித்த வாரத்தில் டெங்கு தாக்கத்தினால் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 நோயாளர்களும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 நோயாளர்களும், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 06 பேரும், கோறளைப்பற்று மத்தி, களுவாஞ்சிக்குடி மற்றும் ஆரையம்பதி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவருமாக மொத்தமாக 28 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வாழைச்சேனை, காத்தான்குடி, பட்டிப்பளை, வவுணதீவு, வாகரை, வெல்லாவெளி, ஓட்டமாவடி மற்றும் கிரான் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் குறித்த காலப் பகுதிக்குள் இனங்காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ் வருடத்தில் இதுவரை காலப்பகுதிக்குள் 542 பேர் டெங்குநோய்த் தாக்கத்திற்குட்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இவ்வருடத்தில் மாத்திரம் 238 பேர் டெங்குநோய்த் தாக்கத்திற்குட்பட்டுள்ளதுடன், 02 பேர் மரணமடைந்துள்ளதாகவும் அதிக டெங்கு நோயாளர்களை இனங்கண்ட பிரிவாக மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு காணப்படுவதாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.சுகுணன் மாவட்ட ஊடகப் பிரிவிற்கு தகவல் தெரிவித்திருந்தார். இதேவேளை, பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கிக்கிடக்கின்ற குப்பைகள் நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு இடம்கொடுக்காத வகையில் சூழலை துப்புரவாக வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# கல்முனையில் சிறுவர் நோய்களுக்கான பாணி மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

## பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தாய்மார் விசனம்

(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்முனை பிரதேசத்தில் சிறுவர்களை ஆட்படுத்தும் நோய்களுக்கான சிரப் (பாணிகளுக்கு) பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தாய்மார் விசனம் தெரிவிக்கின்றனர்.

காலநிலை மாற்றம் காரணமாக பிரதேசத்தில் நிலவும் கடும் உஷ்ணம் காரணமாக தடிமன், இருமல், சளி போன்ற நோய்கள் தற்போது குழந்தைகளையும் தாக்கி வருகிறது.

திடீர் விலையேற்றம் ஒருபுறம், மருந்து தட்டுப்பாடு இன்னொருபுறம் என நீடிக்கும் இந்நிலையால் பெற்றோர் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

அரச வைத்தியசாலையில் கூட வெளிநோயாளர் பிரிவில் மருந்து பெற வருவோருக்கு தற்போது இரு நாள் அல்லது மூன்று நாள் மருந்துகொடுக்கும் நிலையில், இவ்வாறான பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பதெனவும் பொதுமக்கள் கேள்வி கேட்கின்றனர்.

கல்முனை பிரதேசத்தில் தற்போது எரிவாயு மண்ணெண்ணெய், பால்மா உட்பட பல பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஏறாவூருக்கு சென்ற ஜே.வி.பி. முக்கியஸ்தர்களிடம் புனித அல்குர்ஆன் சிங்களப் பிரதி கையளிப்பு




(மட்டக்களப்பு நிருபர்)

சமகால அரசியல் தலைமைத்துவத்தில் மாற்றம் வேண்டும் என வலியுறுத்தி அரசியல் கொள்கைப் பிரசாரத்தை மேற்கொண்டு நேற்று (08) ஏறாவூருக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான அணியினரிடம் புனித அல்குர்ஆன் சிங்களப் பிரதி கையளிக்கப்பட்டது.

ஜே.வி.பியின் பிரசாரகர்களும் அதன் ஏறாவூர் அமைப்பாளர் முஹம்மது உசனார் கரீம் ரஹ்மான் தலைமையிலான அணியினரும் ஏறாவூர் நகர கடைத்தெருக்களில் மக்களை விழிப்புணர்வூட்டும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது அங்கு வந்த செயற்பாட்டாளரான இளைஞர் ஜே.ஆர்.ஏ.சஜித் என்பவரால் இந்த சிங்கள அல்குர்ஆன் ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியிடம் கையளிக்கப்பட்டது.

இதுகுறித்து சுனில் ஹந்துன்நெத்தியிடம் கருத்துத் தெரிவித்த செயற்பாட்டாளரான சஜித், புனித அல்குர்ஆனையும் அதனைப் பின்பற்றும் முஸ்லிம்களையும் பற்றி மேற்கொள்ளப்படும் தவறான திரிபுபடுத்தப்பட்ட பிரசாரங்களால் இஸ்லாமியர்கள் விரோதிகளாகப் பார்க்கப்படுகிறார்கள்.

இந்த நாட்டில் வாழும் சகோதர சமூகங்கள் புனித அல்குர்ஆனையும் முஸ்லிம்களையும் பற்றிய புரிதல்களை அறிந்திருப்பது இன நல்லிணக்கத்துக்கான சிறந்த வாய்ப்பாக அமையும், அதனாலேயே தாம் வெறுப்புப் பிரசாரத்தை நீக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம் - என்றார்.

# குச்சவெளி பிரதேச சபைத் தவிசாளரினால் இலவச மண்ணெண்ணெய் வழங்கிவைப்பு





(கிண்ணியா நிருபர்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடுகளைக் கருத்திற்கொண்டு குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மின்சார இணைப்பு பெறாத வசதியற்ற குடும்பங்கள், வறிய குடும்பங்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வீட்டுத் தேவைக்காக இலவசமாக மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.



அதன் முதல் கட்டமாக நேற்றுக் காலை (08) குச்சவெளி பிரதேச சபையின் புல்மோட்டை உப அலுவகத்தில் வைத்து புல்மோட்டை பயன்பாடுகளுக்கான மண்ணெண்ணெய் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக் தலைமையில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபையின் உறுப்பினர்களான எஸ்.ஏ.சீ.எம்.நசார், ஏ.பஸ்மீர், புல்மோட்டை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், இலங்கை இராணுவப்படை உத்தியோகத்தர்கள், பிரதேச சபையின் உத்தி யோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# வாழைச்சேனையில் முதியவரொருவர் சடலமாக மீட்பு



(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீ.சி. மைதானத்தின் அருகில் உயிரிழந்த நிலையில், நபரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சடலம் நேற்று முன்தினம் (07) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட நபர் செங்கலடி - கொம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய பிள்ளையான் கணேசமூர்த்தி என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட நபர் பொருளாதார நெருக்கடி காரணமாக வீட்டிலிருந்து ஆறு நாட்களுக்கு முன்னர் வெளியேறிச் சென்றுள்ளார் என்று பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில் 5000 சமுர்த்தி கொடுப்பனவு கையளிப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

காத்தான்குடி - 165 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமுர்த்தி பயனாளிகளுக்கும், சமுர்த்தி காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்குமான 5000 ரூபா கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எச்.எம்.தாஹிர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர் கலந்துகொண்டு உரையாற்றுகையில், நாட்டின் தற்போதைய நெருக்கடி மற்றும் உணவுத் தட்டுப்பாடு போன்றன மேலும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆகவே, இந்த சவாலை எதிர்கொள்ள தங்களால் இயன்ற பயிர்களை பயிரிட்டு, வர இருக்கின்ற பஞ்சத்தை அனைவரும் இணைந்து வெற்றிகொள்ள செயற்படவேண்டும் என கேட்டுக்கொண்டதுடன், பயனாளிகளுக்கான கொடுப்பனவையும் வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வில் கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.எம்.ஜரூப்,



சமுர்த்தி முகாமையாளர் எஸ்.எச்.முஸம்மில், கிராம உத்தியோகத்தர் சாதினா, பொருளாதார உத்தியோகத்தர் சத்யா மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சிறுநீரக விசேட வைத்திய சேவை ஆரம்பம்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் முதற் தடவையாக சிறுநீரக நோயாளர்களின் நன்மை கருதி முதலாவது சிறுநீரக விசேட வைத்திய நிபுணர் கிளினிக் நேற்று முன்தினம் (07) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனிபாவின் வேண்டுகோளுக்கிணங்க, சிறுநீரக விசேட வைத்திய நிபுணர் டாக்டர் நியோமி வடுவகே வருகைதந்து நோயாளர்களுக்கு கிளினிக்கை தொடக்கிவைத்து, மருத்துவ ஆலோசனைகளை வழங்கினார்.

சிறுநீரக மாற்று, குருதி சுத்திகரிப்பு, நீண்ட காலமாக சிறுநீரக நோயினால் அவதியுறும் நோயாளர்களின் பிரச்சினைகளுக்கு இங்கு சிகிச்சையளிக்கப்படவுள்ளது. சிறுநீரக நோயாளர்கள் தூர இடங்களுக்குச் சென்று அலைந்து திரிந்து கால விரயம், பணச் செலவு போன்ற அசௌகரியங்களை எதிர்கொள்ளாது, அவர்களின் காலடிக்கே வந்துள்ள மேற்படி வைத்திய நிபுணரின் சேவைகளைப் பெற்று நன்மையடையுமாறு கிழக்கு கரையோரப் பிராந்திய மக்களை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனிபா கேட்டுக்கொண்டுள்ளார்.

இச்சிறுநீரக கிளினிக்கானது, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தின் பிரதி செவ்வாய்க்கிழமைதோறும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனுக்கு உயிர் அச்சுறுத்தல்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(மாளிகைக்காடு நிருபர்)



மின்தடை நேரத்தில் ஆயுதத்துடன் வந்த பாதுகாப்புப் படையின் சீருடை அணிந்தவர்கள், தன்னை விசாரிப்பதாகக் கூறி மிரட்டி உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்தனர் - என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சாமுவேல் சந்திரசேகரம் ராஜன் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ஏ.சி.அப்துல் அசீஸிடம் அவரது முறைப்பாட்டை கடந்த திங்கட்கிழமை கையளித்தார். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பித்துள்ள

அவரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 2ஆம் திகதி இரவு மின்தடை நேரம் பெரியநீலாவணையிலுள்ள எனது வீட்டுக்கு வந்த ஆயுதம் தரித்த நான்கு இராணுவத்தினரும் கொழும்பு புலனாய்வுப் பிரிவினர் என்று அடையாளப்படுத்திய இருவரும் விசாரிக்க வந்ததாகக் கூறினர்.

கொழும்பிலிருந்து வந்த புலனாய்வுப் பிரிவினர் என்பதால் அவர்களிடம் அடையாள அட்டையைக் கேட்டேன். ஆனால், அவர்கள் தர மறுத்தனர். கல்முனையில் உண்ணாவிரதமிருந்தமை தொடக்கம் கடந்த மாதம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்வரை நான் சம்பந்தப்பட்ட விடயங்களில் என்னை துருவித்துருவி விசாரித்தனர். இறுதியில் வெளியில் நடமாடக்கூடாது என்று அச்சுறுத்தியதோடு, எனக்கும் மனைவி, பிள்ளை மற்றும் மருமகனுக்கும் பயமுறுத்தி அச்சுறுத்தல் விடுத்துச் சென்றுள்ளனர். இதற்கு முன்னரும் 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலின்போதும், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போதும், 2020ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலின்போதும் இனந்தெரியாத ஆயுதக் குழுக்கள், பொலிஸார், புலனாய்வுக் குழுவினர் என தொடர்ச்சியாக அடுத்தடுத்து வந்து என்னை விரட்டினர். தற்போது மீண்டும் இந்த அச்சுறுத்தலை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் மனித உரிமையுடன் சுதந்திரமாக வாழமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எனக்கு வாக்களித்த மக்களுக்கு உதவ முடியாத நிலையில் உள்ளேன். சமுகசேவை செய்ய தடை ஏற்பட்டுள்ளது. உளவியல் ரீதியான தாக்கம் அதிகமாக உள்ளது. குடும்பத்தினரும் அச்சத்தில் உள்ளனர். எனது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் பயபீதியுடன் நடைப்பிணமாக குடும்பத்துடன் காலம் கடத்தி வருகிறேன். இது தொடர்பாக எமது அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனிடமும் முறையிட்டுள்ளேன். இவர்களை அடையாளம் கண்டு எனக்கு நீதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என மாநகர சபை உறுப்பினர் சாமுவேல் சந்திரசேகரம் ராஜன் தெரிவித்திருக்கின்றார்.

# கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பிரயோகக் கண்காட்சி





(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் கல்வி பயிலும் தரம் - 6 தொடக்கம் தரம் - 11 வரையிலான மாணவர்களினால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பிரயோகக் கண்காட்சி நேற்று (08) கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் கலந்துகொண்டதுடன், கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.ஹிகானா அலீப், உதவிக் கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்) எம்.எஸ்.சாதுல் அமீன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சரவணமுத்து, இளம் கண்டுபிடிப்பாளர் சோ.வினோஜ்குமார் உட்பட விஞ்ஞான பாட ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

இக்கண்காட்சியில் சுமார் 250இற்கும் மேற்பட்ட மாணவர்களின் படைப்புகள் பிரயோக ரீதியாக கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. மேலும் கல்லூரி முதல்வர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு கருத்து தெரிவிக்கையில்,

பாடசாலை விடுமுறைக்கு முன்னரே மாணவர்களுக்கு இக்கண்காட்சிக்கான படைப்புகளை உருவாக்குவது பற்றிய விழிப்புணர்வுகளை நடத்தியிருந்தோம். அதனால் மாணவர்களும் தங்களது விடுமுறைக் காலத்தை இவ்வாறான ஆக்கப்படைப்புகளுக்காக செலவளித்தது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. இதற்காக ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒரு நாடு அபிவிருத்தியடைய வேண்டுமெனில் புதிய கண்டுபிடிப்புகள் மிக முக்கியமானவை. இக்கண்காட்சியிலுள்ள புத்தாக்கங்களைத் தெரிவுசெய்து அவர்களை பயிற்றுவித்து, அக்கண்டுபிடிப்புகளை தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளுக்கு அனுப்புவதே இதன் பிரதான நோக்கமாகும். இந்த நோக்கத்திற்காக எங்களுடன் இணைந்து பணியுரியும் அனைவருக்கும் நன்றிகளை கல்லூரி சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# விமானப்படையின் திருகோணமலை அனர்த்தப் பிரிவுக்கு படகு இயந்திரம்



(திருகோணமலை நிருபர்)

இலங்கை விமானப்படையின் திருகோணமலை அனர்த்தப் பிரிவுக்கு படகு இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டது.

இலங்கை விமானப்படையின் திருகோணமலை முகாமின் விமானப்படை அனர்த்தப் பிரிவுக்கு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான பி.எச்.என்.ஜெயவிக்ரமவினால் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (07) குறித்த படகு இயந்திரம் வழங்கப்பட்டது.

25 குதிரை சக்திகொண்ட இந்தப் படகின் இயந்திரம், இலங்கை விமானப்படையின் அனர்த்தப் பிரிவின் வேண்டுகோளுக்கிணங்க அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வழங்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது மக்களின் உயிரைக் காப்பாற்றுவதில் இலங்கை விமானப்படை முன்னின்று செயற்பட்டுள்ளதுடன், அந்த முயற்சிக்கு உதவுவதற்காக இந்த இயந்திரத்தை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான பி.எச்.என்.ஜெயவிக்ரம வழங்கினார்.




இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் கே.சுஹுனதாஸ் மற்றும் இலங்கை விமானப்படை அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# அம்பாறை மாவட்டத்தில் பிடித்துவைத்திருக்கின்ற 14,700 ஏக்கர் விவசாய காணிகளை விடுவித்துத் தருக!

## 4,657 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக காணி உரிமைக்கான செயலணியின் அமைப்பாளர் நிஹால் அஹமட் தெரிவிப்பு

(நூருள் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டத்தில் பிடித்து வைத்திருக்கின்ற 14,700 ஏக்கர் விவசாய காணிகளையும் அரசாங்கம் உடன் விடுவித்துத் தரவேண்டும் என்று மனித எழுச்சி நிறுவனத்தின் பணிப்பாளரும், காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் அமைப்பாளருமான நிஹால் அஹமட் தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேசத்தில் பாதிக்கப்பட்டுள்ள விவசாய குடும்பங்களுக்கு விழிப்பூட்டல், அறிவூட்டல், வழிகாட்டல் ஆகியவற்றை மேற்கொள்கின்ற வகையில் மனித எழுச்சி நிறுவனம், காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணி ஆகியவற்றால் கடந்த திங்கட்கிழமை (06) மாலை கூட்டம் நடத்தப்பட்டது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் (07) நிஹால் அஹமட்டை நாம் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்தவை வருமாறு,

அடுத்த மாதங்களில் பாரிய பட்டினி ஏற்பட்டு விடும் என்று அரசாங்கமே கூறுகின்றது. என்றுமில்லாதவாறு உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும் என்று நியாயமான அச்சத்தை வெளியிட்டவண்ணம் உள்ளார்கள்.

இதனால் விவசாய செய்கையில் அதிகளவில் ஈடுபடுங்கள் என்று ஜனாதிபதி, பிரதமர், விவசாய அமைச்சர் உள்ளிட்ட அரசாங்க தரப்பினர் அனைவருமே பொதுமக்களை மீண்டும் மீண்டும் கோரியவண்ணம் உள்ளார்கள்.



விவசாயிகள் மீது கை வைத்த காரணத்தாலேயே நாடு இன்று இவ்வளவு பாரிய நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்க நேர்ந்துள்ளது. வயிறுகள் காய்ந்த காரணத்தால்தால் வெடித்த போராட்டங்கள் அரசாங்கத்தை ஆட்டங்காண வைத்திருக்கின்றன.

அம்பாறை மாவட்ட விவசாயிகள் மீது அரசாங்கம் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக கை வைத்திருக்கின்றது. உள்நாட்டு மோதல் காலந்தொட்டு மூவின மக்களினதும் காணிகள் அரசாங்கத்தால் நுட்பமான முறைகளில் பிடித்து வைக்கப்பட்டுள்ளன.

4,657 குடும்பங்களின் 14,700 ஏக்கர் விவசாய காணிகள் இவ்விதம் பிடிக்கப்பட்டுள்ளன. பாணமைமுதல் மல்வத்தைவரை இராணுவம், சீனித் தொழிற்சாலை, ஓட்டு தொழிற்சாலை, வன வள பாதுகாப்புத் திணைக்களம், வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் போன்ற அரசாங்க கட்டமைப்புகளால் விவசாய காணிகள் பிடித்து வைக்கப்பட்டுள்ளன.

மனித எழுச்சி நிறுவனம், காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணி ஆகிய எமது அமைப்புகள் பாதிக்கப்பட்ட விவசாய குடும்பங்களுக்கு உரிய நீதியை பெற்றுக்கொடுக்க நீண்டகாலமாக இதயசுத்தியுடன் பலவிதமான பகீரத முன்னெடுப்புகளையும் மேற்கொண்டு வந்திருக்கின்றோம். அவை நம்பிக்கை ஊட்டுகின்ற வகையில் உள்ளன.

கோட்டா கோ கம உள்ளிட்ட அண்மைய போராட்டங்கள் வெற்றிகண்டு வருகின்ற நிலையில், எமது விவசாயிகளின் நீண்டகால போராட்டங்கள் ஏன் வெற்றிபெற முடியாது? அதற்கான தருணம் தற்போது கனிந்து இருக்கின்றது.

விவசாயத்தில் ஈடுபடுங்கள் என்று கோரும் அரசாங்கத்திடம் எமது விவசாய காணிகளை திரும்பத் தாருங்கள் என்று கேட்டு பெறக்கூடிய வியூகத்தை நாம் முன்னெடுக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

விவசாய நிலங்களை அரசாங்கம் விவசாயிகளுக்கு திரும்ப வழங்கவேண்டும். இவ்வாறு வழங்குவதன் மூலம் விவாயிகளுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும், அரசாங்கத்துக்கும்கூட நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

# தம்பலகாமத்தில் புதிய கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு நேர்முகப் பரீட்சை




(கிண்ணியா நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் புதிய கைத்தொழில் முயற்சியாளர்களை தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் (07) காலை இடம்பெற்றது.

பிரம்புகள், பித்தளை மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் தேசிய ரீதியில் கைத்தொழில் முயற்சியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு, சுயதொழில் ஊடான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஒரு நோக்கமாக இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் தலைமையில் இத்திட்டம் இடம்பெற்றது. குறித்த நேர்முகத் பரீட்சையில் உறுப்பினர்களாக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.பிரபானந்தன், விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.ஆர்.எம்.நபீல் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# கந்தளாய் பிரதேசத்தின் பாலர் பாடசாலைகளுக்கு குடிநீர் வசதி

(பொலிவேரியன் நிருபர்)

அல்-ஹித்மத்துல் உம்மா பௌண்டேஷனினால் கந்தளாயில் அமைந்துள்ள மூன்று பாலர் பாடசாலைகளுக்கு குடிநீர் பெற்றுக்கொடுக்கப்பட்டு, மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அல்-ஹித்மத்துல் உம்மா பௌண்டேசனின் தலைவரும் சமூகசேவையாளருமான கஸ்ஸாலி முகமட் பாத்திஹ் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், விசேட அதிதியாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளரான ஆசிரியர் ஏ.எல்.முகமட் நபீல் கலந்துகொண்டார்.



பாலர் பாடசாலைகளான பாத்திமா பாலர் பாடசாலை, அஸ்-ஸபா பாலர் பாடசாலை, ஆயிஷா பாலர் பாடசாலை ஆகியவற்றுக்கே இக்குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது.

## போடியார் புலம்பல்!



**தோல்வியுற்ற ஜனாதிபதியாக என்னால் செல்ல முடியாது எண்டு கோட்டாபய சொல்லிப்போட்டாரு எலுவா**

**போரில வென்ற கதாநாயகன எப்படி தோல்வியடைந்தவர் எண்டு சொல்லமுடியும் எண்டு அவரிட மனம் சொல்லுது போல அந்த கதய வைச்சுத்தான் 69 இலட்சம் சிங்கள மக்கள் அரியாசனம் ஏத்தினாங்க.. இப்ப அதே சனம்தான் உங்க தோல்விநடைந்தவர் எண்டு கொம்புறாங்க உட்டுத்து போடா தம்பி!**

# கிழக்குப் பல்கலையின் புதிய வேந்தராக பேராசிரியர் செல்வராஜா நியமனம்!



(கல்லடி நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக பேராசிரியர் மா.செல்வராஜா நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி மாளிகையில் வைத்து நேற்று முன்தினம் (07) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

பெருநிலப்பகுதியிலுள்ள முனைக்காடு கிராமத்தில் பிறந்த இவர், ஆசிரியர் சேவையில் இணைந்து அதிபர், விரிவுரையாளர், முதுநிலை விரிவுரையாளர், துறைத்தலைவர், கலை, கலாசார பீடாதிபதி ஆகிய பதவிகளை வகித்தமையுடன், இன்றும் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களிலும், இந்திய பல்கலைக்கழகங்களிலும் வருகை தரு விரிவுரையாளராகவும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர், படுவான்கரைப்பகுதி கல்வியில் எழுச்சி பெறவேண்டும் என்பதனை நோக்காக கொண்டு ஒளிக்கல்லூரி அமைப்பினை ஸ்தாபித்து செயற்படுத்தி வருகின்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வீதியில் கண்டெடுத்த கைபேசி மற்றும் பணம் பொலிஸாரின் உதவியுடன் உரியவரிடம் ஒப்படைப்பு

## மட்டு. வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களுக்கு பாராட்டு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் வீதியின் நடுவில் அமைந்துள்ள பூந்தொட்டியிலிருந்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி, பணம் மற்றும் ஆவணங்கள் உட்பட கைப்பை என்பவற்றை நேற்று முன்தினம் (07) கண்டெடுத்து பொலிஸாரிடம் ஒப்படைத்த மட்டு. வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் இருவரை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.கே.ஹெட்டியாராச்சி பாராட்டினார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் கடமையாற்றும் இரு உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் காலை (07) வழமைபோல் பார் வீதியிலுள்ள வங்கிக்கு முன்னாலுள்ள இரு வீதிகளிலுள்ள மணல்களை துப்புரவுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இதன்போது வீதியின் நடுவிலுள்ள பூந்தொட்டியில் கைவிடப்பட்டிருந்த 80 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி, அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், கடமையாற்றும் திணைக்கள அட்டை மற்றும் பணம் உட்பட கைப்பை ஒன்றை வீதி



அபிவிருத்தி அதிகாரசபையில் கடமையாற்றும் இரு ஊழியர்கள் கண்டெடுத்து, அதனை உடனடியாக அருகிலிருந்த மட்டு. தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இந்த நேர்மையான செயலை செய்த இருவரையும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.கே.ஹெட்டியாராச்சி பாராட்டி கௌரவித்தார்.

இதேவேளை, குறித்த கைத்தொலைபேசி, மணிபர்ஸை தவறவிட்டவரை கண்டறிந்து பொலிஸார் வரவழைத்து அவருடையது என உறுதிப்படுத்திய பின்னர், அவரிடம் அவற்றை ஒப்படைத்தனர்.

# மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்கு தமிழக அரசின் உலருணவுப் பொதிகள் கையளிப்பு








இந்திய தமிழ்நாட்டிலிருந்து அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற உலருணவுப் பொதிகள் மண்முனைப்பற்று பிரதேச செயலப் பிரிவில் கடந்த திங்கட்கிழமை (06) முதல் வழங்கும் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் குறித்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், இதன்போது பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி வி.லோகினி மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.திவாகரன் உள்ளிட்ட பிரதேச செயலக உயரதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு நிவாரணப் பொதிகளை வழங்கினர்.

மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கே உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கென முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ள 50,000 பைக்கற்று அரிசி மற்றும் 3,750 பைக்கற்று பால் மா என்பனவற்றை மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவிற்கும் முன்னுரிமை அடிப்படையில் மாவட்ட செயலகத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.











கிழக்கிலங்கை வரலாற்றுப் பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்ச்சி உற்சவம் கடந்த திங்கட்கிழமை (06) ஆரம்ப நாள் மாலை கடல் நீர் எடுத்துவருவதுடன், வழியில் கலியாணக்கால் வெட்டும் நிகழ்வாக மரபு முறைப்படி பூவரசு மரக்கிளையை முறித்து ஊர்வலமாக ஆலயத்திற்கு கொண்டுவந்து, முறித்துவரப்பட்ட பூவரச மரக்கிளைக்கு மஞ்சள் பூசி பல வர்ண சேலைகளால் அலங்கரித்து அதற்கு பூசை நடைபெற்றதுடன், ஊர்சுற்றுக்காவியம் பாடலும் நடைபெற்று திருக்கதவு திறக்கப்பட்டது. (படங்கள் - காரைதீவு நிருபர்)

# எயிட்ஸ் பரிசோதனை உபகரணங்களுக்கு வைத்தியசாலைகளில் கடும் தட்டுப்பாடு

நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் எயிட்ஸ் நோய் பரிசோதனை உபகரணங்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக எயிட்ஸ் நோய் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் எயிட்ஸ் நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

எயிட்ஸ் நோய்க்கான பரிசோதனைகள் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு கட்டாயம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கென மூன்று இலட்சத்துக்கும் அதிகமான பரிசோதனை உபகரணங்கள் அவசியமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.




இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, எயிட்ஸ் நோய் தொடர்பில் அறிகுறிகள் தென்படுவோருக்கு அல்லது சுயமாக தம்மைப் பரிசோதனை செய்துகொள்ள விரும்புவோருக்கு பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

அறிகுறிகள் தென்படுவோருக்கு அடுத்த கட்ட அறிகுறிகள் தென்படும்போதுதான் பரிசோதனை செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கர்ப்பிணிகளுக்கு கட்டாயம் பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் நாம் அதற்கு முக்கியத்துவம் அளிக்கிறோம். பரிசோதனையொன்றை மேற்கொள்ள 35 ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரூபா வரை செலவாகிறது. இதன் காரணமாக பொதுமக்கள் தனியார் வைத்தியசாலையை நாடுவதில்லை.

எயிட்ஸ் பரிசோதனை உபகரணங்களை பெற்றுத்தருமாறு நாம் யுனிசெப் அமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். அவை மூன்று அல்லது நான்கு மாதங்களில் கிடைக்கப்பெறும் என நம்புகிறோம் என்றார்.

# வெளிநாட்டலுவல்கள் அமைச்சருடன் கட்டார் தூதுவர் விசேட சந்திப்பு

கட்டார் நாட்டின் தூதுவர் ஜாசிம் பின் ஜாபர் ஜே.பி. அல்-சொரூர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை கடந்த திங்கட்கிழமை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து சந்தித்தார்.



இச்சந்திப்பின்போது, இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் இலங்கைப் பொருளாதாரத்தின் பின்னடைவை அதிகரிப்பதற்கு அரசாங்கம் இதுவரையில் எடுத்த உறுதியான நடவடிக்கைகள் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ், தூதுவர் அல்-சொரூரிடம் விளக்கினார்.

இலங்கை - கட்டார் இருதரப்பு உறவுக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை வலியுறுத்திய கட்டார் தூதுவர்,

இச்சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு சாத்தியமான அனைத்து ஆதரவுகளையும் வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

# புதுக்குடியிருப்பிலிருந்து ஹட்டனுக்கு வந்த 12 வயது சிறுமி தொடர்பில் விசாரணை

முல்லைத்தீவு மூங்கிலாறு பகுதியிலிருந்து ஹட்டனுக்கு இளைஞர் ஒருவரைத் தேடி வந்ததாகக் கூறப்படும் 12 வயது சிறுமி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

'டிக்டொக்' மூலம் அறிமுகமாகிய இளைஞர் ஒருவரைத் தேடி குறித்த சிறுமி ஹட்டனுக்கு சென்றுள்ளார்.

தான் வீட்டை விட்டுச் செல்வதாகவும் தன்னைத் தேட வேண்டாம் என்றும் கடிதம் எழுதிவைத்துள்ள சிறுமி, அதில் தொலைபேசி இலக்கம் ஒன்றையும் எழுதிவைத்துள்ளார்.

மகளைக் காணவில்லையென பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் கடந்த 06ஆம் திகதி முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர். அதன் பிரகாரம், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அந்தத் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக சிறுமியை தொடர்புகொள்ள முடியாதபோதிலும் மறுநாள் 07ஆம் திகதி சிறுமி ஹட்டனில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.அதன் பின்னர் பெற்றோரும் உறவினர்களும் சிறுமியை அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

# பாடசாலைகளில் சவால்களை சமாளிக்க கல்வி அமைச்சுக்கு ஆலோசனைகள்

## ஆசிரியர் சேவை சங்கம் செயலாளருக்கு கடிதம் அனுப்பிவைப்பு

(அவிசாவளை நிருபர்)

பாடசாலை ஆரம்பமாகியுள்ள நிலையில், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளருக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தினால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பல அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்களும் ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை நாங்கள் உங்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. எவ்வாறாயினும், பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நிவாரணம் வழங்கும் வகையில் பல திட்டங்கள் முன்மொழியப்பட்டபோதிலும், இன்றுவரை பொறுப்பான மற்றும் பொருத்தமான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு எதுவித நடவடிக்கையும் எடுக்காமைக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தனது எதிர்ப்பினை அக்கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கல்வி அமைச்சுக்கு பின்வரும் ஆலோசனைகளை எமது சங்கத்தின் சார்பாக முன்வைக்க விரும்புகிறோம்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கான



போக்குவரத்திற்காக தற்போது பயன்பாட்டில் இருக்கும் 'சிசுசவிய' பஸ் போக்குவரத்து சேவையினை அதிகரித்தல் மற்றும் இப்போக்குவரத்து சேவையினை சிறந்த சேவையாக மாற்றி தற்போது கி.மீ. ஒன்றுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை ரூபா 62 ஆக அதிகரித்தல்,

தேசிய மற்றும் மாகாண பொதுச் சேவையில் உள்ள சிக்கலான இடமாற்ற செயல்முறையை நீக்குவதன் மூலம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் ஆசிரியர்களின் நிரந்தர வசிப்பிடத்தை கருத்தில் கொண்டு இடமாற்றங்களை மேற்கொள்வதற்கான தேசிய வேலைத்திட்டத்தை உருவாக்குதல் ஆகியன. மேலும், தற்போதைய பாடசாலை நேரமான காலை 7.30 மணி முதல் மதியம் 1.30 வரையான நேரத்தை நீடித்து, பாடசாலை நாட்களை குறைத்தல், தினசரி நேர அட்டவணையை மறுசீரமைத்து ஆசிரியர்கள் பணிக்கு அழைக்கப்படும் நாட்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்,

போக்குவரத்தில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைப் போக்க எரிபொருள் பயன்படுத்தப்படாத துவிச்சக்கரவண்டிகள் மற்றும் இலத்திரனியல் மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்வதற்கு நிவாரணம் வழங்குதல் ஆகியன.

அத்துடன், பிரதான சாலைகளில் இருந்து பொதுப் போக்குவரத்து இடம்பெறாத சாலைகளில் வாடகை வாகனங்களில் பயணிக்கும் ஆசிரியர்களுக்கான திட்டமொன்றைத் தயாரித்தல் ஆகியன முன்மொழிவுகளாகும்.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை தீர்த்து வைக்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இவ்விடயங்கள் தொடர்பாக எந்த நேரத்திலும் கலந்துரையாடி தேவையான ஆதரவை வழங்குவதற்கு சங்கம் தயாராக உள்ளது என்பதை பொறுப்புடன் சுட்டிக்காட்டுவதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

# சமூக சேவையில் ஈடுபடுவோரின் இழப்புகள் நிரந்தரமானவையாகும்

## மறைந்த ஊடகவியலாளர் க.ப. சிவம் நினைவுதின நிகழ்வில் அறநெறிப் பேச்சாளர் ஸ்ரீகாந்தன் தெரிவிப்பு





(கண்டி நிருபர்)



சமூக சேவையில் ஈடுபடுவோர்களது இடைவெளிகள் ஒருபோதும் நிரப்பப்படுவதில்லை. அவர்களது இழப்புகள் நிரந்தர இழப்புகளாகவே இருக்கும் என கண்டியைச் சேர்ந்த பிரபல சமூக சிந்தனையாளரும் அறநெறிப் பேச்சாளருமான முத்தையாப் பிள்ளை ஸ்ரீகாந்தன் தெரிவித்தார்.

கண்டி டெவோன் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் க.ப. சிவம் பற்றிய நினைவுதின நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நீண்டகாலம் கண்டியில் தமிழ்ப் பேசும் மக்களுக்காகவும் மலையக பெருந்தோட்ட சமூகத்திற்காகவும் எழுத்துத் துறை மூலம் விழிப்படையச் செய்த மலைமுரசு பத்திரிகையின் ஆசிரியரும் கண்டியின் மூத்த ஊடகவியலாளருமான கலாபூஷணம் அமரர் க.ப.சிவத்தினது மூன்றாவது நினைவு தினத்தை முன்னிட்டு மேற்படி வைபவம் அவரது நண்பர்கள் சிலரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

சமூக சேவையில் ஈடுபடுவோர்களது இடைவெளிகள் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். அவர்கள் மறைந்தாலும் அந்த இடைவெளிகள் நிரப்பப்படுவதில்லை.

அந்த அடிப்படையில் க.ப.சிவம் மறைந்ததன் இடைவெளி ஒருபோதும் நிரப்பப்படப் போவதில்லை. 1960ஆம் ஆண்டுகளில் மலையக சமூகத்தினர் வாசிப்பு பழக்கமோ அல்லது எழுத்துத்துறையில் ஆர்வமோ போதியளவு இல்லாத அக்காலத்தில் தன்னந்தனியாக இருந்து 'மலைமுரசு' என்ற பத்திரிகையை ஆரம்பித்து மலையக மக்களுக்காக களம் அமைத்துக் கொடுத்தார்.

அவரது மலைமுரசு பத்திரிகையில் ஆரம்பகாலத்தில் புதிதாக எழுதிய பலர் பிற்காலத்தில் பிரபல கலைத்துறை ஆக்கங்களை வெளியிடும் கலைஞர்களாக மாறினர்.

அது மட்டுமல்லாது, க.ப.சிவம் ஒரு பத்திரிகையாளராக இருந்து மலையக மக்களுக்காக எப்போதும் குரல் கொடுத்த ஓர் ஊடகவியலாளராக இருந்தார்.

பொதுவாக எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் தனி ஒரு அடையாளம் இருக்கும். அதேவிதம் எப்போது பார்த்தாலும் தனக்கே உரித்தான ஒரு தனிப்பாணியில் உடையணிந்து தனது குறியீட்டை பாதுகாத்துவந்த ஒரு மகா புருசர் என்றுதான் அவரைக் குறிப்பிட வேண்டும் என்றார். ஒருவர் மரணித்தால் அவரைப்பற்றி வருடாந்த நினைவு தினத்தில் குறைந்தது ஒரு பத்து அல்லது பதினைந்து பேராவது கூடிப் பேசாவிட்டால் அது பாரிய குறை எனலாம். அந்த வகையில், சமூகத்திற்காக வாழ்ந்த ஒருவரைப்பற்றி இன்று இவ்வாறு கூடிப் பேசுவது வரவேற்கத்தக்கது என்றார்.

இந்நிகழ்வில் பீ.சிவக்குமார், ஆர். நித்தியானந்தன், ஆர்.ஏ.இராமன், ஜே.எம். ஹாபீஸ் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்.

# நீளும் அவலம்!







ஹட்டன் பிரதான பஸ் தரிப்பிடத்தின் தற்போதைய நிலையை படங்களில் காண்கிறீர்கள். இந்த பஸ் தரிப்பிடத்தில் மழைக் காலங்களில் நட மாட முடியாத நிலை உருவாகியுள்ளதாகவும் கழிவுகள் அகற்றப்படுவதில்லையெனவும் மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். (படப்பிடிப்பு: மனூர சுதத் செல்லஹேவா)

# ராகமவில் ஒருவர் குத்திக்கொலை

ராகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெந்தலியத் தபாலுவ பிரதேசத்தில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் நபர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொலை சம்பவம் நேற்று முன்தினம் (07) இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர் கனேமுல்ல, கெந்தலியத்தபாலுவ பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவர் என அடையாளங் காணப்பட்டுள்ளார்.

கொலையைச் செய்த சந்தேகநபரால் உயிரிழந்தவரின் கைத்தொலைபேசி திருடப்பட்டுள்ளது. அதன் பின்னர் அந்த நபரும் அவரது இரண்டு மகன்களும் சம்பவம் குறித்து விசாரிக்க சந்தேகநபரின் வீட்டிற்கு சென்றுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர் குறித்த மூவரையும் கத்தியால் குத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

படுகாயமடைந்த நபர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கொலையைச் செய்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த நபரும் காயமடைந்திருந்ததால் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பொலிஸ் பாதுகாப்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# ஒரு கிலோ கோழி இறைச்சி ஹட்டனில் 1,450 ரூபா

## பொதுமக்கள் விசனம்

(மனூர சுதத் செல்லஹேவா)

ஹட்டன் நகரத்தில் ஒரு கிலோ கோழி இறைச்சி ஆயிரத்து 400 முதல் ஆயிரத்து 450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

மேலும், முட்டை ஒன்றின் விலை 43 முதல் 45 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். கோழித் தீனி மற்றும் கோழிகளை பராமரிக்கும் செலவு அதிகரித்துள்ளதால் இறைச்சியின் விலையையும் அதிகரிக்க நேரிட்டுள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு விலை அதிகரிப்பின் காரணமாக கோழி இறைச்சிக்கறியை நுகர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் ஆரம்ப நிகழ்வு

(பேருவளை பீ.எம். முக்தார்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் 131ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் ஆரம்ப நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை அஸர் தொழுகையின் பின்னர் கலீபத்துஷ் ஷாதுலிகளான மௌலவி எம்.ஐ.எம். ரபீக் (பஹ்ஜி), எம்.எம். செய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி) ஆகியோர் தலைமையில் இடம்பெறும். சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்படி மஜ்லிஸ் நடைபெறுகிறது.

இதில் தொடர்ந்து 9 நாட்கள் மனாகிப் மஜ்லிஸ் இடம்பெறுவதோடு, உலமாக்களினால் மார்க்க உபன்னியாசங்களும் நிகழ்த்தப்படும். ஆரம்ப நிகழ்வில் மாத்தறை மின்னத்துல் பாஸிய்யா அரபிக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி அஷ்ஷெய்யித் பஸ்மின் மௌலானா (முர்ஸி) உரைநிகழ்த்துவார். தொடர்ந்துவரும் நாட்களில் மௌலவி எம்.என்.எம். இக்ராம் (பாஸி), அஷ்ஷெய்க் இஹ்சானுத்தீன் அபுல்ஹசன் (நளீமி),



மௌலவி எம்.எஸ்.எம். அஹ்மத் (மஹ்ழரி), மௌலவி எம்.ஜே.எம். பஸ்லான் (அஷ்ரபி), மௌலவி எம்.எஸ்.எம். அப்துல்லாஹ் (ரவ்ழி), எம். முஸாஹிர் (அலவி), கலீபத்துஷ்ஷாதுலி மௌலவி உஸ்தாத் எம்.எஸ்.எம். இஸ்திகார் (பாரி), மௌலவி ஐ.எம். பாரூக் (மக்கி) ஆகியோர் உரையாற்றுவதோடு 18ஆம் திகதி மாலை நடைபெறும் தமாம் வைபவத்தில் கலீபத்துஷ் ஷாதுலிகளான மௌலவி எம்.இஸட். ஸூஹ்ர் (பாரி), மௌலவி அஷ்ஷெய்யித் அலவி மௌலானா (முர்சி) ஆகியோர் உரையாற்றவுள்ளதாக சீனன்கோட்டை பள்ளிச்சங்க இணைச் செயலாளர் அல்ஹாஜ் எம்.எம். சிஹாப் தெரிவித்தார்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்க தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியாரின் வழிகாட்டலின்கீழ் இடம்பெறும் இம்மஜ்லிஸில் கலீபாக்கள், உலமாக்கள், முகத்தமீன்கள், இஹ்வான்கள் பங்குபற்றுவர். தினமும் இடம்பெறும் மனாகிப் மஜ்லிஸில் ஆத்மீக ஞானி இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஆன்மீகப் பணிகள் பற்றிய விசேட மார்க்கச் சொற்பொழிவாற்றுவர்.

ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஸ்தாபகர் அல் குத்புல் அக்பர் இமாம் அபுல்ஹசன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் 850ஆவது ஜனன தினத்தை முன்னிட்டும் ஷாதுலிய்யா மஷாயிகுமார்களின் ஞாபகார்த்தமாகவும் இம்மஜ்லிஸ் இடம்பெறுகிறது.

## நபிகள் நாயகம் குறித்த சர்ச்சை கருத்து:

# இந்தியாவில் தற்கொலை தாக்குதல் நடத்துவோம்!

### அல்-கொய்தா மிரட்டல் எச்சரிக்கை

இந்தியாவின் மும்பை, டில்லி உத்தரப்பிரதேசம் மற்றும் குஜராத் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தப்போவதாக அல்-கொய்தா தீவிரவாத அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது.

பா.ஜ.க. முன்னாள் செய்தித் தொடர்பாளர் நுபுர் சர்மா மற்றும் பா.ஜ.கவைச் சேர்ந்த நவீன் ஜின்டாலின் நபிகள் நாயகம் குறித்த சர்ச்சைப் பேச்சுக்கு பழிவாங்கும் விதமாக அல்கொய்தா தீவிரவாத அமைப்பு இந்த எச்சரிக்கை விடுத்துள்ளது.

அல்-கொய்தா இன் சப் கான்டினன்ட் (AQIS) என்ற தீவிரவாத அமைப்பின் சார்பில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜூன் 6ஆம் திகதியிடப்பட்ட மிரட்டல் கடிதத்தின் விவரம் வெளியாகியுள்ளது. அந்தக் கடிதத்தில்,

''நபிகள் நாயகத்தையும் அவரது மனைவியையும் இந்திய தொலைக்காட்சியில் பெண்ணொருவர் மிகவும் இழிவாகப் பேசியுள்ளார். அதனால் உலகிலுள்ள முஸ்லிம்களின் இதயத்திலிருந்து குருதி வழிகிறது. எங்கள் மனங்களில் இப்போது அவரைப் பழிவாங்கும் எண்ணம் மேலோங்கியுள்ளது. முகமது நபியை அவமதிப்பவர்களைக் கொல்வோம். அதற்காக நாங்களும், எங்களது குழந்தைகளும் தற்கொலைப் படைகளாக மாறுவோம். எங்கள் தாக்குதலிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. வீட்டில் இருந்தாலும் சரி, இராணுவத்தின் பாதுகாப்பு அரணில் இருந்தாலும் சரி நாங்கள் தாக்குவோம். இந்தப் போரில் அனைத்து முஸ்லிம்களையும் பங்கேற்க அழைக்கிறோம்''- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நுபுர் சர்மாவுக்கு பாதுகாப்பு**

முன்னதாக நபிகள் நாயகம் குறித்து சர்ச்சைக்குரிய விதத்தில் கருத்து தெரிவித்த பா.ஜ.க. முன்னாள் செய்தித் தொடர்பாளர் நுபுர் சர்மா, தனக்கு கொலை மிரட்டல்கள் வருவதாக பொலிஸில் முறைப்பாடளித்துள்ள நிலையில் அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

நூபுர் சர்மா தெரிவித்த சர்ச்சை கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து முஸ்லிம் அமைப்பினர் பலர் போராட்டம் நடத்தி வருகின்றனர். வளைகுடா நாடுகள் பல தங்கள் கண்டனங்களை தெரிவித்துள்ளன. இந்நிலையில், நுபுர் சர்மா அரச அதிகாரி அல்ல என்பதால், அவரது சர்ச்சை கருத்து மத்திய அரசின் நிர்வாகத்தில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை எனவும், வளைகுடா நாடுகளுடனான நல்லுறவு தொடரும் எனவும் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.கவின் முன்னாள் செய்தித் தொடர்பாளர் நுபுர் சர்மா, கியான்வாபி பள்ளிவாசல் சர்ச்சை தொடர்பான தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியில் பங்கேற்று, நபிகள் நாயகம் குறித்து சர்ச்சைக்குரிய விதத்தில் பேசினார். அதனையடுத்து தொழிலதிபரும், பா.ஜ.கவைச் சேர்ந்தவருமான நவீன் குமார் ஜிண்டாலும் அதேபோன்றதொரு சர்ச்சைக் கருத்தை ட்விட்டரில் வெளியிட்டு பின்னர் நீக்கினர்.

இந்த இரண்டு விடயங்களையும் கண்டித்து கடந்த வாரம் வெள்ளிக்கிழமை உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூரில் கண்டன ஊர்வலம் நடந்தது. அந்த ஊர்வலம் கல்வீச்சு வன்முறையில் முடிந்தது. இதனையடுத்து நுபுர் சர்மா, நவீன் ஜிண்டால் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தே நீக்கப்பட்டனர்.

சர்ச்சை கருத்துக்கு கட்டார், குவைத், ஓமன், சவூதி அரேபியா, ஈரான், ஈராக், பஹ்ரைன், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்தோனேஷியா, ஐக்கிய அரபு இராச்சியம், ஜோர்தான், லிபியா, மாலைதீவுகள் மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட 15 இஸ்லாமிய நாடுகள் தங்களின் கண்டனங்களை பதிவு செய்துள்ளன.

இந்த விவகாரம் உலகளவில் இந்தியாவுக்கு எதிரான கண்டனங்கள் குவிய முக்கிய காரணமாகிவிட்டது. இதில் குறிப்பாக, அரபு நாடுகளிலிருந்து வந்துள்ள அழுத்தம், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



டுபாய், கட்டார் உள்ளிட்ட நாடுகள் இந்த விவகாரத்தில் கண்டனம் தெரிவித்துள்ளன. இது குறித்து விளக்கமளிக்குமாறு அந்நாடுகளின் இந்தியத் தூதுவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளன. சவூதி அரேபியா, பஹ்ரைன், குவைத், கட்டார் உள்ளிட்ட 15 இஸ்லாமிய நாடுகள் இந்தியாவுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன. அரபு நாடுகளின் எதிர்ப்புக் குரல்கள் இந்தளவுக்கு ஆட்டம் காணச் செய்திருப்பதற்கு முக்கிய காரணம், இந்த நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தக உறவுதான். வெளிநாடுகளுக்கு வேலை தேடிச்செல்லும் இந்தியர்களில் பெரும்பாலானோர், அரபு நாடுகளில்தான் தஞ்சமடைந்துள்ளனர்.

**வளைகுடாவில் 89 இலட்சம் இந்தியர்கள்**

இந்தியர்கள் பலரின் முக்கிய வாழ்வாதாரமாக சவூதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளன. வளைகுடா நாடுகளில் மொத்தம் 89 இலட்சம் இந்தியர்கள் உள்ளனர். குறிப்பாக, ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள இந்தியர்களின் எண்ணிக்கை 34,25,144. இது அந்த நாட்டின் மக்கள் தொகையில் 34.6 சதவீதம். இதுபோன்றே, குவைத்தில் 10,29,861 பேர், அதாவது, அந்நாட்டு மக்கள் தொகையில் 24.1 சதவீதம் பேர் இந்தியர்களாக உள்ளனர்.

இதுதவிர, ஓமானில் 7,81,141 பேர், கட்டாரில் 7,46,550 பேர், பஹ்ரைனில் 3,26,658 பேர் என அந்நாட்டின் மக்கள் தொகையில் மிக குறிப்பிடத்தக்க அளவுக்கு இந்தியர்கள் உள்ளனர்.

ஜோர்தான், ஈராக், லெபனானில் குறைந்த எண்ணிக்கையிலான இந்தியர்கள்தான் பணி புரிகின்றனர். ஐக்கிய அரபு இராச்சியம், டுபாய், குவைத், கட்டார், பாகிஸ்தான் உள்ளிட்ட 15 நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளதோடு, அங்குள்ள இந்தியத் தூதுவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளன.

**இந்தியப் பொருட்கள் புறக்கணிப்பு**

மேலும், இந்தியப் பொருட்களும் புறக்கணிக்கப்பட்டன. இந்த நாடுகளிலுள்ள பெரிய சூப்பர் மார்க்கெட்கள் உள்ளிட்ட வற்றில் விற்பனைக்கு வைத்திருந்த இந்தியப் பொருட்களை அப்புறப்படுத்திவிட்டனர். சில இடங்களில், இந்தியப் பொருட்களை மூடி வைத்துவிட்டு, அவை விற்பனைக்கு அல்ல எனவும் எதிர்ப்புகளை பதிவுசெய்துள்ளனர். இதுமட்டுமன்றி, இந்தியர்களும் அங்கு சூப்பர் மார்க்கெட்கள் வைத்துள்ளனர். இவையும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இதனால்தான், அரபு நாடுகளின் எதிர்ப்பு, அங்குள்ள இந்தியர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்குமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

மேலும், இந்தியாவின் மசகு எண்ணெய் தேவையில் பெரும் பகுதி இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. இதிலும் வளைகுடா நாடுகளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அதாவது, இந்தியாவின் மசகு எண்ணெய் இறக்குமதியில் ஈராக்கின் பங்களிப்பு 22 சதவீதமாகவுள்ளது. பிற நாடுகளைப் பொறுத்தவரை, சவூதி அரேபியா 19 சதவீதம், ஐக்கிய அரபு இராச்சியம் 9 சதவீதம், குவைத் 5 சதவீதம், ஈரான் 2 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ளன. இந்தியர்களின் வாழ்வாதாரம் ஒருபுறம், வர்த்தக உறவு மறுபுறம் என இந்தியாவுடனான அரபு நாடுகளின் உறவு பின்னிப் பிணைந்ததாக உள்ளது.

எப்படியிருப்பினும் அரபு நாடுகள் இந்தியாவால் சற்றும் புறக்கணிக்க முடியாத அளவுக்கு இந்தியாவுடன் வர்த்தக ரீதியான உறவைக் கொண்டுள்ளது. மேலும், வர்த்தக வாய்ப்புகள் மட்டுமன்றி பல இலட்சம் இந்தியர்களின் வாழ்வாதாரமும் இதில் அடங்கியுள்ளதால், வெறுப்பு பேச்சுகளால் இவற்றுக்கு பங்கம் ஏற்பட்டுவிடாத அளவுக்கு இந்திய மத்திய அரசு தீர்வு காணவேண்டும் என்பதை அரசியல் நோக்கர்களும், வர்த்தக உறவை மேம்படுத்த ஆர்வம் காட்டும் சந்தை நிபுணர்களும் வலியுறுத்துகின்றனர்.

### 106ஆவது நாளாகவும் தொடரும் போர்

## உக்ரைனின் லுஹான்ஸ்க் பகுதியில் 97 வீத நிலப்பரப்பு ரஷ்யா வசம்

உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல் இன்று 106ஆவது நாளாகவும் தொடர்ந்தும் இடம்பெற்றுவருகிறது. இந்நிலையில், கிழக்கு உக்ரைனின் லுஹான்ஸ்க் பிராந்தியத்தில் 97 சதவீத நிலப்பரப்பு தங்களின் வசமாகியுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.



நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. ரஷ்யத் தாக்குதலால் உக்ரைன் தலைநகர் கீவ் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளன.

இந்நிலையில், உக்ரைனின் மரியுபோல் நகரின் கடைசி கோட்டையாக இருந்த உருக்காலை வீழ்ந்துவிட்டது. கட்டட இடிபாடுகளிலிருந்து உக்ரைன் படை வீரர்களின் ஏராளமான உடல்கள் மீட்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக தலைநகர் கீவ்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. உக்ரைனின் மற்றொரு நகரமான கெர்சனும் ரஷ்யா வசமாகியுள்ளது. கெர்சனை ரஷ்யாவுடன் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நகரத்தில் ரஷ்ய கரன்சியான ரூபிளை புழக்கத்தில் விடவும் ரஷ்யா முயற்சிசெய்து வருகிறது.

கிழக்கு உக்ரைனில் லுஹான்ஸ்க் பிராந்தியத்தில் 97 சதவீத நிலப்பரப்பை கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிட்டதாக ரஷ்யா அறிவித்துள்ளது. ஓரிரு நாட்களில் எஞ்சிய பகுதிகளும் தன்வசமாகும் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது. இதனிடையே ரஷ்யாவின் ஆக்கிரமிப்பிலிருந்து நகரங்களை மீட்க உக்ரைன் படைகள் போராடி வருவதாக தெரிவித்த அந்நாட்டு ஜனாதிபதி ஸெலென்ஸ்கி, இதுவரை 31 ஆயிரம் ரஷ்ய வீரர்கள் வீழ்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கிழக்கு உக்ரைனில் செமிரோ, டோனட்ஸ், லிஸி சான்ஸ் நகரங்களின் பெரும் பகுதிகள் ரஷ்யப் படைகளின் தாக்குதல்களால் அழிக்கப்பட்டுள்ளன. தென்கிழக்கு நகரமான ஜபோரிஜியா நகரையும் கைப்பற்ற ரஷ்யப் படைகள் குறிவைத்து முன்னேறி வருகின்றன. இதனால் அங்கு வசிக்கும் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பீதியடைந்துள்ளனர் என ஸெலென்ஸ்கி தெரிவித்திருக்கிறார்.

**1.5 பில்லியன் டொலர் நிதியுதவி**

பெரும் பாதிப்பை சந்தித்துள்ள உக்ரைனுக்கு அடுத்த சில மாதங்கள் பொருளாதார ரீதியாக தாக்கு பிடிக்க 1.5 பில்லியன் டொலர் நிதி உதவி தொகுப்பை வழங்குவதாக உலக வங்கி அறிவித்தது.

இத்தொகை மூலம் அரசு மற்றும் சமூக ஊழியர்களுக்கு ஊதியம் உள்ளிட்டவற்றை உக்ரைன் அரசு வழங்க முடியும் என தெரிவித்துள்ளது.

ரஷ்யாவிற்கு எதிரான போரில் உக்ரைனுக்கும், அந்நாட்டு மக்களுக்கும் தொடர்ந்து ஆதரவை அளிக்கும் என்று உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸ் தெரிவித்துள்ளார்.




உலக பெருங்கடல் தினத்தை முன்னிட்டு பிரபல மணற்சிற்ப ஓவியரான சுதர்ஷன் பட்நாயக் பூரி கடற்கரையில் கடல் பாதுகாப்பு, கடல் மாசு தவிர்ப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தமது மணற்சிற்பத்தை வடிவமைத்திருந்தார்...

### இன்னும் ஓரிரு நாட்களில்...

## இந்திய ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு: தீவிர ஆலோசனையில் அரசியல் கட்சிகள்!



இந்திய ஜனாதிபதித் தேர்தலுக்கான (குடியரசுத் தலைவர்) திகதியை தேர்தல் ஆணையம் இன்னும் ஓரிரு நாட்களில் அறிவிக்கவுள்ளது. தங்கள் தரப்பு வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பது குறித்து பா.ஜ.க., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் முக்கிய ஆலோசனை நடத்தி வருகின்றன.

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூலை 24ஆம் திகதியுடன் முடிவடையவுள்ள நிலையில், அதற்கு முன்னதாக தேர்தலை நடத்தி முடிக்கும் பணியில் தேர்தல் ஆணையம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

57 மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தல் 10ஆம் திகதி நிறைவுபெறுகிறது. புதிதாக தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட எம்.பிக்களும் அனைத்து மாநில எம்.எல்.ஏக்களும் வாக்களித்து குடியரசுத் தலைவரைத் தெரிவுசெய்யவுள்ளனர்.

அடுத்த ஓரிரு நாட்களில் தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிடவுள்ளது. குடியரசுத் தலைவர் தேர்தலில் பொது வேட்பாளரை அறிவிப்பது குறித்து, கூட்டணி மற்றும் இதர கட்சிகளுடன் காங்கிரஸ் கட்சி ஆலோசித்து வருகிறது.

அதேநேரம், திரிணாமுல் காங்கிரஸ், சிவசேனா கட்சிகள் ஆதரவுடன் தேசிய வாத காங்கிரஸ் தலைவர் சரத் பவாரின் பெயர் வேட்பாளராக இடம்பெறலாம் என தகவல் வெளியாகிவுள்ளது.

பா.ஜ.கவின் உயர்மட்டத் தலைவர்களும் வேட்பாளராக யாரை அறிவிப்பது என்று தீவிர ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

# உலக செய்திகள்

## சீனாவை புரட்டிப் போட்ட கடும் மழை - பெருவெள்ளம்

### 8 இலட்சம் பேர் நிர்க்கதி; நீரில் மூழ்கிய 80 மாவட்டங்கள்



சீனாவின் ஜியாங்சியில் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் 8 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த சில நாட்களாக பெய்துவரும் தொடர் கனமழையால் 80 மாவட்டங்களில் நீரில் மூழ்கியுள்ளன.

மழையை அடுத்து ஏற்பட்ட மண்சரிவால் பல பகுதிகளில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு, தனிதனித் தீவுகளாக மாறியுள்ளன.

கடும் மழை தொடர வாய்ப்புள்ளதால் மக்களை வீடுகளை விட்டு வெளியேறி, பாதுகாப்பு முகாம்களுக்கு செல்லுமாறு அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது.

## ஜம்மு காஷ்மீரில் 24 மணிநேரத்துள் 4 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை



ஜம்மு காஷ்மீரில் 24 மணி நேரத்தில் 2 பாகிஸ்தானியர்கள் உட்பட நான்கு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ட்ரோன் மூலம் வெடிகுண்டுகள் விநியோகம் செய்ய திட்டமிட்ட சதி முறியடிக்கப்பட்டுள்ளது. லாகூரை சேர்ந்த லஷ்கர் தீவிரவாதிகள் துஃபைல் மற்றும் ஹன்சுலா ஆகியோரை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

குல்காம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் உட்பட மேலும் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இதனிடையே வெடிகுண்டுகளை ஏற்றிவந்த ட்ரோனை எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் சுட்டு வீழ்த்தியுள்ளனர். அதில் இருந்த 3 வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலயம்

# வொலிபோல் சம்பியனாக தெரிவு!

(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட நிந்தவூர் கமு/இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலயம், வலய மட்ட பெருவிளையாட்டு வொலிபோல் போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 72 வருடகால பாடசாலை வரலாற்றில் வலய மட்டத்தில் பெரு விளையாட்டு நிகழ்வொன்றில் இப்பாடசாலை முதன் முறையாக 16 வயது பிரிவு ஆண்களுக்கான வொலிபோல் விளையாட்டில் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டு பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளது.



கல்முனை கல்வி வலயத்தில் இவ்விளையாட்டின் பெரும் தூண்களான நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை, கல்முனை வெஸ்லி உயர் தர பாடசாலை மற்றும் அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை ஆகிய பாடசாலைகளின் அணிகளை வீழ்த்தி இவ் வெற்றியை பதிவுசெய்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணியுடன் புதிய சாதனை படைத்த வோர்னர்

சுற்றுலா அவுஸ்திரேலியா - இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் ஆஸி. அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் இலங்கை அணிக்கு எதிராக புதிய சாதனை ஒன்றை படைத்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் ஆஸி. அணி ஆரோன் பிஞ்ச் மற்றும் டேவிட் வோர்னர் ஆகியோரின் அபார இணைப்பாட்டம் மூலம் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. குறித்த போட்டியில் டேவிட் வோர்னர் ஒரே எதிரணிக்கு எதிராக தொடர்ந்து ஐந்து இருபதுக்கு 20 போட்டிகளில் அரைச்சதம் அடித்த முதல் துடுப்பாட்ட வீரரானார்.

இலங்கைக்கு எதிரான கடைசி ஐந்து இருபதுக்கு 20 போட்டிகளில் வோர்னர் பெற்ற ஓட்டங்கள் பின்வருமாறு.

2022 - 58%, 2021 - 65%, 2019 - 57% 2019 - 60%, 2019 - 100%

வோர்னரைத் தவிர, நான்கு இருபதுக்கு 20 இன்னிங்ஸ்களில் இரண்டு பேட்ஸ்மேன்கள் இதற்கு முன்பு இதே போன்று ஒரே எதிரணிகளுக்கு எதிராக அரைச்சதம் அடித்துள் ளனர். விராட் கோஹ்லி இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தொடர்ந்து 4 தடவை 50இற்கு மேற்பட்ட ஓட்டங்களை அடித்துள்ளார். போல் ஸ்டெர்லிங் ஸ்காட்லாந்துக்கு எதிரான போட்டியில் தொடர்ந்து 4 முறை அடித்துள்ளார்.



# அலரி மாளிகைக்குள்....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ரணிலிடம் மன்றாட்டம்**

மே 9ஆம் திகதி. நிறைகிறது கூட்டம் அலரிமாளிகையில்...

உஷாராகிறார் மஹிந்த கூட்டத்தைக் கண்டதும்...

மஹிந்த என்ன பேச வேண்டும்...எப்படிப் பேச வேண்டும் ...

பேச்சைத் தயாரித்து வைத்திருக்கிறார் ஜோன்ஸன்.

அந்தப் பேச்சுதான் மஹிந்தவின் உரை.

பேச்சின் முக்கிய அம்சமே அவர் விலகமாட்டார் என்பதுதான்.

கூட்டம் முடிந்துவிட்டது..

இப்போது மைனா கோ கம, கோட்டா கோ கம இரண்டின்மீதும் தாக்குதல் நடத்த ஏற்பாடு..

இதைத் தடுக்க வேண்டும். இல்லையேல் எமக்கே ஆபத்தைக் கொண்டுவரும்.

ஜனாதிபதியைத் தொடர்புகொள்கிறார்கள் பொதுஜன பெரமுன எம்.பிக்கள் சிலர்.

முடியவில்லை...

மாற்றுவழி...?

தொடர்புகொள்கிறார்கள் ரணிலை....லைனுக்கு வருகிறார்.

விளக்குகிறார்கள் விபரீதத்தை....

மஹிந்தவிடம் கூறி இதை நிறுத்தச் சொல்லுங்கள் என்கிறார் ரணில்.

நாங்கள் சொல்லி கேட்கும் நிலையில் அவர் இல்லை. ஜனாதிபதியைத் தொடர்புகொள்ளும் வாய்ப்பும் இப்போது இல்லை. நீங்களே மஹிந்தவிடம் சொல்லுங்கள். இல்லையேல் ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்.... என்கிறார்கள்.

அவ்வாறே செய்கிறார். தொடர்புகொள்கிறார் ஜனாதிபதியை.

உடனே லைனுக்கு வருகிறார் அவர்.

தாக்குதல் திட்டம் பற்றிக் கூறுகிறார்.

''கோட்டா கோ கம போராட்டம் அமைதியான முறையில் இடம்பெறுகிறது. அவர்களால் யாருக்கும் எந்த இடையூறும் இல்லை. இதனால் அந்தப் போராட்டத்துக்கு நாடுபூராகவும் ஆதரவு உண்டு.அதில் கை வைக்க வேண்டாம். கை வைத்தால் நாடு பற்றி எரியும்'' என்றார் ரணில்.

அதை ஏற்றுக்கொள்கிறார் கோட்டா. பின்னர் அவரை சந்திக்க வருமாறு கூறுகிறார்.

**ஜனாதிபதியின் உத்தரவையும் மீறித் தாக்குதல்**

இப்போது நுழைகிறார்கள் மஹிந்தவின் காடையர்கள் மைனா கோ கம, கோடா கோ கம பகுதிக்குள். கடும் தாக்குதல் அங்குள்ளவர்கள் மீது...

தடுப்பதற்கு ஒருபுறம் ஜனாதிபதி நடவடிக்கை. மறுபுறம் காடையர்களின் தாக்குதல்.

ஜனாதிபதி உத்தரவிட்டும் ஏன் அதை பொலிஸார் தடுக்கவில்லை ?

மேல் மாகாணத்துக்கு பொறுப்பாகவிருந்த பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அதற்கான காரணத்தை சி.சி.டியினரிடம் விளக்கியுள்ளதை பின்னர் நாம் அறிந்தோம்.

தாக்குதல் முடிந்துவிட்டது. அங்கிருந்து வெளியேறுகிறார்கள் அந்தக் காடையர்கள்.

தொலைக்காட்சிகளில் சமூக ஊடகங்களில் நேரடி ஒளிபரப்பு இவை.

அவ்வளவுதான்...

பொங்கி எழுகிறார்கள் அதைப் பார்த்த மக்கள்.

சற்றும் எதிர்பார்க்கவில்லை.

உடனே எதிர் விளைவு. எல்லோரும் வீதிக்கு விரைகிறார்கள் காலிமுகத்திடலை நோக்கி...

அலரி மாளிகை பகுதியை நோக்கி...

பேர வாவி பகுதியில் தாக்குதல்.

பஸ்கள் மீண்டும் அலரி மாளிகைக்குள்.

உடனடியாகத் திருப்பி அழைத்த மஹிந்த.

அப்போது அலரி மாளிகையில் இருந்து வெளியேறுகின்றன பஸ்கள்.

பின் வழியாக...பேர வாவி வழியாக...

கூட்டத்துக்கு வந்தவர்களும் தாக்குதல் நடத்திய காடையர்களும் அந்த பஸ்களில்...

அவற்றை மறிக்கிறார்கள் மக்கள். தாக்குதல் அந்த பஸ்கள்மீது...

தகவல் கிடைக்கிறது மஹிந்தவுக்கு...

கதவைத் திறந்து பஸ்களை உள்ளே எடுங்கள். அவர்கள் எங்கள் மக்கள். காப்பாற்றுங்கள்.

உத்தரவிடுகிறார் மஹிந்த அங்கிருந்தவர்களிடம்...

அவ்வாறே நடக்கின்றன...

முன் சென்ற பஸ்கள் சில சிக்க...பின் சென்ற பஸ்கள் வருகின்றன பின்னோக்கி...

அதிகமான மக்கள் அந்த பஸ்களில்....500இற்கு மேல்...

**மஹிந்தவின் தனி அறைகளிலும் மக்கள்... அவரது உயிருக்கு அச்சுறுத்தல்...**

உள்நுழைகிறார்கள் மக்கள். யார் வருகின்றார்கள் என்றே தெரியவில்லை.

இதனால் பாதுகாப்புப் பிரச்சினை அங்கு. பாதுகாப்பு அதிகாரிகள் தடுமாற்றம்..

எல்லோருக்கும் மரண பயம். ஒரே பதற்றம்.

தாக்குதல்தாரிகள் உள்ளே நுழைந்துவிடுவார்களோ என்ற அச்சம்.

எல்லா இடங்களிலும் மக்கள். மாளிகைக்கு உள்ளே...

vip அறைகள், மஹிந்தவின் கதிரை, மேசை இப்படி எல்லா இடங்களிலும்...

மேல் மாடியில் மஹிந்தவின் அறை. அங்கு யாரும் போவதில்லை. ஆனால், அதற்குள்ளும் மக்கள்.

எதையும் உணர முடியாத தருணம்..

போகக்கூடிய அறை, போகக்கூடாத அறை என்ற வித்தியாசமெல்லாம் தெரியாது அவர்களுக்கு...

இதனால் மஹிந்தவின் உயிருக்கே ஆபத்து. தடுமாறுகிறார்கள் பாதுகாப்பு அதிகாரிகள்.

அலரி மாளிகைக்கு வெளியே நிலைமை மோசம். சுற்றி நிற்கிறார்கள் மக்கள். மாளிகைக்குள் நுழைவதற்கு...

அலரி மாளிகைக்கு நுழையும் 3 பிரதான வழிகள். அந்த வழிகளின் முன்பாக மக்கள்.

நிறைந்து நிற்கிறார்கள். உள்நுழைவதற்கு.. உள்நுழைந்து தாக்குவதற்கு.

ஒவ்வொரு கதவுக்கும் முன்பாகவும் இரண்டு வீதித்தடைகள். உடைத்தெறிகிறார்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள் அவற்றையெல்லாம்...

போராடுகிறார்கள் பாதுகாப்புப் படையினர். தடுக்கிறார்கள் அவர்களை நுழையவிடாமல்...

**ஜனாதிபதி தொடர் அழுத்தம்... கவலையோடு விலகுகிறார் மஹிந்த...**

நாடுபூராகவும் கலவரம். எதிர்பார்த்ததைவிட மோசம்.

தலையில் கை வைக்கிறார்கள் அரச எம்.பிக்கள்.

இதற்காகத்தானே கத்தினோம்... இதற்காகத் தானே வேண்டாம் என்றோம்.

புலம்புகிறார்கள்....

தலைக்குமேல் வெள்ளம். கட்டுப்படுத்த முடியவில்லை. எங்கும் கலவரம்.

பற்றி எரிகின்றன வீடுகள், வாகனங்கள்.

சாம்பலாகின்றன அரசியல்வாதிகளின் சொத்துகள். கண்முன்னே...

எப்படித் தணிப்பது...? எப்படி நிறுத்துவது...?

இப்போதாவது மஹிந்த மாற வேண்டும். தீர்மானத்தை மாற்ற வேண்டும்.

உடனே இராஜினாமா செய்ய வேண்டும்.

தொடர் அழுத்தம். ஜனாதிபதியிடமிருந்து...

வருகிறது செய்தி. ஒன்றன் பின் ஒன்றாக...

உடனே விலகுங்கள். கலவரத்தைத் தடுக்க இதுதான் வழி...

இனி முடியாது. விலகியே ஆகவேண்டும்.

பறக்கிறது இராஜினாமா கடிதம். மஹிந்தவிடம் இருந்து ஜனாதிபதிக்கு...

உடனே அறிவிக்கப்படுகிறது அந்தச் செய்தி.

இருந்தும், தணிவதாக இல்லை கலவரம்.

அதிகரிக்கிறதே தவிர குறைவதாக இல்லை.

ஒருபுறம் கலவரம். மறுபுறம் கவலை.

மஹிந்தவுக்குத்தான் அந்தக் கவலை. இராஜினாமா செய்ததால் வந்த கவலை.

2015 இல் தோல்வியுற்றபோதுகூட இப்படிக் கவலைப்பட்டதில்லை.

இந்த நிலைமையிலும்கூட....பதவியை விட மனமில்லை அவருக்கு...

**மஹிந்தவின் அச்சத்தை நீக்கிய பட்டாசு வெடி**

இரவாகிவிட்டது. ஆனால், நிலைமை மோசம். அலரி மாளிகையின் நிலைமை.

எந்நேரமும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழையலாம். எதுவும் நடக்கலாம். மஹிந்தவின் உயிரையும் பறிக்கலாம்.

மாளிகையைச் சுற்றி ஆர்ப்பாட்டக்காரர்கள். பெரும் கோஷத்தோடு...

பாதுகாப்பும் அவ்வளவு இறுக்கமில்லை...

இப்போது அடுத்த சம்பவம். அனைவரையும் அச்சத்தில் உறைய வைக்கும் சம்பவம்.

அது...?

பற்றி எரிகிறது ஒரு கதவு. ஆம்...தீ வைத்துவிட்டார்கள்.

அத்தோடு விடவில்லை. உடைக்கிறார்கள் கதவை. உள்நுழைவதற்காக..

பலமாகக் கேட்கிறது அந்தச் சத்தம். கதவை உடைக்கும் சத்தம்.

தூக்கிப்போடுகிறது உள்ளே இருப்பவர்களை...

அதிகரிக்கிறது அச்சம்.

நுழைந்துவிடுவார்களோ...!!! அடித்துக் கொன்றுவிடுவார்களோ...!!!

மஹிந்தவின் காதுகளிலும் அந்தச் சத்தம். வீழ்கிறது பலமாக...

விசாரிக்கிறார்.

என்ன அது...என்ன சத்தம்...?

அருகில் உதயங்க வீரதுங்க.பதிலளிக்கிறார் உண்மையை மறைத்து..

மஹிந்த கலவரமடைவார் என்பதால்...

அது பட்டாசு வெடி சுடும் சத்தம்...

மீண்டும் கேட்கிறார் மஹிந்த.

ஏன்...பட்டாசு சுடுகிறார்கள்...நான் பதவி விலகியதற்காகவா...?

இருக்கலாம் என்கிறார் உதயங்க...

பல எம்.பிக்கள் அங்கே. மஹிந்தவுக்கு அருகில்...அவருக்கு ஆறுதலாக...

**மஹிந்தவைப் பாதுகாக்க 150 இராணுவம் போதுமா...?**

அப்போது மஹிந்தவைத் தொடர்புகொள்கிறார் அப்போதைய இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா.

பயப்பட வேண்டாம் சேர். உங்களுக்கு எதுவும் நடக்காது. உங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். பாதுகாப்புக்காக 150 இராணுவத்தை அனுப்புகிறேன் என்கிறார்.

150 இராணுவம் போதுமா...?

அவர்களை மூன்று கதவுகளுக்கும் மூன்றாக பிரித்து நிறுத்தினால் ஒவ்வொரு கதவுக்கும் 50 இராணுவம்தான்.

50 பேரால் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கட்டுப் படுத்த முடியாது.

மஹிந்தவிடம் எடுத்துக் கூறுகிறார் உதயங்க வீரதுங்க.

மேலும், அவர்களுக்கு சுடுவதற்குக்கூட அனுமதி இல்லை என்கிறார்.

கண்ணீர்ப்புகை அடிக்கிறார்கள் பொலிஸார். இருந்தாலும், அதுவும் தட்டுப்பாடு.

இந்த நிலையில் எப்படி மஹிந்தவைப் பாதுகாப்பது...?

இப்போது இராணுவத் தளபதி, பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன, பொலிஸ் மா அதிபர் எல்லோரையும் தொடர்புகொள்கிறார்கள் மஹிந்த தரப்பினர்.

விளக்குகிறார்கள் நிலைமையை...

150 இராணுவம் போதாது. அதிகரிக்க வேண்டும் என்கிறார்கள்.

அப்போது கமல் குணரத்ன பேசுகிறார் மஹிந்தவோடு...

"சேர் பயப்பட வேண்டாம்.. உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது. உங்களை பாதுகாக்கின்ற ஓப்பரேஷனில்தான் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்..." என்கிறார்.

அப்போதுதான் மஹிந்தவின் முகத்தில் ஓரளவு புன்னகை. நம்பிக்கை புன்னகை.

பசியால் வாடிய மக்கள்...

நள்ளிரவில் சமைத்துப் பரிமாறிய ஷிரந்தி...

பேர வாவியில் சிக்கியவர்களுக்கும் அலரி மாளிகையில் இருந்தே உணவு...

காலையில் கூட்டத்துக்கு எதிர்பார்த்தது 2 ஆயிரம் பேரைத்தான்.

ஆனால், வந்ததோ அதைவிட அதிகம்.

இதனால் கதிரைகள் தட்டுப்பாடு. மேடைகளிலும் மக்கள்.

பகல் சாப்பாடு கொடுப்பதே பெரும் சிரமமாக இருந்தது. ஓரளவு சமாளிப்பு.

இந்த நிலையில், இப்போது 500இற்கு மேற்பட்டோர் அலரி மாளிகைக்குள்...

இரவுச் சாப்பாட்டுக்கு என்ன செய்வது? அறவே இல்லை. எடுப்பதற்கு எந்த வகையிலும் வாய்ப்பில்லை. கடைகளும் இல்லை.

எல்லோரும் பட்டினிதான். வேறு வழியில்லை...

உண்மையில் சாப்பாடுமீது இல்லை மக்களின் கவனம்.

எல்லோரும் மரண பயத்தில்...பசி இல்லை. உயிர்தான் முக்கியம்.

மஹிந்தவுக்கு மட்டும் கொஞ்சம் சாப்பாடு. அவர் மாத்திரை உட்கொள்ள வேண்டும். அதற்காக...

அதைக் காதில் போடுகிறார் உதயங்க வீரதுங்க.

அதைச் சரியாக புரிந்துகொள்ளவில்லை மஹிந்த.

அங்கே மக்கள் சாப்பிடாமல் இருக்கும்போது நான் மட்டும் எப்படி சாப்பிடுவது? எல்லோரும் ஒன்றாக சாப்பிடுவோம் என்கிறார்.

திரும்பவும் மெல்லக் காதில் ஊதுகிறார்.

எல்லோருக்கும் கொடுக்க உண்மையில் சாப்பாடு இல்லை.

இதைக் கேட்டு கோபப்படுகிறார் மஹிந்த...

இதை மக்கள் கண்டா என்ன நினைப்பாங்க. நான் தனியே வந்து ஒளிந்து சாப்பிடுகிறேன் என்று அல்லவா நினைப்பாங்க. இப்படிச் செய்ய வேண்டாம்.

கத்துகிறார்.

எல்லோருக்கும் சாப்பாடா...? எங்கே போவது?

நாடுகிறார்கள் ஷிரந்தி ராஜபக்ஷவை. மஹிந்தவின் பாரியாரை...

சக்ஸஸ்...

அந்த நேரத்தில் அனைவருக்கும் சமைத்துக் கொடுக்கும் நிலையில் அவர்...

ஏனையவர்களின் உதவியும் கிடைக்க... 2 மணிநேரத்தில் சாப்பாடு ரெடி.

தன் கையாலேயே சமைத்துப் போடுகிறார் ஷிரந்தி...

பருப்பு, தேங்காய் சம்பல் மட்டும்தான் கறி.

கிட்டத்தட்ட 500 பேர் அங்கே. அனைவருக்கும் சாப்பாடு தயார் செய்து முடிக்கும்வரை மஹிந்த சாப்பிடவில்லை.

அதுவரை பவித்ரா வன்னியாரச்சி, காஞ்சன ஜயரத்ன, சி.பி.ரத்னாயக்க ஆகியோருடன் மஹிந்த உரையாடல்..

இதில் முக்கியமான விடயம்.

பேர வாவி பக்கம் சிக்கி இருப்பவர்களுக்கும் சாப்பாடு. அலரி மாளிகையில் இருந்தே செல்கிறது.

மஹிந்தவின் ஏற்பாட்டில்..

பசி ஆறுகிறார்கள் அனைவரும். கூடவே மஹிந்தவும்...

**தொடர்ந்தும் அலரி மாளிகையில் இருக்க முடியாது... மஹிந்தவைப் பாதுகாக்க அடுத்த திட்டம்**

இப்போது அதிகரிக்கிறது பாதுகாப்பு. அலரி மாளிகைக்கான பாதுகாப்பு.

இராணுவ வீரர்கள் 300 பேர் மாளிகையைச் சுற்றி...

ஓரளவு நிம்மதி மஹிந்தவுக்கு...மாளிகையில் உள்ளவர்களுக்கு...

இருந்தும், இது தற்காலிக ஏற்பாடுதான். மஹிந்தவைத் தொடர்ந்து அங்கே வைத்திருக்க முடியாது.

வகுக்கிறார்கள் திட்டம் ஒன்றை. ஜனாதிபதியும் பாதுகாப்பு செயலரும் சேர்ந்து...

வேறொரு பாதுகாப்புத் திட்டம்.

விடியும் முன் மஹிந்தவை அங்கிருந்து தூக்குதல். திருமலை கடற்படை முகாமில் தங்கவைத்தல். குடும்பத்தோடு...

இதுதான் திட்டம்.

மஹிந்தவை தொடர்புகொள்கிறார் பாதுகாப்பு செயலர்.

விவரிக்கிறார் திட்டத்தை. சம்மதிக்கிறார் மஹிந்த...

காலை நான்கு மணிக்கு வெளியாக வேண்டும். விமானப்படை வீரர்கள் வந்து அழைத்துச் செல்வார்கள். தயாராக இருங்கள்.

சரி என்கிறார் மஹிந்த...

காட்டு வழியால் தப்பியோடிய சமல் ராஜபக்ஷ எங்கே...? அவரது நிலை என்ன? தேடுகிறார் மஹிந்த...

தேடிப் பாருங்கள். உத்தரவிடுகிறார் மஹிந்த அதிகாரிகளுக்கு...

சமல் மெதமுலனவில். அவரது வீட்டில்...

வீரகெட்டிய கால்டன் அருகில் சுமார் 300 பேர்.

அங்கிருந்து கால்நடையாக வீரகெட்டிய சந்திக்கு. அங்கிருந்து மெதமுலனவிற்கு...

அவ்வாறு செல்லும்போது அதிகரிக்கிறது எண்ணிக்கை.

ஆம்...மேலும் இணைந்துகொள்கிறார்கள் மக்கள்.

அப்போது.. சமல் மெதமுலன வீட்டில்...

அந்த வீட்டை நோக்கித்தான் இந்த மக்கள்.

தகவல் கிடைக்கிறது சமலுக்கு...

உடனே பாய்கிறார் அங்கிருந்து... காட்டு வழியாக...

வேறு ஒரு வீட்டில் தஞ்சம்...அவரது ஒன்றுவிட்ட சகோதரர் வீட்டில். லக்ஷ்மன் ராஜபக்ஷவின் வீட்டில்...

உயிர் தப்புகிறார் சமல்...

அடுத்து பெசில்...!!!

தேடுகிறார்கள் அவரையும்.

அவர் ஒரு பாதுகாப்பான இடத்தில். தொடர்புகொள்கிறார் மஹிந்தவை அடிக்கடி...

**மூலைமுடுக்குகளில் படுத்துறங்கிய எம்.பிக்கள்**

மஹிந்தவை சற்றுநேரம் உறங்கச் சொல்கிறார்கள் எம்.பிக்கள்.

நள்ளிரவைக் கடந்துவிட்டது...

தூக்கம் எல்லோருக்கும். அவரவர் கிடைத்த கிடைத்த இடங்களில்...

சாப்பாட்டு மேசைகளில்...கதிரைகளில்...

நாமல் ராஜபக்ஷவும் ஒரு மேசையின் மேல்...

ஏனைய எம்.பிக்கள் மேசைகள்..கதிரைகள் மேல்...மூலைமுடுக்குகளில்..

பவித்ராவுக்கும் அவரது கணவருக்கும் மட்டும்தான் சொகுசு தூக்கம்.

அவர்கள் இருவரும் நல்ல சொகுசான சோபாக்கள்மீது.

ஏனையவர்கள் கண்ட கண்ட இடங்களில்..

அப்போது வெளியில் ஆர்ப்பாட்டம் சற்றுத் தணிவு.

இல்லாவிட்டால் எப்படித் தூங்குவது.

மஹிந்தவும் சிறிதுநேரம் தூக்கம்.

**பாதுகாப்பாக வெளியேறிய மஹிந்த ...!!!**

இருந்தும், நான்கு மணிக்கே எழும்புகிறார் மஹிந்த. மாளிகையை விட்டு வெளியேறுவதற்காக...

முகத்தில் கடும் கவலை.

கடும் பாதுகாப்பு. காரில் மஹிந்த. சுற்றி இராணுவம். அப்படியே வெளியே கூட்டிச் செல்கிறார்கள் மஹிந்தவை...

நாமலையும் ரோஹிதவையும் அழைக்கிறார் மஹிந்த.

இல்லை... இருக்கின்ற கூட்டத்தை பாதுகாப்பாக வீடுகளுக்கு அனுப்பிவிட்டு வருகிறோம் என்கிறார்கள்.

கொழும்பிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் திருமலை கடற்படை முகாமுக்கு...

பின்னர் ரோஹிதவும் பாதுகாப்போடு வெளியேற்றம்.

அதன்பின் நாமலும் வெளியேற்றம். அவரது மனைவியுடன்...

பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு ஹெலிகொப்டரில் ஏற்றி அனுப்பப்பட்டனர்.

**எல்லோரும் இராணுவ முகாமுக்குள் ஓடுங்கள்**

மஹிந்த வெளியேறிவிட்டார்...

ஏனையவர்களின் பாதுகாப்பு....?

அறிவுரை வழங்குகிறார் பெசில்.

எம்.பிக்கள் மக்களை அழைத்துக்கொண்டு அருகில் இருக்கும் இராணுவ முகாம் ஒன்றுக்குச் செல்லுங்கள் என்று...

மெல்ல மெல்ல தளர்கிறது பாதுகாப்பு அங்கே. மஹிந்த சென்றதும் அங்கிருந்து எப்படி வெளியே செல்வது...?

வழியை காட்டுகிறார்கள் இராணுவ அதிகாரிகள். பாதுகாப்பான வழியை... வழங்குகிறார்கள் உரிய ஆலோசனை...

வெளியேறுகிறார்கள் அதன்படியே...

அத்தோடு முடிகிறது அலரிமாளிகை காட்சி.

அடுத்த காட்சிகள் அந்த மாளிகைக்கு வெளியே இனி..

**நான்கு எம்.பிக்கள் மட்டுமே மரண வீட்டுக்கு...**

இந்த நிலையில்தான்...அந்தக் கலவரத்தில்...கொல்லப்படுகிறார் பொலன்னறுவை மாவட்ட எம்.பி. அமரகீர்த்தி அத்துகோரள.

பரிதாபம்...

அவரது இறுதிச் சடங்கில்கூட கலந்துகொள்ள முடியவில்லை சக எம்.பிக்களால்...

எல்லோரும் தலைமறைவு.

ஒருவாறு கஷ்டப்பட்டு...பதுங்கி பதுங்கி வெறும் நான்கு எம்.பிக்கள் மாத்திரமே கலந்துகொள்கிறார்கள்...

சாமர சம்பத் தசாநாயக, வசந்த யாப்பா, சுதத் மஞ்சுள, ஜயரத்ன ஹேரத் மஞ்சுள ஆகிய நால்வரே அந்த எம்.பிக்கள்.

தனியே செல்கிறார் சாமர சம்பத். அனுதாப உரை ஒன்றை நிகழ்த்த முற்படுகிறார். வீட்டார் தடுக்கிறார்கள்.

காரணம்...?

அரசியல்வாதிகளுக்கு அனுமதி இல்லை.

வசந்த யாப்பா, மஞ்சுள ஆகிய இருவரும் இறுதிக் கிரியைகள் முடிந்த பின்பே அங்கு செல்கிறார்கள்.

நாங்கள் வருவதற்கு ஜனாதிபதி செயலகத்தில் வாகனம் கேட்டோம். தாமதமாகத்தான் கிடைத்தது என்கிறார்கள்.

மரண வீட்டுக்கு பொலன்னறுவை எம்.பிக்கள்கூட செல்லவில்லை.

**மஹிந்தவுக்குப் பாதுகாப்பு இல்லம்: காடு-மேடெல்லாம் தேடல்**

இப்போது மஹிந்தவின் நிலை...?

கடும் மனஉளைச்சல். பதவி விலகலால் ஓய்வெடுக்கிறார் திருமலை கடற்படை முகாமில்...

பல நாட்களாக அங்கு..

தொடர்ந்தும் அங்கு இருக்க முடியாது. கொழும்புக்குத் திரும்ப வேண்டும். ஆனால், பாதுகாப்புப் பிரச்சினை.

பழைய வீட்டில் தங்க முடியாது. வேறொரு வீடு பார்க்க வேண்டும்.

பாதுகாப்பான வீடு...இரகசியமான வீடு.

தேடுகிறார்கள். கொழும்பில் பல இடங்களில்...

காடு, மேடெல்லாம் ஏறி...

இறுதியில்...சிக்குகிறது ஒரு வீடு.

அது முன்னாள் அமைச்சர் ஒருவரின் உத்தியோகபூர்வ இல்லம்.

அந்த வீட்டைக் கைப்பற்றுகிறார் மஹிந்த.

**மஹிந்த பயணித்த ஹெலிகொப்டருக்கான கட்டணம் 8 இலட்சம் ரூபா**

நாடாளுமன்றம் கூடுகிறது. கலந்துகொள்ள வேண்டும்.

வெளியேறுகிறார் அங்கிருந்து. 18 ஆம் திகதி. விமானப்படையின் ஹெலிகொப்டர் மூலம்...

வந்திறங்குகிறார் இரத்மலானை விமான நிலையத்தில். அங்கிருந்து நாடாளுமன்றுக்கு...

அதற்கான விமானச் செலவு மட்டும் 8 இலட்சம் ரூபா...

நண்பர்கள் சிலரிடம் கூறுகிறார் அந்தக் கட்டணத்தைச் செலுத்துமாறு...

இப்போது கொழுப்பில். அந்தப் பாதுகாப்பான இல்லத்தில்...

அடுத்து என்ன செய்யப்போகிறார்...?

பொறுத்திருந்து பார்ப்போம்..

**[ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்]**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7